Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් ஜன.12-18, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 494

## பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் உறவுகளில் விரிசல்...?

ஹக்கீமுக்கு எதிரான புதிய சதி!





## ஆசை ஆசையாய் ஒரு காதல்!

# ஆன்மீகம்

## பயபக்தி

ஒரு அரசர் இருந்தார். தம்மைப் பார்க்க வரும் பண்டிதர்களுக்குப் பொன்னும் மணியும் வாரிக் கொடுப்பார். பலரை எதுவும் கொடுக்காமல் விரட்டி விடுவார். ஒரு புலவர் அவரைப் பார்க்கப் போனார். அரண்மனை வழியில், "ஐயா புலவரே! மேல் உத்தரியத்தை எடுத்து இடுப்பில் கட்டும்" என்றார் ஓர் அதிகாரி. அப்படியே செய்தார் புலவர். "ஐயா கைகளை இறுகக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்றார் மற்றோர் அதிகாரி. "ஐயா புலவரே! அடி மேல் அடி வைத்து மெல்லப் போங்கள்!" என்றார் இன்னொரு அதிகாரி. தனக்கு ஏற்பட்டுள்ள வறுமை காரணமாக அதிகாரிகள் சொல்லும் எல்லா நியதிகளையும் ஒழுங்காகக் கடைப்பிடித்து உள்ளே சென்றார் புலவர். ஏதாவது நியதியை மீறினால் மன்னர் அதிருப்தி அடைந்துவிடுவாரோ என்று பயம். இதுதான் பயபக்தி என்பது. நம் ஆரம்பக் கட்டங்களில் எல்லா நியமங்கள். நியதிகளையும் அனுசரித்துக் கொண்டு இப்படித்தான் நாம் கடவுளை நெருங்க வேண்டும்.

தி. குணவர்த்தன, களுவர்ஞ்சிக்குடி.

## நன்மை செய்து நன்றியுடன் வாழ்வோம்



நீ நன்மை செய்தால் யாருக்குச் செய்கிறாய் என்பதைத் தெரிந்து செய். உன் நற்செயல்களுக்கு நன்றி பெறுவாய்!

இறை பற்றுள்ளோர், ஏழைகள், துன்பப்படுபவர்கள், உதவி அற்றவர்களுக்கு நன்மை செய். உனக்கு இறைவனால் கைமாறு கிடைக்கும். அவர்களால் இயலாவிடினும், உனக்கு என்றும் அவர் துணையாய் இருந்து புதுமைகள் செய்வார்.

"என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவரே விண்ணுலகம் செல்வார்கள்."

(லூக் 13:25-27)

ஆகவே எம் ஆண்டவர் விருப்பப்படி நாம் அனைவரும் அயலவருக்கு நன்மை செய்து என்றும் நன்றியுடன் வாழ்வோம், ஆண்டவர் எம்முள் என்றும் நிலைத்திருப்பார்.

செல்வி இராசதுரை, கொழும்பு-04.

## இறையளித்த பொன்னாடை

மகான் அபுல்ஹசன் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்:- ஹசனே! உனது ஆடைகளை அல்லாஹ்வின் அனுக்கிரகத்தால் ஒவ்வொரு வினாடியும் சுத்தமாய் வைத்துக் கொள்வாய் என்று எனக்கு தெய்வீக அறிவிப்புக் கிடைத்தது. எனக்கு என்ன ஆடை அணிவிக்கப்பட்டிருக்கிறது? என வினவினேன். உனக்கு இறைவன், கீழ் படிதல் (இஸ்லம்), இறை நம்பிக்கை (ஈமான்), ஆத்ம ஞானம் எனும் பொன்னாடைகளை அணிவித்திருக்கிறான். எனவே அல்லாஹ்வை அறிந்தவன் (மெய்ஞானி) அவனல்லாத எல்லாவற்றையும் அற்பமாய் காண்பான். இறைவனின் ஏகத்துவத்தை உணர்ந்தவன் அவனுக்கு இணை கற்பிக்கமாட்டான். அவனை நம்பியவன் எதற்கும் அஞ்சான். அவனுக்குக் கீழ்ப்படிந்தவன் அனேகமாய் பாவச் செயல் புரியமாட்டான். ஒரு சமயம் அவ்வாறு புரிய நேரிட்டாலும் உடனே மன்னிப்புத் தேடுவான். மன்னிப்புத் தேடினால் அது அங்கீகரிக்கப்பட்டுவிடும் என்று விடையளிக்கப்பட்டது. அப்பொழுது திருக்குர்ஆனில் 'நபியே' உமது ஆடைகளைச் சுத்தப்படுத்திக் கொள்க! (74:4) என்று கூறப்பட்டிருக்கும் வசனத்தின் கருத்து எனக்குப் புரியலானது. என்று கூறினார். நன்றி "ஆத்ம சோதனை"

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

---

## கவிதைப் போட்டி இல.491

### பரிசுக்குரிய கவிதை

#### நீ யார்....?

உன் இந்தக் களிப்பிற்கு,
எத்தனை உயிர் அழிப்பு?...
எத்தனை ஆத்மாக்களின்
துடிப்பு!
அதனால் வந்த,
இந்தப் பட்டத்திற்கு உண்டோ
மதிப்பு!
நீ சிரிக்கும் பூவோ?... இல்லை
உயிரை அழித்த நெருப்போ?...

சு. சுபா, பெயாவெல்ல.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

#### செல்வி.. ராணி!

அழகுராணிப் போட்டியிலே
அல்லி ராணி
செல்வி என்னும்
நிலை இழந்தால்
செல்லாத தேன் நீ!

செ. ஞானராசா, மடுக்கோவில்.

#### அழகே அஸ்ரா

பல உயிரை
வென்றாய்
முடி சூடிக்கொள்ள
வென்றபோது
சிரித்தாய்
எஞ்சியிருப்பவர்களது
தூக்கத்தைக்
கெடுக்க.

எம்.எச்.எம். றிஸ்வான், திருகோணமலை.



#### சந்தோஷமா?

ஊரார் தடுத்ததையும் மீறி
உலக அழகியாக ஆசைப்பட்டோம்
உயிர் சில பலி கொண்டாலும்
உலக அழகியாக நான்
உங்கள் முன் வந்துட்டேனே!

கிருஸ்ணன் சிவா, மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.494



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.01.2003

கவிதைப் போட்டி இல.494
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### அற்புதம்

இளமையும், எழிலும், ததும்பும்
உன் முகத்தில்
சிரிப்புக்கு ஏதடி பஞ்சம்-தீயாய்
இருக்குமோ உன் நெஞ்சம்
அழகிய கவியே...
உன்னை எழுத இங்கு
பேனாக்களுக்கு போட்டியோ
உன் கண்கள் என்ன-இதயத்தை
துளைக்கும் ஈட்டியோ..!

எஸ். ஜென்சி, தலவாக்கலை.

#### அகிலத்தார் ஆசை

"போராண்டு போனது!
ஓராண்டு ஆனது!
புத்தாண்டே வருக!
புது உறவைத் தருக!
அகிலத்தார் ஆசை! இது
அழகு ராணியின் ஆசை!"

நா. ஜெயபாலன், பிபிலை.

#### ஏமாறமாட்டேன்..!

பெண்ணே..
'தீயால்' என் நெஞ்சம்...
எரிந்து போனாலும்...!
'புயலால்' என் இதயம்...
சரிந்து விழுந்தாலும்...!
'பூகம்பத்தால்' என் வாலிபம்...
புதைந்து போனாலும்...!
உன் 'புன்னகை'யில் மட்டும்
ஏமாந்து போக மாட்டேன்...!!!

எஸ். தமிழாம்பிகை ஜெகன், நானாட்டான்.

#### வெற்றியின் விளைவு

வெற்றிக் களிப்பினிலே
வெண்பற்கள் பளீரிட
உவகையில் திளைக்கிறாள்
உலகஅழகி இவள்
அராஜகத்தின் வெற்றியால்
அழிக்கப்பட்ட அழகிகள்
எத்தனை? எத்தனை?
எம் இனிய உலகிலே!

ப. சைந்தவி, சாவகச்சேரி.

#### உலா வருகிறாள்..

இளமையின் வனப்புக்கு
இறகு பூட்டி!
'அழகுகளி'ன் மந்தாரத்தை
அரங்கத்தில் காட்டி!
ஒரழகுப் பெட்டகமாய்..
நேரிழையாள்-உளப்
பூரிப்புடன்
உலா வருகிறாள்...
அன்றில் நடையில் இன்று!
இரு நூறு உயிர்களைக்
காவுகொடுத்துவிட்டு!!

தாராபுரம் நிலாம், கரம்பை.

#### சா(வே)தனை

காவியத்தில்
காளையர்களை
கண்களால் கொன்று தின்று
கலியுகத்தில்
சி' களோடு போராடி
காக்கப் பட்ட (படும்) அழகு?!

லைலா அக்ஷியா அக்ரம், குருணாகல்.

#### வழிவிடுங்கள்

சித்திரமாய் சிங்காரித்து
சிட்டென சிரித்து எம்
சிந்தனைகளை
சிறையில் அடைக்கும் பெண்களே..!
கொஞ்சம் எங்களை வேறு பக்கம்
சிந்திக்க விடுங்கள்-நாங்கள்
சந்திக்கவேண்டிய சாதனைகள்
சமாதியடையும் முன்!

சுகுமாரன் ரஜனி, பெயாவல்.

#### மனித பசளை

பார் போற்றும்
பூங்கொடியாக
பாரை நீ வலம் வர
பல உயிர்களையல்லவா
பசளை ஆக்கினாய்.

ஏ. ஆர். எம். இக்பால்,
இரத்தினபுரி.

#### வீறாப்பு

உயிர்கள் பலநூற்றை
உறிஞ்சிக் குடித்து
உலக அழிவில் பங்கேற்ற
களைப்பு தீரு முன்னே
உலக அழகிப் போட்டியில்
பெற்றுக்கொண்ட
வெற்றிக் களிப்பின்
வீறாப்பிதுவோ?

நிந்தநிலா, எப். மொஹமட் பாயிஸ்.

## உங்கள் பக்கம்

### இருள் சூழ்ந்து கிடக்கும் எங்கள் கிராமம்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முன்னம்போடிவெட்டை என்பதே எமது கிராமம். 120 குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் எமது கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. எனது கிராமத்தைச் சுற்றிவர அமைந்துள்ள பட்டித்திடல், பாலத்தோப்பூர், கூர்க்கண்டம், ஜின்னாநகர் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

எமது கிராமம் இவ் விடயத்தில் பாரபட்சம் காட்டி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் எமது கிராமத்திற்கு வரும் அரசியல்வாதிகள் எங்களுக்கு மின்சாரம் பெற்றுத் தருவதாகவும் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்வதாகவும் வாக்குறுதி தந்துவிட்டு, பின்னர் எந்தப் பணிகளிலும் அக்கறை காட்டுவதில்லை. இந்த நிலையில் நாங்கள் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளோம்.

நவீன இன்டர்நெட் யுகத்திலே எமது கிராம மாணவர்கள் தொலைக்காட்சியையேனும் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர்.

எமது கிராமத்தையும் மனிதாபிமானத்துடன் மதித்து எமது கிராமத்திற்கு மின்சாரம் வழங்க சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யுமாறு கிராம மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**வேதனையுடன்,**
**மாணிக்கன் இளங்கோ (ஆசிரியர்),**
**முன்னம்போடி வெட்டை.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


## வாசக[ர்] சாலை

#### என் கடன் தீருமா?...

தரிசாய் இருந்த என்னில்
செழிப்பாய் பயிர் வளர..
வழி செய்த முரசே!..
இரவின் விடியலை-விட
வியாழன் விடியலே எனக்கு
இன்பமூட்டும்!... ஏனெனில்
என் விடிவும் உன்
முரசின் மூச்சிலே!
உன்னால் வளர்ந்த
விதை நான்!...
என்னைச் செழிக்க வைத்த
உனக்கு என் வாயால்,
நன்றி சொன்னால்
தீருமோ என் கடன்?...

சு. சுபா, பெயாவெல்.

**மதிப்புக்குரிய தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்,**

முத்தான முரசே! உன் மூச்சு எங்கள் மூச்சு. உன் பக்கங்கள் சிறிதாக இருந்தாலும் முரசின் மூச்சு என்றும் நிற்காது. உன் மூச்சினால் மலர்கின்ற மலர்கள் எப்போதும் வாடாது. முத்தான முரசு, எங்களின் முரசு. முரசு என்றும் அழியாது.

எம்.ஏ.எம். அன்சார்,
அக்குரணை.



#### பொழிந்திடு...

தினமுரசே! உந்தனை நித்தமும் சுவாசித்துக் கொண்டிருக்கும் இதய பூர்வமான நேய நெஞ்சங்களில் நானும் ஒரு அபிமானி. அந்தளவுக்கு உந்தனது படைப்புக்கள் அமைந்தமையால்தானே!

முரசே! வியாழன் தோறும் வழி மேல் விழி வைத்து உந்தனது வருகையினை எதிர்பார்த்தவாறு காத்திருப்பேன். நீயோ! புதுப்பொலியுடன் வருவாய். பல்வேறுபட்ட கருத்துக்கள் நிறைந்த தகவல்களை சுமந்து வரும் வல்லமை கொண்டவர்களில் முதலிடத்தைப் பெறும் தகுதி உனக்கு மட்டுமே உண்டு.

உந்தனது பொழிவுகளான தொடர்கதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், சிந்தியா, பாப்பாமுரசு, தேன்கிண்ணம் இன்னும் பல்வேறுபட்ட ஆக்கங்களும் அருமை.

முரசே! நீ இன்னும் பல புதிய படைப்புக்களை உன்னில் சேர்த்துக் கொள்ளலாமே. அபிமான வாசகர்களுக்காக "குறுக்கெழுத்துப் போட்டி", "புதிர்களையும்" மீண்டும் சேர்த்துக் கொள்ளலாமே! உன் சேவை இத் தரணியில் தொடர என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

ஸல்மா ஸாஜஹான், பிறைந்துரைச்சேனை.

**என் இனிய தினமுரசு வாரமலரே!**

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சுவையிலும் சுவை. அதிலும் தேன் கிண்ணம் சுப்பர். ஆனால் ஒரு பணிவான குறை. ஆரம்பத்தில் குறுக்கெழுத்துப் போட்டி ஒரு அம்சமாகும். ஆனால் இடையில் நிறுத்தப்பட்டது. என்னை மிகவும் கவர்ந்தது இக் குறுக்கெழுத்துப் போட்டியாகும். மீண்டும் இப் போட்டி இடம்பெற வேண்டுமென மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மென்மேலும் தினமுரசின் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

ச. சுபத்ரா, பத்தனை.

# பொதுக் கூட்டங்களில் நாம் கூறுவதை வைத்து புலிகள் அலட்டிக்கொள்ளத் தேவை இல்லை! -ஹக்கீம்-

"நாம் பொதுக் கூட்டங்களில் பேசும்போது சில விடயங்களைக் கூறவேண்டியிருக்கிறது. அதன் நோக்கம் மக்களை ஆவேசப்படுத்துவதோ எதிர்த் தரப்பை ஆத்திரப்படுத்துவதோ அல்ல.

தங்களுடைய உரிமைகள் சம்பந்தமான விடயத்தில் தங்களின் தலைமை எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யாமல் போராடும் என்ற நம்பிக்கையை நமது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக நாம் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்காமல் எந்த விடயத்தையும் நாம் வெற்றிகரமாகச் சாதிக்க முடியாது. அதை ஏற்படுத்துவதற்காக நாங்கள் ஆற்றும் பணியை சம்பந்தப்பட்டோர் அந்தப் பின்னணியில் இருந்துதான் எடைபோட வேண்டும் எனவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

தாய்லாந்தில் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருக்கும் ஹக்கீம் செய்தித்தாள் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

எமது மக்களைப் பொறுத்தவரை அவர்களின் உரிமைப் பிரச்சனை சம்பந்தமாக தலைமை ஒரு கடினமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தே காணப்படுகின்றது. நாங்கள் கருத்துக்களை கடினப்போக்குடன் முன்வைக்கின்ற போதிலும் அதற்கான அணுகுமுறைகளிலே நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்வோம். இதனைப் புலிகளின் தலைமை சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியிருக்கிறார். ●

# அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் தனியான சிங்களப் பிரதிநிதிகள்

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் வடக்குக் கிழக்கு வாழ் சிங்கள மக்களின் உரிமைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக அப் பகுதி மக்களின் சிங்களப் பிரதிநிதிகள் குழுவொன்றும் கலந்துகொள்ளலாம் எனத் தெரியவருகிறது.

இவ்வாறான பிரதிநிதிகள் சிலரைப் பேச்சுவார்த்தையில் பங்குபெறச் செய்ய விருப்பம் கொண்டிருக்கும் அரசாங்கம், இது தொடர்பான ஆலோசனையைத் தற்போதும் தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் இறுதி நாளன்று புலிகளிடம் சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் குழுவொன்றையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் செல்ல அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது. ●

# கல்வி மேம்பாட்டுச் செயலமர்வு

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் முதலாவது செயலமர்வு செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் ஆரம்பமானது. பிரதேசத்தில் தொடர்ச்சியாக செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. முதல் நாள் நிகழ்வில் பிரதம பேச்சாளராக புலிகளின் கல்வி மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் இளங்குமரன் கலந்து கொண்டார். ■

# பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள்! உறவுகளில் விரிசல்?

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான அறிக்கைப் போர்கள் என்பவற்றை அடுத்து அரசு-புலி உறவில் ஓரளவு விரிசல் ஏற்பட்டுள்ளதை அரசாங்க வட்டாரங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

இதனை அடுத்துப் புலிகள் சில விடயங்களில் கடும் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்று கருதிய பிரதமர், ஊடகங்கள் மூலம் பொரிடுவதைத் தவிர்க்குமாறு படையினருக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த மூன்று சுற்றுப் பேச்சுக்களின் போதும் கொழும்புக் கூடாகச் சாதாரணமாகப் போக்குவரத்தை மேற்கொண்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் இம்முறை பாதுகாப்பு உத்தரவாதம் கோரியதாகத் தெரியவருகிறது.

நெருக்கடிகள் தோன்றிய போதும் சமாதான முயற்சிகள் குழம்பமாட்டாது என அரசாங்கப் பிரதிநிதிகள் அடிக்கடி கூறிவருகின்றனர்.

தற்போதைய தாய்லாந்துப் பேச்சுக்களின் போது சர்ச்சைக்குரிய விடயங்களைப் பற்றிப் பேசுவது தவிர்க்கப்பட்டு வருகின்றமையும் விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

# சூடுபட்டு மரணம்

பகவந்தலாவ மொறகஹா என்ற இடத்தில் சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த சிலரைப் பிடிக்கப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் தோட்டத் தொழிலாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இவ்வாறு கொல்லப்பட்டவர் பகவந்தலாவ கரகஸ்போல்ட் தோட்டத்தைச் சேர்ந்த இராமையா யோகன் என்பவராவர். பொலிஸார் மாணிக்கக் கல் அகழ்வோர் தப்பியோடும் போது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் கொல்லப்பட்டுள்ளார். ■

# மகேஸ்வரனுக்கு எதிராக பிரதமருக்குக் கடிதம்

ஐ.தே.மு. அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினராக இருந்து கொண்டு இந்துகலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரன் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறும் விதத்தில் அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டி இருக்கும் சிங்கள மகா சபை,இது ஐ.தே.க.வுக்கு வாக்களித்த சிங்கள மக்களை அவமானப்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கும் சிங்கள மகா சபையின் தலைவர் நாத் அமரக்கோன், அமைச்சர் மகேஸ்வரன், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு எதிராக இனரீதியிலான உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் கருத்து வெளியிட்டு வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். ■

# மாற்றுக் கட்சிகள், படையினருடன் இணைந்து செயற்பட வேண்டாம் புலிகள் கோரிக்கை!

மாற்றுக் கருத்துக் கொண்டோருக்கும் புலிகள் அல்லாத வேறு அரசியல் கட்சிகளுக்கும் வடக்கு-கிழக்கில் சகல பிரதேசங்களிலும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி அளிக்கப்படும் என்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் பல தடவைகள் வாக்குறுதி அளித்திருக்கும் நிலையிலும் கூட மாற்று இயக்கங்களுடனும் இராணுவத்துடனும் இணைந்து செயற்படும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் உடன் அதிலிருந்து விலக வேண்டும் என்று புலிகள் மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். மட்டு, அம்பாறை மாவட்டப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்டுப் பிரிவினரால் விநியோகிக்கப்பட்டிருக்கும் இத்துண்டுப் பிரசுரங்களில் மாற்றுக் கருத்துள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விரும்பினால் புலிகளுடன் இணைந்து கொள்ளலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினர்கள், இராணுவ புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் தமிழ் இளைஞர்கள் எனப் பலரும் தொடர்ச்சியாகக் கடத்திச் செல்லப்படும் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# தொழில் திருத்தச் சட்டமூலங்களுக்கு எதிராக வேலை நிறுத்த அச்சுறுத்தல்

அரசாங்கம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தொழிற்துறை சார் திருத்தச் சட்டமூலங்களை வாபஸ் பெறுமாறு கோரி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் ஏற்பாடு செய்ய போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ எச்சரித்திருக்கிறார்.

சுமார் 30 வருட காலம் பழைமையான இலங்கையின் தொழிலாளர் சட்டங்களில் 3 பிரதான திருத்தங்களைத் தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை எதிர்த்துப் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் கொழும்பில் அதிகளவு மக்கள் கூடும் இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஜே.வி.பி. உள்ளிட்ட அமைப்புக்கள் சில முயற்சி மேற்கொண்டிருந்தன.

இந்தச் சட்டமூலங்களால் தொழிலாளர் நலன் மோசமாகப் பாதிக்கப்படுகிறது என எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஆனால் இது தொழிலாளருக்கு நன்மை பயக்கும் சட்டத்திருத்தம் என அரசாங்கம் கூறி வருகிறது.

புத்தாண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு உள்ளும் புறமும் போராட்டங்களுக்கு மத்தியில் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. ■

# கனேடிய வானொலி நிலையம் தாக்குதல்

கனடாவின் ரொறரன்ரோ நகரில் செயற்பட்டு வந்த கனேடிய தமிழ் வானொலி ஒலிபரப்பு நிலையம் கடந்த 3ம் திகதி புலிகள் ஆதரவு அமைப்பான உலகத் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

கனடாவில் பிரபலமான கந்தசாமி கோயிலின் நிர்வாகத்தினரும் புலி ஆதரவு அமைப்புக்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ■

# புதுவை இரத்தினதுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவிஸில் துண்டுப்பிரசுரம்

சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட புலிகளின் ஆஸ்தான கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வருகையை எதிர்த்து அந்நாடுகளில் இயங்கும் புலி ஆதரவு அமைப்புகள் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

"நக்கிப் பிழைக்கும் நாடு கெட்டவர்களே நாடு திரும்பினால் காறியே துப்புவோம்."

"ஏகே, தூக்காமல் யூகே. போனவர்கள் விமானத்தில் ஏறிப்பறந்தவர் வீரமில்லாதவர் நாயிலும் கீழவர் துப்புக்கெட்டவர் அகதி லேபலில் தூசி தட்டியே காசு உழைப்பவர்."

இவை புதுவை இரத்தினதுரையினால் புலம் பெயர்ந்த தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் சில காலங்களுக்கு முன்னர் பாடப்பட்ட கவிதை வரிகள்.

தமது துண்டுப் பிரசுரங்களில் இவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கும் சுவிஸ்வாழ் நலன்புரிச் சங்கங்கள் புதுவை இரத்தினதுரையைக் கடுமையாகச் சாடியுள்ளன.

கருணா, தமிழ்ச்செல்வன் போன்றோரது விஜயங்களை வரவேற்றிருக்கும் இந்த அமைப்புக்கள் "புத்தூரில் இருந்து புறணி பாடி புலிவேடம் பூண்ட கிழநரி ஒன்று புறப்பட்டு வந்துள்ளது புலத்திற்கு" எனப் புதுவை இரத்தினதுரையின் வரவை விமர்சித்துள்ளனர்.

"நம்மை நாய் என்று கவி புனைந்தாயே உன்னைப் பேய் என்று ஓட்டிவிடுகிறோம் போ" என முடிவடைகிறது ஒரு துண்டுப் பிரசுரம். ■

# குடும்பஸ்தர் கழுத்து வெட்டிக் கொலை மக்கள் ஆர்ப்பாட்டம்

வாழைச்சேனையைச் சேர்ந்த அப்துல் வகாப் முகமது ஹூசைன் என்ற 63 வயது ஆட்டோச் சாரதி கடந்த 4ம் திகதி சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இவரது ஆட்டோவை வாடகைக்கு அமர்த்திய சிலர் கல்மடு பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளனர். மறுநாள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கல்மடுவில் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக வாழைச்சேனை, ஓட்டமாவடி, காவத்தமுனை போன்ற முஸ்லிம் பகுதிகளில் தொடர்ச்சியாக இவ்வாறான மர்மக் கொலைகள் இடம்பெற்று வருகின்றமை மக்களைப் பீதியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை பெருமளவிலான கல்குடாப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ■

# புலிகளால் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு மாவட்ட 233வது படையணியுடன் இணைந்து செயற்பட்டு வந்த புலேந்திரராஜா என்பவர் கடந்த 3ம் திகதி பிற்பகல் 5.30 மணியளவில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இதேவேளை, ஏறாவூர் ஐயங்கேணி கிராமத்தைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை லிங்கேஸ்வரன் (வயது 19) என்பவரைக் கடந்த 28ம் திகதி முதல் காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

# முரசம்

## கிழக்கின் துயரம்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

கிழக்கு மாகாணத்தில் அடுத்தடுத்து நடைபெற்று வரும் சம்பவங்கள் நிரந்தர சமாதானத்தை நேசிக்கும் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளன.

ஆட்கடத்தல், படுகொலைகள், தமிழ் முஸ்லீம் மக்களிடையே பகைமையைத் தூண்டும் முயற்சிகள் முழு வேகத்தில் அங்கு நடைபெறுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் மூலம் தமது அரசியல் அதிகாரத்தை நிறுவ முயலும் சக்திகளே திரைமறைவில் இயங்குகின்றன. உதாரணமாக கடந்த வாரம் வாழைச்சேனையை அண்டிய கிண்ணையடி என்ற கிராமத்தில் மாத்திரம் முப்பத்தைந்து பேர்வரை (வயது 12-21) வரை கட்டாயப் பயிற்சிக்காகக் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி யாரிடமும் முறையிட முடியாத அளவுக்கு அப் பகுதியில் பீதி நிலவுகிறது. இயல்பு சூழ்நிலை, மனிதாபிமானப் பணி, புரிந்துணர்வு என்பன இங்கு அலங்காரமான அழகான சொற்களாக இருக்கின்றனவே தவிர நடைமுறையில் எதிர்மறையான செயற்பாடுகளே காணப்படுகின்றன.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யு.என்.எச்.சீ.ஆர், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற மனிதாபிமானப் பணிக்களுக்கான நிறுவனங்கள், ஆன்மீக ஸ்தாபனங்க்ள், பெண் உரிமை அமைப்புக்கள் இருந்தும் இந்தப் பாரிய ஜனநாயக விரோத மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவோ, அல்லது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவோ முடியாத துரதிஸ்ட நிலை காணப்படுகிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமை ஆணைக்குழு, யுனிசெவ் என்பன சில விடயங்களை சர்வதேச உள்ளூர் சமூகங்களின் முன் பிரஸ்தாபித்திருந்தாலும் நடைமுறையில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எதையும் செய்ய முடியவில்லை.

வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தத்திற்கு அடுத்து முக்கியமானது சமூகங்களின் ஜனநாயக ரீதியான எதுவித அச்சுறுத்தலுமற்ற இருப்பு.

அந்த இருப்பை உறுதிப்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பது உடனடி முக்கியத்துவம் வாய்ந்தது.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது போல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் இங்குள்ள வேறுபட்ட அரசியல் கட்சிகள், வேறுபட்ட கருத்துக்கள் கொண்டவர்கள், வேறுபட்ட சமூகங்களின் இருப்பு இவற்றை இல்லாமல் செய்யும் அல்லது இவற்றின் மீது மேலாதிக்கம் செய்யும் போக்கு இரும்புப் பிடியாக தமிழ்ச் சமூகத்தின் மீது இறுகிக் கொண்டிருக்கிறது.

உண்மையில் 1930 களின் நடுப் பகுதியில் இருந்து 1940 களின் நடுப் பகுதி வரை ஜேர்மனியில் நிலவிய சூழ்நிலை அந்தளவிற்கு இல்லாவிட்டாலும் இங்கு தோற்றம் பெற்றுவிடுமோ என்ற நியாயமான அச்சங்கள் எழவே செய்கின்றன.

எவ்வளவுக்கு எவ்வளவு சர்வதேச சமூகத்தின் பிரசன்னம் வடக்கு கிழக்கில் ஏற்படுகிறதோ அந்தளவிற்குத்தான் ஜனநாயகம், மனித உரிமை என்பவற்றை வடக்கு கிழக்கில் உறுதிப்படுத்த முடியும்.

கடந்த கால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றின் பேரில்தான் தமிழ் மக்கள் இன சங்காரம் செய்யப்பட்டார்கள். தற்போது மேலதிகமாக ஏகபிரதிநிதித்துவம் என்ற சொற்பிரயோகமும் சேர்ந்துவிட்டது.

வேறு கட்சிகள். வேறு சமூகங்கள், வேறு நாட்டவர்கள் எனப் பல தரத்தாருக்கும் எதிராக விரோதம் பாராட்டப்படுகிறது.

புலி மையவாத சிந்தனையும் தர்க்கமும் மேலோங்கிக் காணப்படுகிறது. அதாவது "புலிகள் எது செய்தாலும் சரி" என்பதை எடுகோளாகக் கொண்டு "அதனுடன் வேறுபடுபவை எல்லாம் பிழையானவை, பாரதூரமானவை" என்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. தமிழ் ஊடகங்கள் அத்தனையும் ஒரு சில விதி விலக்குகளைத் தவிர இவ்வாறுதான் நடந்து கொள்கின்றன. "தேனி டொட் கொம்" போன்ற இணையத் தளங்கள், உயிர் நிழல், எக்ஸில் போன்ற புலம் பெயர்ந்தவர்களின் சில சஞ்சிகைகள் யாழ் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தின் அறிக்கைகள், கொரில்லா போன்ற சில புகலிட நாவல்கள் எமது சமூகத்தைப் பீடித்தாட்டும் நோயின் குணங்குறிகளை ஓரளவுக்கு வெளிக்கொண்டு வர முனைகின்றன. எமது சமூகத்தில் நிலவும் ஜனநாயக மறுப்பு, மனித உரிமை பற்றிப் பேசும் குழுக்களும், தனி மனித விழிப்புணர்ச்சியும் சில இடங்களில் அதிகரித்து வருகின்றன. இது உண்மையில் ஒரு நல்ல சகுனமே.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# 2001 செப்டெம்பர் 11 இற்குப் பின்

**2001** செப்டெம்பர் 11இற்குப் பின்னான உலகச் சூழ் நிலையில் இலங்கையில் இன்னுமொரு யுத்தம் சாத்தியமா என்ற நியாயமான கேள்வி எழவே செய்கிறது.

1990 களில் ஐரோப்பாவினாலும் வட அமெரிக்காவினாலும் முக்கியமாகக் கருதப்பட்டனவாக சேர்பியா, பொஸ்னியா, கொசோவா பிரச்சினைகளைக் குறிப்பிடலாம்.

மற்றும் எண்ணெய் நலன்களுடன் சார்ந்த மத்திய கிழக்கு மேற்காசியப் பிரச்சினைகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இலங்கைப் பிரச்சினை சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் அற்றுப் போனது போன்ற ஒரு தோற்றப்பாடு காணப்பட்டது.

ஆனால் பாலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தம், தென்னாபிரிக்காவின் சுதந்திரம், வட அயர்லாந்துப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஏற்பட்டது என்பன இந்தத் தசாப்தத்தின் முக்கிய அம்சங்களாக இருந்தன. கிழக்குத் திமோரில் ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் சர்வசன வாக்கெடுப்பு இந்தத் தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் நடைபெற்றது. மக்கள் சுதந்திர தேசத்திற்காக வாக்களித்தார்கள். இதேபோல் கனடாவின் கியூபெக் மாநிலத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஐக்கிய கனடாவினுள் சம உரிமையுடன் வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்து கியூபெக் மக்கள் வாக்களித்திருந்தனர்.

ஆனால் பாலஸ்தீனப் பிரச்சினை முன்னரை விடச் சிக்கலடைந்திருப்பதையும் வட அயர்லாந்தின் அதிகாரங்கள் பிரிட்டிஷ் அதிகார மையத்திற்கு மாறியிருப்பதையும் பிந்திய நிலைவரங்களாகக் காண்கிறோம். மத்திய கிழக்கிலும் மேற்காசியாவிலும் போர் மேகங்கள் சூழ்ந்து நெருப்பு மழை பெய்வதற்கான நிலைமைகள் உருவாகியுள்ளன.

அல்ஹைடா, புலிகள், குர்திஷ்தான் இயக்கங்கள் உட்பட 11 இயக்கங்கள் அமெரிக்காவினால் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா எனப் புலிகள் மீதான தடை வட அமெரிக்க- ஐரோப்பிய மயமாகியது.

தற்போது செப்டெம்பர் 11க்கு பிந்திய சூழ்நிலையில், கொழும்பிலும் தென்னிந்தியாவிலும் புலிகள் மேற்கொண்டது போன்ற தாக்குதல்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதா என்பது சந்தேகமானது.

அடிப்படையில் இந்திய, ஐரோப்பிய புகலிட அனுமதியைச் சார்ந்திருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை இச் சூழ்நிலையில் கடுமையான நெருக்கடிகளை முகம் கொடுத்து எவ்வளவு தூரம் தீர்வை நோக்கி முன்னேற முடியும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

புலிகளின் தாக்குதல்கள் அல்ஹைடாவின் அல்லது உலகின் வேறெந்த வன்முறை இயக்கங்களின் தாக்குதல்களை விட நேர்த்தியும் தொழில்நுட்ப ஆற்றலும் நிறைந்தவை என்பது ஐரோப்பாவிற்கோ வட அமெரிக்காவிற்கோ தெரியாத விடயங்களல்ல. கடற்புலிகளின் தளபதி சூசையும் தங்களது தாக்குதல் நடவடிக்கைகளைத் தழுவியே அல்ஹைடாவும் தாக்குதல் நடத்தியதாகச் சில சர்வதேச ஊடகங்களுக்குக் குறிப்பிட்டுள்ளார். உலகின் எந்த மூலையிலும் தாக்குதல் நடத்த அவர்களுக்குள்ள ஆற்றல் பற்றியும் யாரும் சந்தேகப்பட முடியாது.

எனவே அமெரிக்க ஐரோப்பிய அரசுகளுக்கு இலங்கை விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் 2001 செப்டம்பர் 11இற்குப் பிறகு எழுந்துள்ளது. சேர்பியா, பொஸ்னியா, கொசோவா போன்ற பிரச்சினைகளுடன் மாத்திரம் நின்றுவிட முடியாது.

இருந்த இடத்தில் இருந்து செயற்படும், யுத்த அவசியம் வரும் போது மாத்திரம் பிரதேசங்களை, நாடுகளைப் பயன்படுத்துவது என்று இடையிட்டு இருந்த நிலை அடியோடு மாறிவிட்டது.

இந்தோனேசிய பாலித்தீவு வரை நடைபெற்ற பயங்கரக் குண்டு வெடிப்புக்களால் இம்முறை உலகில் நத்தாரையும், புதுவருடப் பிறப்பையும் அவதானமாகக் கொண்டாட வேண்டிய நிலையிலேயே பல நாடுகள் இருந்தன.

உலகளாவிய இந்தப் பதற்ற சூழ்நிலையில் இலங்கையில் தற்கொலைக் குண்டுதாரிகளைப் பிரதான பாத்திரமாகக் கொண்ட தாக்குதல்களை எதிர்காலத்தில் நடத்த முடியுமா என்பது சந்தேகமானதே.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சர்வதேச அரங்கிற்குச் சென்று மனிதாபிமானப் பணிகளுக்கும் - சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கும் வாக்குறுதி அளித்து விட்டு பின்வாங்குவது சர்வதேச ரீதியில் மிகுந்த விசனத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தலாம். இதன் விளைவு சர்வதேச ரீதியில் ஈழத் தமிழர்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தாது.

தற்போது தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதால் வடக்கு கிழக்கில் நடைபெறும் ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்களும் முன்னெப்போதையும் விடச் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசும், அது ஐ.தே.மு. அரசாங்கமோ அல்லது ஜனாதிபதி செயலகமோ கூட தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அதனை மேலும் முன்னேற்றகரமாக்குவதற்கு, விரிவாக்குவதற்குப் பங்களிக்க முடியுமே தவிர பின்வாங்க முடியாது.

கணிசமான அளவு வெளிநாட்டுக் கடன் உதவியுடனும், உல்லாசப் பிரயாணத்துறை, தேயிலை ஏற்றுமதி வருமானங்களைக் கொண்டு காலத்தையோட்டும் நாடு என்ற வகையில் சர்வதேச அபிப்பிராயங்களுக்கு மாறான தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாது. அவ்வாறு எடுப்பது நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்திற்குக் கொண்டு சென்றுவிடும்.

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் சம்பவங்களின் பின் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாற்று வழிகளே இருந்தன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி என்பது 0க்குக் கீழே சென்றிருந்தது.

> இந்தப் பிரசுரங்கள் நிகழப் போகும் பயங்கரங்களுக்கான முன்னறிவித்தலாகும். "பழி ஓரிடம் பாவம் ஓரிடம்" என்பது போன்ற இந்த அவதூறின் உண்மைத் தன்மை மட்டக்களப்பில் செயற்படும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கோ, மனித உரிமை அமைப்புக்களுக்கோ தெரியாத விடயங்கள் அல்ல.

களைத்துப் போன மக்களும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மேல்தட்டு அணியினரும் சமாதானத்தை அவாவி நின்றனர்.

அதுவே ஐ.தே.மு.வின் வெற்றியாகவும் அமைந்தது.

ஆனால் சமாதானம் ஏற்பட்டால் நிம்மதி என்று நினைத்த தென்பகுதி மக்களுக்கு வானத்தில் வலம் வரும் விலைவாசிகள் கிட்ட நெருங்குவதாக இல்லை.

வடக்கு கிழக்கில் இவை மேலதிக வரிச் சுமையுடன் மக்களை வாட்டுகின்றன. ஜனநாயகம், மனித உரிமை பற்றிய குரல்கள் தெளிவாக எழுகின்றன. இவை இலங்கையின் தென் பகுதிப் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்ட பிரத்தியேகப் பிரச்சினைகளாகும்.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியானது. யுத்தத்திற்குத் திரும்பவும் யார் அறைகூவல் விடுக்கிறார்களோ அவர்கள் நரகத்திற்கே அழைக்கிறார்கள் என்றே கருத வேண்டும்.

### துண்டுப் பிரசுரங்கள்

4வது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த இயன் மாட்டின் அவர்களும் பங்கு பற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் முதன்மை பெறுவதால் மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் எவ்வளவு தூரம் கருத்திலே எடுக்கப்படும் என்பதில் ஐயம் எழுந்துள்ளது.

தாய்லாந்து றோஸ்கார்டினில் நடைபெற்ற 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் மாற்றுக் கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்கிறோம் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் நடைமுறை நிலைமைகள் எதிராகத்தான் காணப்படுகின்றன. கிழக்கில் மாற்று அரசியல் கட்சிகளில் உள்ளோர் வெளியேறிச் சொந்த வாழ்க்கைக்குத் திரும்பிவிடுமாறு கோரி, புலிகளின் மட்டு- அம்பாறை அரசியல் துறையினால் துண்டுப் பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகிரங்கக் கோரிக்கை மாற்று அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கு விடுத்த அச்சுறுத்தலென்றே கருத வேண்டியிருக்கிறது. சர்வதேச அரங்கில் ஒன்றும், உள்ளூரில் ஒன்றும் கூறும் முரண்நிலை காணப்படுகிறது.

இதேபோல் மாற்று அரசியல் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் கடத்தப்பட்டது, கொல்லப்பட்டது போன்ற சம்பவங்களில் சமாதான முயற்சிகளைத் திசை திருப்ப முனையும் வேறு சத்திகள் சம்பந்தப்பட்டிருப்பதாகப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் பிரிவின் இன்னொரு பிரசுரம் தெரிவிக்கிறது.

இந்தப் பிரசுரங்கள் நிகழப் போகும் பயங்கரங்களுக்கான முன்னறிவித்தலாகும். "பழி ஓரிடம் பாவம் ஓரிடம்" என்பது போன்ற இந்த அவதூறின் உண்மைத் தன்மை மட்டக்களப்பில் செயற்படும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கோ, மனித உரிமை அமைப்புக்களுக்கோ தெரியாத விடயங்கள் அல்ல.

வெல்லாவெளிப் பிரதேச சபையின் தவிசாளரை யார் படுகொலை செய்தார்கள் என்பதை நீதி விசாரணைகளும் சாட்சியங்களும் தெளிவுபடுத்தியுள்ளன.

எனவே முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சிகளே இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்களின் அபிலாசை என்பது ஜனநாயகம் மனித உரிமை என்பவற்றையும் உள்ளடக்கியதே.

எனவே சமாதான முயற்சிகளில் ஈடுபடும், அதற்குத் துணையாக நிற்கும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசும் இவற்றை உறுதிப்படுத்தத் தீர்மானகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமகால உலகப்போக்கிற்கு ஏற்ப, முன்னேறிய மனித குலத்தின் அபிலாசைகளுக்கெதிரான நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கில் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

# முஸ்லிம்களின் சுயாதீனப் பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்பட்ட நிலையில் நான்காவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை

எம். பீ. எம். பர்ஸான்

### உற்சாகமூட்டிய நீதிமன்றத் தீர்ப்பு

**ஸ்ரீ**லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் குழுவிற்கு உற்சாகம் அளிக்கக் கூடிய நீதிமன்றத் தீர்ப்பொன்று இவ் வாரம் கிடைத்தது.

ஹக்கீம் குழுவின் செயலாளரான ஹசன் அலி என்பவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு ஒன்றை ஆராய்ந்த நீதிபதிகள், அதாவுல்லா தலைமையிலான குழுவினர் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சிப் பெயரில் எவ்வித பதவிகளையும் வகிப்பதற்குத் தடை விதித்ததோடு ரவூப் ஹக்கீமினால் நியமிக்கப்பட்ட செயலாளரான ஹசன் அலியைத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு அனுமதியும் வழங்கியுள்ளனர். இதன்படி அதாவுல்லா இனிமேல் முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் எனக் கூறிக் கொள்ள முடியாது. சுபைர்தீன் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அல்ல. இக் கட்சியின் செயலாளர் என அறிக்கை விடடாக்டர் ஹப்ரத்துக்கு முடியாது.

முஸ்லிம் காங்கிரஸின் பெயர், தலைமைத்துவ அதிகாரம் அனைத்தும் ரவூப் ஹக்கீமின் கைகளுக்கு பூரணமாகக் கிடைக்கும் இந் நீதிமன்றத் தீர்ப்பு, யாப்பு ரீதியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் சட்டபூர்வமாக உறுதி செய்கிறது.

முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட நெருக்கடியைக் கட்சியின் யாப்பு ரீதியாகவோ பொதுவான சட்டங்களை மையமாக வைத்தோ அணுக முடியாது என்பதை இரண்டு தரப்பினருமே புரிந்து கொண்டிருப்பார்கள். இங்கே தலைமைத்துவப் போட்டி தீவிரமாக நிலவினாலும் கூட, பிரதேச ரீதியிலான பிரச்சனைகளும், உண்மையிலேயே கிழக்கில் முஸ்லிம்களின் இருப்புத் தொடர்பான சில சிக்கல்களும் மேலோங்கி நிற்பதை மறுதலிக்க முடியாது. ஆதலால் கொழும்பிலுள்ள நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புப் புறக்கணிக்க முடியாத ஒன்றாக இருக்கின்ற போதிலும் அது தார்மீக ரீதியில் ரவூப் ஹக்கீமுக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்தின் மீதான கடப்பாட்டை மேலும் ஒரு படி உயர்த்துகிறது என்றே கூற வேண்டும்.

இந்த நீதிமன்றத் தீர்ப்பு நேரடிப் பார்வையில் ரவூப் ஹக்கீம் தரப்பினர்களுக்குத் தமது தலைமைத்துவ அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதில் ஒரு முக்கிய மைல் கல் போல் தென்பட்டாலும் கூட, பிரிந்து சென்ற இரண்டு தரப்பினரும் ஒன்று சேர்ந்து மீண்டும் ஒரே முஸ்லிம் காங்கிரஸாகச் செயற்படலாம் என்று இருந்த கடைசிக் கட்ட நம்பிக்கையையும் இல்லாமல் ஆக்கிவிட்டது. இனிமேல் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்தாலும் அதாவுல்லா குழுவினரின் அடுத்த கட்ட அரசியல் பிரவேசம் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி, தனிக் கட்சி தொடங்குவதாகத்தான் இருக்கும். அனேகமாக அடுத்தடுத்த வழக்குகள் கட்சிப் பெயருக்காகவும் சின்னத்துக்காகவும் கூட நீதிமன்றத்தில் தொடரப்படலாம். எது எப்படி இருந்தாலும் ஏற்கனவே கூறியது போல் முஸ்லிம் காங்கிரஸ். உடைந்துவிட்டதுதான்.

### அரசியல் உத்தி

நான்காவது கட்ட சமாதானப் பேச்சுக்களுக்காக தாய்லாந்து சென்றிருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தன்னுடன் முஸ்லிம் புத்தி ஜீவிகள் சிலரையும் இம்முறை அழைத்துச் சென்றிருக்கிறார். முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகள் குறித்த அடிப்படை விடயங்களில் ரவூப் ஹக்கீம் போதிய கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்களைச் சமாளிக்கும் புதிய உத்தியாக ஹக்கீமின் இந் நடவடிக்கை அமைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்களும் ரவூப் ஹக்கீமின் இக் குழுவில் இடம்பெற்றிருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களின் போது முஸ்லிம் சமூகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவுஜீவிகளின் ஆலோசனை பெறப்படுவது வரவேற்கத் தக்க விடயம்தான். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் சிலரைத் தாய்லாந்துக்கு அழைத்துச் சென்றிருப்பது ஒரு அரசியல் நடவடிக்கையே தவிர வேறில்லை. இம்முறை பெரும்பாலும் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதனோடிணைந்த சர்ச்சைகள் குறித்தே சமாதானப் பேச்சுக்களின் போது அதிக கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் முஸ்லிம் கல்விமான்கள் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

### ஹக்கீமுக்கு எதிரான புதிய சதி

இதற்கிடையில் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிய முஸ்லிம் பாரளுமன்ற உறுப்பினர்கள் குழு என்ற அமைப்பு ரவூப் ஹக்கீம் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பாகப் பங்குபற்ற அருகதை அற்றவர் எனக் குறிப்பிட்டதோடு முஸ்லிம் எம்.பி.கள் சிபார்சு செய்யும் பிரதிநிதிகளையே அனுப்ப வேண்டும் எனக் கேட்டிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுறும் சர்ச்சை ஆரம்பித்த நாட்களில், சில மாதங்களுக்கு முன்னதாக முஸ்லிம் எம்.பி.கள் பாராளுமன்றத்தில் கூடி இந்தக் குழுவை அமைத்துக் கொண்டனர். இதற்கு ஐ.தே.க.வின் மூத்த தலைவரான எம்.எச்.முகமட் தலைமை தாங்குகிறார். எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பல முஸ்லிம் எம்.பி.களும் இக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்தக் குழு ஒரிரண்டு தடவை பாராளுமன்றக் கட்டிடத்தில் கூடிச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவாகத் தீர்மானங்களை நிறைவேற்றிக் கலைந்து சென்றது. உண்மையில் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கோரிக்கைகள் எவையும் வெளிக் கிளம்பிவிடக் கூடாது என்பதற்கான முன்னேற்பாடாகவே அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் எம்.எச். முகமட் தலைமையில் இந்த முஸ்லிம் எம்.பி.கள் குழு நிறுவப்பட்டது.

இனப் பிரச்சனைத் தீர்வில் முஸ்லிம்களுக்குக் காத்திரமான தொரு பங்கைப் பெற்றுக் கொடுக்க எம்.எச்.முகமட், பௌசி போன்ற பேரினவாத கட்சிப் பிரதிநிதிகள் எந்தளவு தூரம் ஆர்வமாகச் செயற்படுவார்கள் என்று புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை.

இந் நிலையில் ரவூப் ஹக்கீமின் தகுதியின்மைகள் குறித்து இந்த எம்.பி.கள் பிரதமருக்குக் கடிதம் எழுதி இருப்பது சுயாதீனமாக நடைபெற்ற ஒரு நிகழ்வாகக் கருத முடியாது. அரசாங்கத் தரப்பு ரவூப் ஹக்கீமுக்கு விடுத்த ஒரு மறைமுக எச்சரிக்கையகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.

எம்.எச்.முகமட் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ரீதியில் முஸ்லிம்களின் அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு கட்சியல்ல என்று குறிப்பிட்டதோடு சமாதானப் பேச்சுக்களில் ரவூப் ஹக்கீமின் பிரசன்னம் பலத்த சந்தேகங்களையும் எதிர்ப்புக்களையும் தோற்றுவித்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

ஆனால் அவர் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளத் தகுதியான நேர்மையும் நம்பகத் தன்மையும் உள்ள பிரதிநிதி யார் என்பதைக் கூறவில்லை.

### புலிகள் மறுதலித்த கோரிக்கை

அமைச்சர் ஹக்கீம் கடந்த வாரம் ராய்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

அதாவது ஏற்கனவே வாக்குறுதி அளித்தபடி பேச்சுக்களில் மூன்றாவது தரப்பாக முஸ்லிம்களை அங்கீகரிக்க வேண்டும் என்ற தொனியில் ஹக்கீம் கருத்து வெளியிட்டிருந்தார்.

முஸ்லிம்களுக்குச் சுயாதீன பிரதிநிதித்துவம் வழங்க வேண்டிய கட்டம் வந்துவிட்டது என அவர் கூறுகிறார். ஆனால் ஹக்கீமின் இந்தக் கருத்துக்குப் பின்னர், புலிகள் சார்பு ஊடகங்கள் வெளியிட்ட தகவல்கள் ரவூப் ஹக்கீம் கூறுவதைப் புலிகள் வரவேற்கவில்லை என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியது. பெரும்பாலும் புலிகளின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் தமிழ் கார்டியன் பத்திரிகை கடந்த வாரம் தீட்டியிருந்த ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் சமாதானப் பேச்சுக்களில் மூன்றாவது தரப்பென முஸ்லிம்கள் வெளிக் கிளம்புவதைக் காணப் புலிகள் விரும்பவில்லையெனச் சூசகமாகத் தெரிவித்திருந்தது. மோதலில் முஸ்லிம்கள் ஒரு மூன்றாவது தரப்பு அல்ல எனத் தமிழ் கார்டியன் தெரிவித்திருந்தது.

> **மோதலில் முஸ்லிம்கள் ஒரு மூன்றாவது தரப்பு அல்ல எனத் தமிழ் கார்டியன் தெரிவித்திருந்தது.**



ரவூப் ஹக்கீம் தனது பேட்டியில் எந்த ஒரு அதிகாரப் பரவலாக்கமுமே முஸ்லிம் மக்களைக் கணக்கில் எடுத்ததாக அமைய வேண்டும். வடக்கு-கிழக்கு ஒரே இனம் வாழும் பிராந்தியம் அல்ல; அது பல்லினப் பிரதேசம் என்ற உண்மை அங்கீகரிக்கப்பட வேண்டும். அப் பகுதிகளில் சில வகையான சுயாட்சி அனுமதிக்கப்பட வேண்டும். புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் ஆன நிருவாகம் ஒன்றில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் தயாராக இல்லை. ஏனெனில் எங்களை ஆள்வதற்கான ஆணையை நாம் புலிகளுக்கு வழங்கவில்லை என ஹக்கீம் வலியுறுத்தியிருந்தார்.

இப் பேட்டி வெளியாகிய மறுநாள் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வி ஒன்றிலும் ரவூப் ஹக்கீம் புலிகளைச் சாடும் விதத்தில் கருத்துக் கூறியிருந்தார். புலிகள் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக நடந்துகொள்கிறார்கள் என ஹக்கீமின் விமர்சனம் இருந்தது.

இந்தப் பின்னணியில் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கும் அதாவுல்லா சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் சுயாதீனமான பிரதிநிதித்துவத்துக்கு அரசாங்கம் வழிசெய்து கொடுக்கவில்லை எனக் கூறியிருந்தார்.

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்*



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.
விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza,
Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

**அப்பு: 0065-975 14 941**

# விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

*இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:*

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.ne

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**

## Anisch Credit & Kranken Kasse

ANISCH

Anisch Bank Credit இன் குறைந்த வட்டி வீதத்தில் இருந்து வங்கிக் கடன் வழங்கும் திட்டமும், ஆலோசனையும்.

(உதாரணம்:- 4000 Sfrக்கு வருட வட்டி 62 Sfr மட்டுமே) 2003 ஆம் ஆண்டின் புதிய வங்கிக் கடன் பெறும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளதை முன்னிட்டு டிசம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை எம்மிடம் Sfr 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1/2 பவுண் தங்க நகை; Sfr 20 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1 பவுண் தங்க நகை; Sfr 45 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 2 பவுண் தங்க நகை அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:- K. Ananda

**Anisch Credit & Kranken kasse**

Gantrisch -Str -11 - 3052- Zullikofen (Born Swiss )
Tel:- 031-9110338 , Natel : 078-8158916 Fax:- 031-9115894

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPRITUAL SERVICES

**National Theiveega Sakthy Foundation**
**International Interregious Traditional & Medical & Divine Service**
சர்வதேச சமூக மாந்தீரிக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் திராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தியபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.

Tele / Fax:065-24825, 078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "

## கம்பியூட்டர் வகுப்புக்கள்

7 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு பெண்டியம் கம்பியூட்டர்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. புதிய வகுப்புகள் ஜனவரி 2 இல் ஆரம்பம். கட்டணம் மணித்தியாலத்திற்கு 50 ரூபா. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-

**Swiss Tec Computer System**

5- 1/21, கொட்டாஞ்சேனை மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு-13.
✻ T.P 078-669247 ✻



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஒளடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.

### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.




### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.



### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஷ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்ப.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிகள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமுமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரீகத்தின் சக்தியால் என் காதலி என்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620,
431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# கிழக்கில் காணாமல் போனோரின் கதி என்ன?

மட்டக்களப்பு கல்லடி டச்பார் பகுதியிலுள்ள புலிகளின் மாவட்ட நிர்வாகப் பிரிவு அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை படையினரால் முற்றுகையிடப்பட்டுத் தேடுதல் நடாத்தப்பட்ட சம்பவமானது அன்றைய தினம் மட்டக்களப்பில் பெரும் பரபரப்பையும் பீதியையும் உருவாக்கியது.

பொலிசார், விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுப் பிரிவு ஆகியோர் அடங்கிய குழுவினரே புலிகளின் அலுவலகத்தைச் சுற்றிவளைத்துப் பெரும் இழுபறிக்கு மத்தியில், இறுதியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வரவழைக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் ஆயுதங்களின்றி அலுவலகத்துக்குள் நுழைந்து தேடுதலை மேற்கொண்டனர்.

புலிகளின் நிதிப் பிரிவில் முக்கியஸ்தராக இருந்து பின்னர் படையினரிடம் சரணடைந்து புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்பட்டு வந்த மண்டூரைச் சேர்ந்த நசீர் என்றழைக்கப்படும் எஸ். புலேந்திரராஜா என்பவர் திடீரெனக் காணாமற் போனதே புலிகளின் அலுவலகம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதற்குக் காரணம்.

மட்டக்களப்பு நகரில் வசித்து வரும் புலேந்திரராஜா வெள்ளிக்கிழமை பிற்பகல் இருவருடன் கல்லடிப் பகுதிக்குச் சென்றுள்ளார். அதற்குப் பின்னர் இவர் திடீரெனக் காணாமற் போயுள்ளார். இது தொடர்பான தகவல் கிடைத்ததையடுத்தே புலிகளின் அலுவலகத்தில் விசேட அதிரடிப்படை, பொலிஸ், புலனாய்வுப் பிரிவு ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து இந்தத் திடீர்த் தேடுதலை மேற்கொண்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பு முற்றுகை இரு தரப்பினரிடையேயும் முறுகல் நிலையைத் தோற்றுவித்ததுடன் அப் பகுதியில் பெரும் பரபரப்பையும் தோற்றுவித்தது. அதே நேரம் திடீரெனக் காணாமற் போன புலேந்திரராஜா புலிகளின் அலுவலகத்தில் காணப்படாத போதிலும் அவருக்கு என்ன நடந்ததென்பதை எவராலும் கண்டறிய முடியவில்லை.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டுச் சமாதானச் சூழல் முன்னெடுக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் வடக்கு - கிழக்கில் கசப்பான நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ள போதிலும் அவற்றில் மிக மோசமானதும் பாரதூரமான கடுமையானதும் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கக் கூடியதுமான நிகழ்வுகள் அதிகளவில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே நடைபெற்றுள்ளது.

ஆட்கடத்தல்கள், தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையேயான இன வன்முறைகள், வாகனக் கடத்தல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், உயிரிழப்புகள் என்று தொடரும் நிகழ்வுகள் கிழக்கிலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரம் கூட வாழைச்சேனை நகரில் இரவு வேளையில் திடீரென இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் மூன்று பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான வன்முறைகளின் போது எரிக்கப்பட்ட கடையொன்றுக்குப் பின்னாலிருந்தே இந்தக் கிரனைட் தாக்குதல் நடைபெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ள போதிலும் இதன் உண்மையான பின்னணி இன்னமும் கண்டறியப்படவில்லை.

இதெல்லாவற்றையும் விட மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ். - வரதர் அணி) உறுப்பினர்கள் 9 பேர் காணாமற் போயுள்ளதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றிடம் முறையிடப்பட்டுள்ளது.

காணாமற் போன இந்த 9 பேரில் ஒருவரான போரதீவுப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மண்டூரில் உள்ள வாவியிலிருந்து சடலமாக அண்மையில் மீட்கப்பட்டிருந்தார்.

## கிழக்கான்

கடந்த 20 வருட காலமாகத் தொடர்ந்த போரின் அழிவுகளுக்கு முடிவுகட்ட அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து தாய்லாந்தில் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் நடைபெற்றுள்ள இவ்வேளையில் தொடரும் அச்சமூட்டும் சம்பவங்கள், அழிவுகளையும் துயரங்களையும் அனுபவித்துக் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விடும் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள எதிர்பார்ப்புகளில் சிறு தளம்பல்களை உருவாக்கியுள்ளது.

20 வருட காலத்திற்கும் மேலாக இடம்பெற்ற தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டப் பாதையில் ஆட்சியாளர்களினதும் அரச படைகளினதும் படுகொலைகள், அழிவுகள், ஒரு புறமிருக்க, மறுபக்கம் சகல தமிழ் விடுதலை அமைப்புகளும், உட்கட்சி மோதல்கள், சகோதரப் படுகொலைகள் என்று நடாத்திய ஆயுதக் கலாசார யுகத்திலிருந்து விடுபட்டு, ஒற்றுமை என்ற ஒரே தளத்தில் நின்று ஐக்கியப்படுவதன் மூலமே தமிழ் மக்களுக்கான உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

# 29 ஆண்டுகளின் பின் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் ஒரு மீள் பார்வை

**1974** ஜனவரி 10 ஈழத் தமிழர்தம் வரலாற்றில் துயரமான ஒரு நிகழ்ச்சியின் தினமாக நினைவு கூரப்படுகிறது. நாலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியினைக் காண்பதற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் இருந்த மைதானத்தில் கூடியிருந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் எழுச்சி - கோலாகலம் அன்றைய அரசுக்கு எரிச்சலூட்டியது. அரசின் உள்ளூர் ஏஜென்டுகளுக்கும் அது பிடிக்கவில்லை. காலம் காலமாக இனவாதக் கட்டமைப்பாகச் சீரழிந்து வந்த இலங்கைப் பொலிசுக்கும் அது பிடிக்கவில்லை.

தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள வீதியால் பொலிஸ் வாகனம் செல்ல வேண்டும் என்று முரண்டு பிடித்தது. சகட்டு மேனிக்கு மின் கம்பியின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. விளைவு, கூடியிருந்த மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். நெரிசலில் சிக்கி ஒன்பது பேர் பலியாகினர்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழத்துக்கான பிரசார இயக்கத்தை மேற்கொண்டிருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பஞ்சாப் ஜூ லியன் வாலாபாக் மைதானத்தில் கூடியிருந்த மக்கள் மீது ஜெனரல் டயர் மேற்கொண்ட படுகொலைகளுடன் இத் தாக்குதலை ஒப்பிட்டது. அந்தளவிற்கு இல்லாவிடினும் தமிழ் மக்கள் மனங்களில் இந்தச் சம்பவங்கள் பேரதிர்ச்சியையும் பெரும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தின.

யாழ் உரும்பிராய் தியாகி சிவகுமாரன் போன்றவர்கள் இயக்கம் அமைத்துச் செயற்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியதும் இந்தத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்தான்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் நடைபெற்று 29 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இப்போதுதான் போல இருந்தாலும் பல்லாயிரம் துயரங்களுடனும் மரணங்களுடனும் இந்த ஆண்டுகள் கடந்துவிட்டன, யுகங்கள் கடந்ததுபோல. ஆனால் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளுக்கு எது காராணமாக இருந்ததோ, எந்த மேலாதிக்க உணர்வு காரணமாக இருந்ததோ அது பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதனுடன் புதிய அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளையும் தமிழ் மக்கள் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

வரலாற்றை உரைத்துப் பார்த்தால் எந்த வரலாறு தமிழ் மக்களுக்குச் சுயபரிதாபத்தை ஏற்படுத்தியதோ அதே வரலாறு மற்றைய இனங்களுக்கும் சொந்த சகோதரர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டை அவதானித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மீது எப்படி வன்முறை ஏவி விடப்பட்டதோ அதைவிடக் குரூரமாக காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும், யாழ்ப்பாணம் கந்தன் கருணை இல்லத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த மாற்று இயக்கப் போராளிகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டது.

வரலாறு தமிழ் மக்களைச் சுதந்திரத்தை நோக்கி அழைத்துச் செல்லவில்லை. வேறு புதிய எஜமான்களுக்கு அடிமையாகும் நிலைக்கு, சிங்கள பேரினவாதத்தை மிஞ்சிய தமிழ் அதிகார அகங்காரத்திற்கும் இட்டுச் சென்றது.

பேரினவாதம் எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசியங்களுக்கு எதிராக எத்தகைய அடக்குமுறைகளை மேற்கொண்டதோ அவை பிரதியாக்கம் செய்யப்பட்டு சொந்த சமூகத்திற்கு எதிராகவும், சகோதர சமூகங்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட்டது.

துரதிஸ்டம் என்னவென்றால் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்கூடப் பொருளற்றுப் போகும் அளவிற்குத் தமிழ்ச் சமூகத்தில் ஜனநாயகம், மனித உரிமை என்பன மிதித்தழிக்கப் பட்டன.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை நினைவு கூரும் தமிழ்ச் சமூகம் "உன்னுடைய கண்களிலுள்ள கோளாறை அகற்றிவிட்டு மற்றையவனுடைய கண்ணிலுள்ள துரும்பைப் பார்" என்ற யேசுநாதர் வாக்கியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டுள்ளது.

ஆனால் எல்லாவற்றுக்கும் மூலவேராக இருந்துள்ள பேரினவாதமும், சமூகத்தின் உள்ளேயும் முஸ்லீம் மக்கள் மீதும் நிலவும் ஜனநாயக விரோத இராணுவ மேலாண்மையும் சமகாலத்தில் நீக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந் நாட்டில் இன முரண்பாட்டுச் சிக்கலைக் கூர்மைப்படுத்தியதில், தமிழ்ச் சமூகத்தை ஆவேசப்படுத்தியதில் இலங்கைப் பொலிஸுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரம் உண்டு. சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராகவும் ஏனைய மக்களுக்கு எதிராகவும் பொலிஸ் இழைத்த குற்றங்கள் தொடர்பாக ஆழ்ந்த பரிசீலனை அவசியமாகிறது. இதனை மேற் கொள்ளாமல் சுதந்திர பொலிஸ் ஆணைக் குழுவோ வேறு எந்த நடவடிக்கைகளோ உருப்படியான பயன் எதையும் பெற்றுத் தராது.

அதேபோல் அதிகாரப் பகிர்வு ஒன்று நடைபெறும் போது சிங்கள இனத்தின் மானம் காக்கும் எந்த அரச கட்டமைப்புக்கும் மாறாக அந்தந்தச் சமூகங்களைச் சேர்ந்தவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களே உருவாக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வில் பொலிஸ் அதிகாரம் முக்கியமானது. அது ஜனநாயக பூர்வமாக, பாரபட்சமற்ற கட்டமைப்பாக அமைக்கப்பட வேண்டும். இதுவே தமிழாராய்ச்சி மாநாட்டுத் தியாகிகளுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

## தாகூர்



# அதிரடி அய்யாத்துரை

*"**அரசியல்** கட்சிகளை மக்கள் மாலை போட்டுத் தோள் மீது ஏத்திக் கொண்டு வருவினம்; அல்லாதவர்களை ஆர்ப்பாட்டம் உண்ணா விரதம் செய்து வெளியேறச் சொல்லி நிப்பினம்...." இது தான் உண்மையான மக்கள் பிரதிநிதியள் ஆரெண்டு கண்டுபிடிக்கிற புதுமுறையெண்டதை நீங்களும் இப்ப தெரிஞ்சு வைச்சிருப்பியள். ஆனால் ஒவ்வொருத்தருக்குள்ளயும் என்னென்ன இருக்கெண்டு யாரால அறிஞ்சு கொள்ளேலும்? ஏதோ பத்திரிகைக்காறருக்குள்ளால வாறதைத்தான் படிச்சுப் படிச்சுப் பாடமாக்கிக் கொண்டு போறம்... எதுக்கும் யாழ்ப்பாணம் நல்லூரில நடந்த ஒரு மாபெரும் வரவேற்புக் கூட்டத்தில ஒரு மூலையில நடந்த உரையாடலையும் அறிஞ்சு வைச்சுக் கொள்ளுங்கோ, பாதகமொண்டு மில்லை.*

*அறுபது கடந்த கிழவனார்: "ஹூம்... எங்களுக்கு ஏழரை கழிஞ்சிட்டுது. இஞ்சாலை இப்பதான் தோளில ஏறி வந்திருக்கு..."*

*அருகில் நின்றவர்: "ஐயா, எங்கயிருந்து வந்தனீங்கள்?"*

*கிழவர்: "வன்னியிலிருந்து..."*

*__தமிழ் மக்களின்__ பிரச்சினைகளில் தலைப்போட முடியாதளவுக்கு விலகி வந்துவிட்ட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. ஒருத்தரின் வீட்டு வாசலில் கார் ஒன்று எங்கயோ மோதுப்பட்டு, நெளிந்து விட்டபடி நிற்கிறது. நத்தார்க் கொண்டாட்டம் நடக்கவேண்டிய வீட்டில் அன்றிரவு எம்.பி.யின் மகன் வீட்டுக்கு வெளியே தரையில் மல்லாக்காக் கிடந்ததைச் சனம் வேடிக்கை பாத்திருக்கினம். எல்லாம் 'தண்ணி'க் குழப்பம்தான்! மக்களை மட்டுமில்லை சொந்த மகனையும் தான் கெட்டழிய விட்டிட்டு நிக்கினம்... என்னதைச் சொல்ல?*

*__ராணுவ__ பாதுகாப்பு உயர்வலயப் பிரச்சினைக்குப் பிறகு, யாழ்ப்பாணம் போயிருந்த தென்னிலங்கை அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் மண்ணெண்ணையார்தான் வீட்ட கூட்டிப்போய்ச் சாப்பாடு கொடுத்தவர். சாப்பிட்டுக் கொண்டிருந்தவையிட்ட நைஸாய், "பாதுகாப்பு முன்னரங்க நிலையளில நிக்கிற சீருடையினரிடமிருந்து ஆயுதங்களை வாங்கிப் பலாலிக்கு அனுப்பிப் போட்டு அவையளைச் சும்மா நிக்கவிட்டால் பிரச்சினையில்லை" எண்டாராம் மண்ணெண்ணையார். சாப்பிட்டுக் கொண்டிருந்த யாழ்ப்பாணத் தளபதி சிரிக்காமல் அமைதியாய்ச் சொன்னாராம் "ஓமோம், அவையின்ர சீருடைகளையும் கழட்டிப் பலாலிக்கு குடுத்துவிடலாம்!"*

*__புதிய ஜனநாயகக்__ கட்சியினரின் கூட்டத்தில கேட்டது இது: "மது அருந்துவது பஞ்சமா பாதகங்களில ஒன்று எனச் சொல்கிறது இந்து சமயம். ஆனால் இந்து சமய அமைச்சரா இருக்கிறவர் திக்கம் வடிசாலைக் கசிப்பு வித்த காசில ஒட்டோக்கள் வாங்கி கோயில் குருக்கள் மாருக்குக் கொடுக்கிறார்..." ஆஹா.... அப்பிடிப் போடு!*

*__கடல் வலயத்__ தடையை நீக்கவேணும், மீனவர்கள் சுதந்திரமாய்த் தொழில் புரிய அனுமதிக்க வேணும் எண்டெல்லாம் கேக்கிற ஏகப்பிரதிநிதித்துவக்காரர் வடபகுதியில இறாலை 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்து கொழும்பில 800 ரூபாவுக்கு விக்கினமாம். போக்குவரத்துச் சீரான இந்நேரமும் தாங்கள் கஷ்டப்பட்டுப் பிடிக்கிற இறாலை இப்பிடி அறா விலைக்குக் களவு குடுக்க வேண்டியிருக்கே எண்டு வாய் திறக்காமல் புலம்புகினமாம் காக்கைதீவு, நாவாந்துறை, குருநகர், பாஷையூராக்கள்.*

# ஸ்போர்ட்ஸ்

## தென்னாபிரிக்காவுக்கு இனிங்ஸ் வெற்றி

**தெ**ன்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கேப் டவுனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி நான்காவது நாளான ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்தது. இப் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 142 ஓட்டங்களால் குறிப்பிடத் தக்க தோல்வியைத் தழுவியது.

இதன் அடிப்படையில் இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற அடிப்படையில் வென்றது. இந்த வெற்றி மூலம் டெஸ்ட் தர வரிசையில் அவுஸ்திரேலியாவை விஞ்சி தென்னாபிரிக்கா முதலிடத்திற்கு வந்துள்ளது.

தென்னாபிரிக்க அணி முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 620 ஓட்டங்களைப் பெற்றது. கிப்ஸ் 228, ஸ்மித் 151. பாகிஸ்தான் முதல் இனிங்ஸில் 252 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. தௌஃபீக் உமர் முதல் இனிங்ஸில் 135 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 67 ஓட்டங்களையும் பெற்றார். பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸில் 226 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

## சர்வதேச கிரிக்கெட்டில் சர்வதேச அரசியல்

**சி**ம்பாப்வேயில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்வதைத் தவிர்த்தால் அதற்கான நட்டஈட்டைச் செலுத்தவேண்டி ஏற்படும் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

சிம்பாப்வேயில் ஜனாதிபதி ரொபேட் முகாபே ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் ஆட்சியைக் கைப்பற்றியவர்.

அங்கு நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் அவரது சர்வாதிகாரப் போக்குக்கு வலுவூட்டும் என்பதால் சிம்பாப்வேயில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் அறிவித்துள்ளன.

சிப்பாப்வேயில் நடைபெறும் ஆட்டங்களைப் புறக்கணித்தால் நட்டஈடு செலுத்தவேண்டி ஏற்படும் என ஐ.சி.சி. உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கும் நிலையில் இவ்விரு அணிகளுக்குமான நட்டஈட்டுத் தொகையைச் செலுத்துவது குறித்து இந் நாடுகளின் அரசாங்கங்கள் ஆராய்ந்து வருகின்றன்.

# சிந்தியா
### பதில்கள்

**★ சமீபத்தில் இரசித்த நிகழ்ச்சி?**

இ. ஜீவராணி, தெமட்டகொட.

*ஒரு ஞாயிறு காலை பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி. அதிதியாகக் கலந்து கொண்டவர் இளம் இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத். பார்வையாளர்களைப் பங்கேற்க வைப்பது என்பதில் அவர் காட்டிய உறுதி வியக்க வைத்தது. நம் தமிழ் இசை நிகழ்ச்சிகளில் (இலங்கையில்) சற்றே சிரித்துக் கை தட்டிவிட்டால் பக்கத்திலிருப்பவர் நம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாரோ என்று நினைப்பதுபோல கிணற்றுக்குள் போட்ட கல்லைப் போல், அந் நாளைய நரசிம்மராவ் முகத்தோடு 'கம்'மென்றிருப்பதைப் பார்த்து வெறுத்துப் போயிருக்கிறேன். யார் யாரெல்லாமோ வந்து போகிறார்கள். இந்த பிரசாத்தை ஒருமுறை இலங்கைக்கு அழைத்து நம் இறுகிய முகங்களை மாற்ற முயற்சி செய்து பார்த்தால் என்ன?*

❋❋

**★ சிந்தியா! ஆரம்பத்திலிருந்ததை விட பேச்சுவார்த்தை நிலைமை தளர்ந்து போகிறதா?**

நசூர்தீன், தெல்தோட்ட.

*தளர்ந்து போவதற்குப் பேச்சுவார்த்தை என்ன பனியனா?*

❋❋

**★ சிந்தியா, காதலை விளக்கும்படியாகக் கவிதை ஒன்றை எடுத்து விட முடியுமா?**

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

*"என் இதயத்துக்குள்*
*உன்னைப் பூட்டி வைத்து*
*சாவியை எப்போதோ*
*வீசி எறிந்துவிட்டேன்"*

❋❋

**★என்ன உங்கள் சிம்ரன் இந்த மாதிரியெல்லாம் போஸ் கொடுக்கிறாரே...? (சென்ற இதழ் நடுப் பக்கம்)**

எம்.எச். றியால், நிந்தவூர்-08.

*ஹி..ஹி.. அதெல்லாம் நடிப்பு மச்சி நடிப்பு!*

❋❋

**★ அதாவுல்லா அணியினருக்கெதிராக நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்துவிட்டதே?**

ற. பர்ஹான், செட்டிக்குளம்.

*அப்போ இனி கி.மு.கா.தான்!*

❋❋

**★ புலிகளுக்கு வானொலி உபகரணங்களை வாங்குவதில் முறைகேடாக நடந்து நோர்வே தூதுவர் முழிப்பதாகத் தெரிகிறதே?**

எம்.எஸ். குட்டி, கன்னங்குடா.

*இதற்கெல்லாம் அவர் பயப்பட வேண்டியதில்லை.*

*ஆட்சியாளர்களை நிலைகுலைய வைக்குமளவுக்கு இதைத் திட்டமிட்டுப் பிரச்சினையாக்கிப் பெருங் குழப்பமாக்கக் கூடியவர்கள் வெளியே இல்லை; ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் அவரைக் காப்பாற்றுவார்கள்.*

❋❋

**★ கறுப்பு நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் மனிதர்கள் உண்டு. ஏன் பச்சை நிறத்தில் மனிதர்கள் இல்லை?**

ஐ.எஸ். பிரியா, கித்துள்.

*அடடா, என்னமாய் ஒரு அறிவு பூர்வமான கேள்வி! இப்படியே.. ஏன் கிளிகள் கறுப்பாக இல்லை? நீல முயல் இல்லை? சிவப்புக் கொக்கு இல்லை? என்று கேட்டுக் கொண்டிருங்கள். யாராவது உங்களை இதற்கெல்லாம் பதில் கிடைக்கக்கூடிய இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.*

❋❋

**★ நான் அஜித்குமாரை மனசார விரும்புகிறேன். ஷாலினிக்குத் தெரிந்தால் என்ன செய்வார்?**

:.ஸ்மினா, மட்டக்குளிய.

*சிரிப்பார்!*

❋❋

**★ பாராளுமன்றப் பாதை பன்றிகளின் பாதை என்று சொல்லப்படுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எம்.எம்.எம். ஹபீல், கஹட்டகஸ்திகிலிய.

*பன்றிகளைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு?*

*சில விபரங்கள் இதோ:*

*ஒன்று: பன்றிகள் சேற்றில் திளைக்கவில்லை.*

*ஏனேனில் சேறென்று அவற்றிற்குத் தெரியாது.*

*இரண்டு: பன்றிகள் அழகானவை,*
*ஏனெனில் அவை*
*ஒப்பனை செய்து கொள்வதில்லை.*

*மூன்று: பன்றிகள் ஈன மிருகங்களல்ல,*
*ஏனெனில் அவை*
*தம்மை விட்த் தாழ்ந்ததாய்*
*எதைப் பற்றியும் கருதுவதில்லை.*

*கடைசியாய்:*
*பன்றிகள் மனிதர்களின் அடிமைகளல்ல,*
*ஏனெனில்*
*அவை மனிதர்களைச் சார்ந்திருக்கவில்லை.*

*(கவிதை உபயம்: ஜெயமோகன்).*

❋❋

**★ சிந்தி, நீர் உண்மை பேசுகின்ற திருநாள் எது?**

வி. மணிகரன், களுவாஞ்சிக்குடி-04.

*'நான் ஒருநாள் இறந்துவிடுவேன்' என்று ஒவ்வொரு நாளுமா சொல்லிக் கொண்டிருக்க முடியும்!*

❋❋

**★ ஜே.வி.பி.யினர் பற்றி?**

எம்.எம். ராஜேஸ்குமார், புளத்சிங்கள.

*நம் தமிழ்ப் பத்திரிகைகளைப் படித்து வரும் அப்பாவித் தமிழ் மகன்/ள் ஒருவரை எடுத்துக் கொண்டால் பெருமளவு இனவாதத்தைக் கக்கி வரும் ஜே.வி.பி.யினரிடம் கூட கடுகத்தனை இருக்கும் அந்த ஜனநாயகத் தன்மையைக் கண்டு ஒரே வியப்பும் குழம்பமுமாக இருக்கும்!*

❋❋

**★ சிந்தியா, உங்களிடம் கேட்கக் கூடாத கேள்வி ஒன்றைக் கேட்டால்...?**

அப்துல் கையும், காத்தான்குடி-03.

*பத்திரிகையில் வராது அவ்வளவு தான்.*

❋❋

**★ ஸ்ரீவ் வோ?**

இ. சுதன், இணுவில் தெற்கு.


*விடைபெறுவது எப்படி என்பதையும் அவரிடமிருந்து நம் வீரர்கள் படித்துக் கொள்ள வேண்டும்.*

❋❋

**★ இந்த உலகக் கிண்ணத்தில் எமது அணி 96ல் விளையாடியதுபோல் விளையாடுவார்களா?**

சோ. தனு, ஆரையம்பதி-01.

*இல்லை என்றுதான் தோன்றுகிறது. ஆரம்பத்திலேயே எதிரணிப் பந்து வீச்சாளர்களைப் பயமுறுத்துவதற்குத் துணிச்சல் மிக்க அதிரடி ஆட்டக்காரர் ஒருவர் அப்போது இருந்தார். அவர் இப்போது பொறுப்பு மிக்க அணித் தலைவராகிவிட்டார். கில்கிறிஸ்ட், கிப்ஸ், கைல், செவாக் போன்ற ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை வைத்திருக்கும் அணிகளே தெம்பாகக் களத்தில் இறங்கப் போகின்றன.*



இயக்குநர் சூர்யா-சிம்ரன்
படம்:- நியூ

# இலக்கிய நயம்

## விழிப் பார்வையால் இதயத்தை வருடிக் கொண்டவளே!

தருவது முழடில்யன்

**மா**தங்கி வருவதைப் பார்த்திருந்தான் ராதேயன். நிலம் நோகாமல் அவள் நடந்தபோதே இவன் நெஞ்சு அதிர்ந்தது.

பட்டுப் புடைவையின் சரசரப்பும், கொலுசு, வளையல்களின் சிணுங்கலும் அவள் வருகையின் சங்கீதங்கள்.

பச்சைப் பட்டுப் புடைவையிலும் வெள்ளைச் சட்டையிலும் மறைந்திருந்த பின்புற அசைவு தெரிந்தது. சுருண்டு நெளிந்த ஈரம் கலையாத கூந்தல் நுனி முடிச்சுடன் தொங்கிற்று.

சேலை மறைக்காத இடையின் அசைவையும் பளீரிட்டு ஒளிவீசிய மேனி மினுமினுப்பையும் பார்த்தான்.

இடையின் கீழே சேலை உள் மடிந்த இடத்தில் அவன் பார்வை தேங்கி ஊகங்களால் அலையுண்டு தடுமாறியது.

அவள் இடை மேலும் ஒடிந்து நடை தளர்ந்தது, அவள் கையில் ஏந்தியிருந்த உணவுத் தட்டுக்களின் பாரத்தாலா அல்லது அவன் பார்வை மேய்ந்த இடங்களை அறிந்து கொண்டதாலா என்பதை அனுமானிக்க முடியவில்லை. அவன் கண்களைச் சந்திக்காமல் குனிந்தபடி விறுவிறென நடந்து வந்தவள், அவன் முன்னால் உணவுத் தட்டுகளை அடுக்கி வைத்துவிட்டுப் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள்.

இப்போது அவள் மூச்சு வாங்குகையில் எழுந்து தாழ்ந்த மார்புப் பிரதேசத்தில் ராதேயன் பார்வை முகாமிட்டிருந்தது.

மாதங்கி சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டே, "ம் பார்வையில் கொஞ்சம் பண்பாடு இருக்கட்டும்" என்றாள் சீறலுடன்.

கோபத்துடன் அசைந்த அவள் உதடுகளின் செழுமையையும், நீரோட்டத்தையும், பளபளப்பையும் கவனித்தபடி இருந்த ராதேயன், எத்தகைய உஷ்ணமான சொற்களும் இவற்றினூடாக வரும்போது குளிர்ந்துதானே ஆக வேண்டும் என்று சிந்தித்தான். அவள் உதடுகள் இகழ்ச்சியுடன் இழுபட்ட போது புஷ்டிக் கன்னங்களில் விழுந்த குழிகளையும் கவனித்தான். ஒருமுறை தலையை இலேசாகச் சாய்த்துத் தரை மீது விழுந்து கிடந்த அவள் சேலை முந்தானையையும் பார்த்தான். கேவலம் அந்தச் சேலை, உயிரற்ற பொருள், எத்தனை உயிர்த் துடிப்புடன் இயங்கித் தன்னைப் பெரும் புரட்டாகப் புரட்டிவிடுகிறது என்பதை எண்ணி வியக்கச் செய்தான்.

"போதும் போதும்" என்று இகழ்ச்சியுடன் உதடுகளைச் சுழித்துக் கொண்ட மாதங்கி, "ம்.. முதலில் எதைச் சாப்பிடப் போகிறீர்கள்?" என்று அவனைப் பார்த்தாள்.

"சொன்னால் சீறுவாய்" என்ற ராதேயன், மந்தகாசத்துடன் அவள் ஈர உதடுகளைப் பார்த்தான்.

மாதங்கி சங்கடப்பட்டு அசைந்தாள்.

"உங்களைப் போய்க் கேட்டது என் தவறு" என்று தரையைப் பார்த்தபடி முணுமுணுத்தாள்.

"பார்த்தாயா, நான் உண்மையைப் பேசத் தயங்குவது இதனால்தான்.."

"என்ன உண்மை?" மாதங்கியின் குரல் உஷ்ணமாக ஒலித்ததா, இன்பமாக ஒலித்ததா என்று விவரிக்க இயலாதிருந்தது.

"இப்போது என் உள்ளத்தில் நான் நினைத்துக் கொண்டிருப்பதையெல்லாம்



ஒளிக்காமல் சொல்லிவிடட்டுமா?" என்று கேட்டபடி அவளருகே நெருங்கி உட்கார்ந்துகொண்டான். பட்டும் படாமலும் மோதிய அவள் மென்னுடல் தொடுகை, அவன் தசை நரம்புகளினூடாக மூளைக்குச் சென்ற போது பெரும் சூறாவளியாகத் தாக்கியது.

மாதங்கியின் உணர்ச்சிகளும் மெள்ளக் கட்டை மீறிக்கொண்டிருந்தன. ஆனால், "என்ன உண்மை?" என்ற சொற்கள் உணர்ச்சியற்று உதிர்ந்தன அவள் உதடுகளிலிருந்து.

"இதற்கு.." என்று மேலே பேச முடியாமல் அவள் கண்களோடு தன் கண்களை உறவாட விட்டுத் தடுமாறினான் ராதேயன்.

'சே..! என்ன இவள் கண்கள்! உயிரைத் துளைக்கும் கருவிகளா இவை!' சீதையிடம் இராவணன் கொண்ட ஆசை எங்கிருக்கிறது என்று தேடி அவன் உடம்பு முழுவதையும் சல்லடையிட்டுப் புகுந்து தேடிய இராமனின் அம்பைப் பற்றிக் கவிச்சக்கரவர்த்தி எழுதியிருந்தது ராதேயன் ஞாபகத்தில் வந்தது. 'என்னைத் துளைத்து அப்படி என்ன தேடுகின்றன இவள் கண்கள்....?'

ராதேயன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

மாதங்கியின் உணர்ச்சிகளும் அசுர வேகத்தில் ஓடின. ராதேயன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாலும் அவனுடல் மேலும் தன்னுடன் இழைய முற்படுவதையும், பின்புறமாக அவன் கரம் தன்னைச் சுற்ற முற்படுவதையும் பார்வையைத் திருப்பாமலே அவளால் உணர முடிந்ததால் உணர்ச்சிக் கொந்தளிப்பும் வேட்கையும் மிதமிஞ்சியது.

"இதற்கு என்றால்...?" என்ற சொற்கள் உதடுகளிலிருந்து பலவீனத்துடன் வெளிவந்தன.

கூடவே, இத்தகைய பொய்க் கேள்விகளும் பதில்களும், அவற்றுக்கிடையே செயலுக்குத் துடிக்கும் அவயவங்களின் உண்மையும் கலந்ததுதான் காதல் என்றும் அவனுக்குத் தோன்றியது.

இருவரும் உரையாடலுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்திருந்தனர்.

எப்போது நடந்தது என்று இருவருமே புரிந்துகொள்ள முடியாத ஒரு கணத்தில் இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டிருந்தனர்.

முன்னே கிடந்து ஒளியில் மின்னிய உணவுத் தட்டுகள் அவர்களிருவரையும் பார்த்து நகைப்பது போலிருந்தன.

உயிர்த் துண்டங்களாக உழலும் இரு கண்களையும், ஒளிவீசும் மேனியையும், அற்புத எழில்களையும் கொண்ட இவளை இந்த மண்ணில் உலவும்படி பிறப்பித்துவிட்ட இவளது பெற்றோர்கள் எத்தனை பெரிய உத்தமர்கள்! ராதேயன் மனதுக்குள் ஆச்சரியமும் களிபேருவகையும் பொங்கின.

'எதற்கும் அசையாதவன் நான் என்று பெருமை கொண்டிருந்த என்னையே அசைத்துத் துன்பத்தில் உழலவைக்கும் அழகையல்லவா இவள் கொண்டிருக்கிறாள்! எழில் மிகு இவளைப் பெற்ற இவள் தந்தை நெடுங்காலம் வாழட்டும்; தாயார் இப் பூவுலகின் பெருஞ் சிறப்புக்கள் அனைத்தையும் பெறட்டும்' என்று மனதுக்குள் வாழ்த்தினான் ராதேயன்.

**அல்குபடர் உழந்த**
**அரிமதர் மழைக் கண்**
**பல்பூம் பகைத்தழை**
**நுடங்கும் அல்குல்**
**திருமணி புரையும் மேனி**
**மடவோள் யார் மகள் கொல்?**
**இவள் தந்தை வாழியர்**
**துயரம் உறீஇயினள் எம்மே..**
**தன்திறம் பெறுக**
**இவ்ள ஈன்ற தாயே!**

*(நற்றிணை: 8:1-5,10)*



## அன்பு

சீனாவின் உலாங் ஆய்வு மையத்தில் தங்களது அன்பைப் பரிமாறிக்கொள்ளும் பாண்டா கரடிக்குட்டிகள்தான் இவை. சீனாவில் தீவிர நகரமயமாக்கல் திட்டங்களின் கீழ் மூங்கில் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதால் இந்தக் கரடி வகையும் அழிந்து வருகிறது. இவற்றைப் பாதுகாத்து விருத்தி செய்ய அந்நாட்டு விலங்கியல் துறையினர் ஆர்வங்காட்டத் தொடங்கியுள்ளனர்.

## எதிர்பார்ப்பு

உலகெங்கிலும் 2003 புதுவருடத்தை வரவேற்கும் கோலாகல நிகழ்ச்சிகள் கேளிக்கை களியாட்டங்களுடனும் வாண வேடிக்கைகளுடனும் நடந்து முடிந்தன. அன்றாட உணவுக்காக அல்லற்படும் இந்த மும்பாய் நகர வீதியோரச் சிறுமி புத்தாண்டை வரவேற்கும் வரவேற்பு அட்டைகள் சிலவற்றைக் கையில் ஏந்தியவண்ணம் காத்திருக்கிறாள். இந்தக் காத்திருப்பு மகிழ்ச்சி பொங்கப் புதுவருடத்தை வரவேற்க அல்ல. தனது நாளைய தின உணவுக்காக இந்த அட்டைகளை விற்க எவரும் கிடைப்பார்களா என்றுதான்.

உலகின் ஒரு பகுதி மக்கள் பட்டினியால் வாடும் நிலையில் மேற்குலக நாடுகள் பல கோடி ரூபா பெறுமதியான வாணவேடிக்கைகளைக் கொழுத்திப் புதுவருடத்தை வரவேற்றனர்.






## ழப்பு

உலகில் அதிக காலம் வாழ்ந்தவர்கள் குறித்து அவ்வப்போது வியக்கத் தக்க தகவல்கள் வெளிவந்துகொண்டிருந்தாலும் கூட இன்று அதிக வயதுடைய நபர் என கின்னஸ் புத்தகம் ஆதார பூர்வமாக ஏற்றுக்கொண்டிருப்பது அன்ரோனியோ டொட் என்ற இத்தாலியரைத்தான்.

இவர் 1889ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதன்படி இவரது தற்போதைய வயது 114. இவருக்கு நான்கு பிள்ளைகள். எல்லோரும் 80 வயதைத் தாண்டியவர்கள். என்னால் முடியுமான காலத்தில் உடல் வருந்தி உழைத்தேன் எனக் கூறும் இவர், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வைன் ஒரு குவளையைத் தினசரி அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

இவரது தாய் தந்தையரும் 90 வயதுகளைத் தாண்டி வாழ்ந்தார்கள். இன்று உலகில் உயிருடன் இருக்கும் அதிகூடிய வயதுள்ள நபர் இவர்தான்.

கின்னஸ் தகவல்களின்படி கூடுதல் காலம் அதாவது 120 வருடங்களும் 237 நாட்களும் வாழ்ந்து சாதனை படைத்தவர் ஒரு ஜப்பானியர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1865 பிறந்து 1986ல் மரணமானார். தனது 105வது வயதுவரை இந்நபர் தொழில் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## குதூகலத்தில்

கென்யாவில் பொதுத் தேர்தல் நடைபெற்று ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. புதிய பிரதமர் பதவியேற்ற தினத்தன்று நடைபெற்ற வைபவத்தின் போது குதிரை மேல் இருந்த வீரரை குதுகலத்தில் வீழ்த்தித் தள்ளுகிறது குதிரை.

# சினி விசிட்



## இந்திக்கு ஏற்றுமதியாகும் கோலிவுட் கதைகள்

பாலிவுட் இயக்குநர்கள் ஹாலிவுட்டிலிருந்து மட்டும்தான் கதையைச் சுடுவார்கள் என்று எண்ணியிருந்தோம். தற்போது தமிழிலிருந்தும் இந்திக்கு ரீமேக் செய்யப்படும் படங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

1999ல் சூப்பர்ஹிட் திரைப்படமான மணிரத்னத்தின் 'அலைபாயுதே' தற்போது இந்தியில் 'சாத்தியா' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. விவேக் ஒபராய் மற்றும் ராணி முகர்ஜி ஆகியோர் சாத்தியாவில் நடித்துள்ளனர்.

விக்ரம் நடித்துப் புகழ்பெற்ற 'காசி' மற்றும் 'சேது'வும் விரைவில் இந்தித் திரைக்கு வரவுள்ளன. தமிழில் 'தில்' இந்தியில் 'தம்'மாகி மாறியது. இந்தியிலும் விவேக் ஒபாராய்தான் நடித்துள்ளார். இப் படம் ஜனவரியில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய் நடித்த 'குஷி'யை இந்தியில் இயக்குநர் சூர்யா மொழிபெயர்த்து வெளியிடவிருக்கிறார். இந்தியில் விஜய் வேடத்தில் பர்தீன்கான் நடித்துள்ளார். கானுக்கு ஜோடியாக கரீனா கபூர் நடிக்கிறார். இப் படமும் அடுத்த மாதம் திரைக்கு வரலாம்.

ஓ போடு புகழ் 'ஜெமினி'யும் விரைவில் இந்தித் திரையுலகைக் கலக்கவுள்ளது. 'ரன்', 'துள்ளுவதோ இளமை' மற்றும் 'அழகி' உள்ளிட்ட தமிழில் ஹிட்டான அனைத்துப் படங்களும் பாலிவுட்டை வலம் வரவுள்ளன. இதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவருவதாகப் பாலிவுட் பட்சி தெரிவிக்கிறது.

## சௌந்தர்யாவின் அதிரடி முடிவு

'படையப்பா'வில் கதாநாயகியாக ரஜினியுடன் நடித்ததன் மூலம் அதிர்ஷ்ட நடிகை என்ற பெயர் வாங்கிய சௌந்தர்யா, அடுத்தடுத்து அதிகமான படவாய்ப்புகள் வராததால் மனம் நொந்து போனார். அதனால் அதிரடியாக ஒரு முடிவு எடுத்து கோலிவுட்டே எதிர்பாராத விதமாகத் தனது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள முன்வந்தார்.

விளைவு விஜயகாந்தின் 'சொக்கத்தங்கம்' படத்தில் கதாநாயகியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. பாக்யராஜ் இயக்கும் இப் படம் இரு குடும்பங்களுக்குள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இடையே நடக்கும் சண்டையைப் பற்றியது.

ஒரு குடும்பத்திற்குத் தலைவராக விஜயகாந்த்தும், மற்றொரு குடும்பத் திற்குத் தலைவராக பிரகாஷ்ராஜும் நடித்துள்ளனர். சொக்கத்தங்கத்தில் நடிக்க பாக்யராஜ் அழைத்ததும் உடனடியாக ஒப்புக் கொண்டாராம் சௌந்தர்யா.

'சொக்கத்தங்கம்' மார்க்கெட்டில் விலை போகுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



## மினி சினி

* 'துள்ளுவதோ இளமை' புகழ் ஷெரினுக்கு உலகம் முழுவதிலும் உள்ள இரசிகர்கள் கோயில் கட்டப் போவதாக அறிவித்தார்கள். இதைக் கேள்விப்பட்ட ஷெரீன் இரசிகர்களை உடனடியாக அழைத்து இது போன்ற முயற்சிகளில் இறங்க வேண்டாம் என அறிவுரை கூறிக் கோயில் கட்டுவதைத் தடுத்துவிட்டாராம்.

* மணிரத்தனம் படத்துக்காக மேக்-அப் டெஸ்ட் சென்று வந்தாராம் த்ரிஷா இப்போது ரிசல்ட்டுக்காக வெய்ட்டிங்.

* தெலுங்குப் பட வாய்ப்புகள் த்ரிஷாவைத் தேடி வந்தபோதிலும் அவர் "நோ" சொல்லிவிட்டாராம். தமிழில் தன்னை நிலைநிறுத்திய பிறகே மற்ற மொழிப் படங்களை ஒப்புக் கொள்ள ஐடியாவாம்.

* பாரதிராஜாவின் 'ஈரநிலம்' படத்துக்கு வசனம் எழுதியிருப்பவர் தேன்மொழி. இந்தப் பெண் கவிஞரின் 'இசையில்லா இலைகளில்லை' கவிதைப் புத்தகத்தைப் படித்த ராஜா, உள்ளம் நெகிழ்ந்துபோய் இந்த வாய்ப்பைத் தேன்மொழிக்கு அளித்தாராம்.

* ஸ்ரீதேவி விஜயகுமாருக்கு அடுத்தடுத்துப் படங்களாம். 'ப்ரியமான தோழி' படத்தில் மாதவன், ஜோதிகாவுடன் நடிக்கிறார். 'தித்திக்குதே' படத்தில் ஆர்.பி.சௌத்ரியின் மகன் ஜீவாவுக்கு ஜோடி இவர். தெலுங்கிலும் ஒரு படத்தில் நடிக்கிறாராம்.



## 2002 சூப்பர் ஹி

கடந்த ஆண்டில் திரைப்படங்களை விட சில ஹீரோக்கள், ஹீரோயின்கள் பற்றி சூப்பர் ஹிட்களாக வலம் வந்தன.

கமல்-சிம்ரன், சூர்யா-ஜோதிகா, ஸ்ரீகாந்த்-சினேகா, சிலம்பரசன்-ஐஸ்வர்யா, பாலா நீண்டது.

இதில் கமல்-சிம்ரன், ஜோதிகா-சூர்யா ஜோடிதான் அதிகம் 'அறுவையில்' சிக்கி முடிவில் ஸ்ரீகாந்த்-சினேகா ஜோடி குறித்து அதிக அளவில் கிசுகிசுக்கள் பரவின.

'கடலை போடுவதில்' விக்கிரம் மன்னனாகி வருவதாகவும், பல நடிகைகளிடம் பேசி 'கரெக்ட்' செய்வதாகவும், ஜோதிகாவிடம் அப்படி முயற்சித்தபோது, அவர் திட்டி சமீபத்தில் வெளியான ஹாட் விவகாரம்.

'இந்தி நடிகை ரவீனா தண்டனின் உறவுப் பெண் நான்' என்று புருடா விட்டார் அது பொய் என்று கோலிவுட் உறுதி செய்தது.

தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால், பெயரைக் கெடுத்து விடு காயத்ரி ஜெயராம் மிரட்டியதாகவும் செய்தி வந்தது 2002ல்தான்.

## ...வுக்குத் திருமணம் தீபா வெங்கட் காட்டில் மழை!

...பேசுவதில் முன்னணி இடத்தில் இருந்த சவிதா திடீரென்று திருமணம் செய்து கொள்வதால் ... சந்தோஷக் கடலில் மூழ்கியுள்ளார். காரணம், சிம்ரன் மற்றும் ஜோதிகா, லைலா, ... மீரா ஜாஸ்மின், ஷார்மி உள்பட பல கதாநாயகிகளுக்கு டப்பிங் பேசுவது என் ... வெங்கட் மட்டுமே பொருத்தமானவராக இருப்பார் என்ற அபிப்பிராயம்தான்! ...ஒரு படத்துக்கு டப்பிங் பேசுவதற்கு லட்சக் கணக்கில் தன் சம்பளத்தை உயர்த்தத் ...இருக்கிறாராம் தீபாவெங்கட்! அடேங்கப்பா...

## கண்டும் காணாதது போல்....

...கிசுக்கள் வெளியாகிக் கொண்டே இருப்பதால், 'பார்த்திபன் ... படப்பிடிப்பில் ஸ்ரீகாந்த்-சினேகா ஆகியோர் ஒருவரை ...ல் பார்த்துக் கொண்டாலும் ஹலோ சொல்லிக் கொள்வது ...தல் காட்சிகளிலும் பாடல் காட்சிகளிலும் நடிக்கும்போது ... உம்மென்று வைத்துள்ளனர்!

## ... வைரஸ்' நாயகிக்கு வாய்ப்புக்கள்

...வைரஸ்' ஸ்ரீதேவிக்கு நிறைய புதுப் பட வாய்ப்புகள் குவிந்து கொண்டி... ஆனால், விக்ரமன் இயக்கும் 'ப்ரியமான தோழி'... பிருந்தாசாரதி ...கிக்குதே...' ஆகிய தமிழ்ப் படங்களில் மட்டுமே அவர் நடிக்கிறார். ...வே அவர் தெலுங்கில் நடித்த 'ஈஸ்வர்' என்ற படம் வெளியாகி ...ள்ளது. இதனால், ஜூனியர் என்.டி.ஆர். ஜோடியாக ஒரு தெலுங்குப் ...க ஸ்ரீதேவி ஒப்பந்தமாகி இருக்கிறார்.

## ...தியாசமான வேடத்தில் சரத்குமார்

...ப பட்டணம்' படத்தைத் தயாரித்த மாஸ் மூவி மேக்கர்ஸ் எஸ்.எஸ்.துரை ...ரிக்கும் புதிய படத்தை இயக்கும் கே.எஸ். ரவிக்குமார், இந்தப் படத்தில் ... இதுவரை யாரும் வெளிப்படுத்திவிராத தோற்றத்தில் வெளிப்படுத்த முடிவு ...ராம். இதற்காக மூந்நூறுக்கும் மேற்பட்ட கதைகளைத் தேர்வு செய்து, அதில் ...கதை ஒன்றை இயக்கப் போகிறாராம்! சரி, ரஜினி படம்? சரத்குமார் நடிக்கும் ...ம் முடித்தவுடன் ரஜினி நடிக்கும் படத்தை கே.எஸ். ரவிக்குமார் இயக்குகிறார்!

## ஜாஸ்மினின் சங்கடம்

...மீட்டர் கூட கவர்ச்சி காட்ட மாட்டேன் என்று அடம்பிடிக் ...தை' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் மீரா ஜாஸ்மின்! ...ருக்குப் பின்புலமாக இருந்து பலமாக இயக்கும் அந்த ...பக்குநர், "நீ தமிழ்ப் படத்தில் நடித்தது போதும். பேசாமல் ... திரும்பி வந்துவிடு..." என்று அட்வைஸ் செய்கிறாராம். ...யே சொல்லவும் முடியாமல், புதுப்பட வாய்ப்புகளை ...டியாமல் தவிக்கிறார் மீரா.

முகப்பில்

ஷாம்

படம்: பாலா


ஷைரின்



## குண்டு வெடிப்பிலிருந்து உயிர் தப்பிய கமல், மாதவன்

கமல் நடித்து வரும் 'அன்பே சிவம்' படத்தின் ஷூட்டிங் கேரள மாநிலம் மறையூரில் நடந்தது. இதன் படப்பிடிப்பின்போது, வெடிகுண்டு ஒன்று பயன்படுத்தப்பட்டது. இக் குண்டு எதிர்பாராத விதமாக வெடித்து விட்டது.

இதிலிருந்து கமல், மாதவன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். படப்பிடிப்புக் குழுவினர் யாருக்கும் எந்த வித காயமும் ஏற்பட வில்லை.




## ஷமீதாவின் நம்பிக்கை!

'பாண்டவர் பூமி' படத்தில் அறிமுகமாகி, நன்றாக நடித்தும் எடுபடாமல் போனவர் ஷமீதா. ஆனால், தமிழில் முன்னணி நடிகை ஆகிவிட முடியும் என்பதில் இன்னும் அசைக்க முடியாத நம்பிக்கையில் உள்ளார்.

தன்னை அறிமுகப்படுத்திய சேரன் இயக்கத்தில் தயாராகியுள்ள 'விண்ணோடும் முகிலோடும்' படம் தனக்கு மறுவாழ்வு அளிக்கும் என்ற அபார நம்பிக்கைதான் அது. பிரசாந்த்துடன் இதில் ஜோடி சேர்ந்துள்ளார் ஷமீதா. படத்தில் தனது ரோல் நன்கு பேசப்படும் என்கிறார் ஷமீதா.

## நண்பர்களாக யானையும் குரங்கும்


அன்னை காளிகாம்பாள் படத்தில் சீதா என்ற யானையும், ராஜா என்ற குரங்கும் நெருங்கிய நண்பர்களாக நடிக்கின்றன. கதாநாயகியைக் காப்பாற்றுவதற்காக 'ஔவையார்' படத்தில் வருவது போல, முப்பதுக்கும் மேற்பட்ட யானைகள் ஊர்வலமாக வருவது போன்ற காட்சி படமாக்கப்பட்டு உள்ளது. இதற்காக பெங்களூரில் இருந்தும், மைசூரில் இருந்தும் நிறைய யானைகள் வரவழைக்கப்பட்டன! இந்தக் காட்சிக்கு மட்டுமே பல லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

## சம்பளத்தைக் குறைத்த இளையராஜா

'காமராஜ்' படத்துக்காக, தனது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு இசை அமைக்கிறார் இளையராஜா! அ.பாலகிருஷ்ணன் தயாரித்து இயக்கும் இந்தப் படம், அடுத்த மாதம் தமிழகம் முழுவதும் திரைக்கு வருகிறது. படத்தைப் பள்ளி மாணவர்கள் அனைவரும் பார்க்கும் வகையில், சலுகை விலையில் டிக்கெட் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

## ...கிசுக்கள்

...தான் கோவில்பட்டில் ...று இந்தப் பட்டியல் ... அதேபோல, ஆண்டு ... வலியப் போய்ப் ... வந்த செய்திதான் ...ழ் கிரண். ஆனால், ... பிரபுதேவாவை,



## புத்தாண்டிலேனும்

வன்முறையும் கொலைவெறியும்,
நம்மை வழிநடத்தாமல்
அன்பும் கருணையும்
நம்மை ஆட்சி செய்யட்டும்....

முயற்சியும் உழைப்பும்,
வெற்றியளிப்பது போல
புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும்
நம்மை புனிதமாக்கும்....

சுயாட்சியோ சமஷ்டியோ
வடகிழக்கு பிரியாமல்
தமிழர் வாழிடமாகட்டும்...

நீண்ட விடுதலை வரலாற்றில்
மரணித்தவர்களுக்காகவும்
மரணிக்கப்பட்டவர்களுக்காகவும்
எங்கள் இதய அஞ்சலிகள்...

குருதி சொரிந்த
எங்கள் தாயக பூமியில்-இனி
ஜனநாயகப் பூக்கள் மலரட்டும்
கூடவே கருத்துக்களுக்கு
மதிப்பளிக்கும் மனிதப் பூக்கள்
வாழட்டும்...

சமாதானமே!
தடைகளைத் தகர்த்து
இடையூறுகளை சகித்து
எங்கள் இலங்கை மண்ணில்
உன் பாதம் பதியட்டும்....!

திருமலை, எம். ஸ்டாலின்.

## கண்ணீராய் கரையும் காதல்

காதலில் வெறிகண்ட
எனக்கு
உன் வருகையின்
தாமதங்கள்
என் உணர்வில்
தேறிய ஊற்றுக்கள்.

கடைசிவரைக்கும்-உன்
பயணங்கள்
என் கண்களைக் கூட
மிச்சப்படுத்தவில்லை
உன் உருவங்களைக் காணாமல்
இமைக்க மறுத்த
இமைகள்,
ஒவ்வொன்றும்
தொட்டுத் தழுவிய
கண்ணீரால் எத்தனை
வருடம் சென்றாலும்
அதில் உறைந்த
உப்பு கரையாது.

மிச்சம் கொண்ட
பக்குவத்தைக் கூட
பக்குவப்படுத்தினேன்
தோல்வியின் அச்சங்களால்
சத்தம் கூட
போட முடியவில்லை.

அடிமையாய் மண்டியிடுகிறேன்
ரெண்டில் ஒரு
வார்த்தை சொல்லிவிடு.
இல்லையென்றால்
நீயே வந்து கொள்ளியிடு.

என். சுதாகர், பொத்துவில்-10.

## நில் கவனி முன்னேறு...

தகாதவராய் தவறு செய்ய
தயாராகும் தம்பியரே
தப்பான வழிநடந்தால்
தடுக்கி விழநேரும்...

அப்பாவி உயிர் கொல்லி
அனுமதியின்றி நுழையும்.
அன்பான பெற்றோர்க்கு
எஞ்சுவது ஏமாற்றம்...

கல்வியைக் கைவிட்டு
கவனத்தைச் சிதறடித்து
கள்ளுண்ட வண்டாக
களியாடும் நண்பரே...

விட்டது கல்வியல்ல
வளமான வாழ்க்கையை
உண்டது கள்ளல்ல
உருக்கிடும் நஞ்சை...

"கெடுதி"யெனப் பொறித்த
சிகரெட்டைப் புகைப்பவரே
சிகரெட்டுக்கு எரியூட்டவில்லை-உம்
உடலுக்கே சிதையூட்டினீர்...

அற்கஹோலே அமுதென்று
அழகாய் உரைப்பவனே
அறிவாயோ அந்த
அரித்தெடுக்கும் கறையானை...

தள்ளாத வயதிலும்கூட-பல
தாரம் தேடவைக்கும்
சீதையை தேடுபவரே-நீங்கள்
ஸ்ரீராமனா சிந்தியுங்கள்...

போதையெனும் மாயையை
ஒன்று திரண்டு ஒழியுங்கள்
அற்பனாய் அலைந்திடும்
அவலத்தை மாற்றுங்கள்...

அணுவணுவாய் அரிக்கும்
கிருமியை அழியுங்கள்
உள்ளத்தில் தெரிந்திடும்
உம் ஒளிமயமான எதிர்காலம்...!

சிவகரன், பருத்தித்துறை.

## தொலைத்து விட்டேன்

அன்பே!
பார்வையாலே எனை
பலவீனப்படுத்தி
பாசம் காட்டி-என்
மனதில் காதல் என்ற
முத்திரை குத்தினாய்

சந்தித்தால் அன்பாய்
எனை தேற்றினாய்
சந்திக்காமல் உன்னைச்
சிந்தித்தால்-தவிப்பான
ஓர் அம்பை நினைவாலே
என் மீது ஏற்றினாய்

எனை கைவிட்டு
தொலைதூரம்
சென்று விட்டாய்
என் பயணங்கள்
பாதை பாதையாய்
உனை தேடுகிறது.

அன்று அருகில்
இருந்தாய்
சொர்க்கத்தின் சாவி
என் கையில்

இன்று தொலைவில்
இருக்கிறாய்
என்னையே
தொலைத்துவிட்டேன்
நரகத்தின் நடுக்குழியில்.

டி. ரவிகாந்தன்,
திருமலை.

## பிள்ளை பெற்றுப்பார்

உதிரத்தைப் பாலாக்கும்
ஆற்றலை நீ பெறுவாய்

பிள்ளை பெற்றுப்பார்
விழித்திருந்து தூக்கத்தை
நீ இழப்பாய்.

உன் உடல் பசித்திருக்கும்
ஆனால் உனக்கோ
உணவருந்த நேரம்
இருக்காது

கன்னிப் பருவத்துச் சுதந்திரத்தை
நீ இழந்து அல்லும் பகலும்
ஆராரோ பாடுவாய்

மெத்தைச் சுகத்தை நீ
இழந்து பிள்ளை சுகத்தைக்
காத்து நிற்பாய்.

அரிச்சுவடி கற்பிக்கும்
ஆசிரியராக நீ
மாறிடுவாய்.

மாமியார் என்ற பட்டம்
உனக்கு மகுடமாய்
வழங்கப்படும்.
பிள்ளை பெற்றுப்பார்.

உரும்பையூர் கவிக்குயில்.

## மானுடத்தைத் தேடுகிறேன்

கத்தியும் கோடரியும்
துப்பாக்கிக் குண்டுகளும் கொண்டு
வெட்டியும் கொத்தியும்
சூடு குவிக்கப்பட்டிருக்கின்ற
மானுடக் கதிர்களின்
மரண ஓலங்களில்...

மனிதச் சடலங் கொண்டு
பூமியிலுள்ள
மடுக்களை நிரப்பிவிட்டு
மேடை போட்டு
மனிதம் பேசுகின்ற
மானுடம் தின்னிகளிடம்...

நேர்மையையும்
நடுநிலையையும்,
போர்வைக்குள் போட்டு
பொதிகட்டிப்
புதைத்துவிட்டு
செம்மண் தோண்டிப்பார்த்து
செய்தி விடச் சொல்கின்ற
மதி கெட்ட
சதிகாரர்களிடம்...

மனித உரிமையை
புனிதமாய்ப் பேண வேண்டுமென
முன்வந்து உரைத்து
பின்னர்
முன்னின்று கையசைக்கும்
முகங்களைப் பார்த்துப் போய்
முகமூடியணிந்து வந்து...

அவர்களின் மூச்சுக்காற்றுக்கு
முற்று வைக்கும்
முரண்பாட்டுக்காரர்களிடம்...
முடிந்தவரை தேடுகிறேன்
உலகின்
மூலை முடுக்கெல்லாம்
முடியவில்லை
மனிதமுள்ள மானுடம் காண...

புரிந்து கொண்டேன்
மனிதம் மரித்துப்போன
மறு வினாடியே
மானுடமும் மரித்ததென்பது
உண்மையென்று...

இனி
மனிதமென்பது
மீண்டுமொருமுறை
மண்ணில் பிறந்தால்தான்
மானுடத்தைக் காணலாமோ...?

நிந்தநிலா,
எப். மொகமட் பாயிஸ்.

## பேனா நண்பர்கள்



பெயர்: A. Safiullah
வயது: 23
முகவரி:
New Camp-C, Room No-130,
P.O.Box-46649,
ABU Dhabi, U.A.E.
பொழுது போக்கு:
ரி.வி. கிரிக்கெட், தினமுரசு



பெயர்: தி. கனகசபை (அப்பன்)
வயது: 25
முகவரி:
P.O.Box 4365,
Doha, Qatar,
A.G.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: யே. ஆஷா
வயது: 17
முகவரி:
1ம் குறுக்குத் தெரு,
இணுவில் வீதி.
மானிப்பாய்.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.

## தேன் கிண்ணம்

## காதல் தந்த பரிசு

யாருக்குத் தெரியும் எனது
காதலின் முடிவும் கண்ணீர் என்று.
அழகான பெண்களிலும் அன்பானவர்
என்றெண்ணிக் காதலித்தேன்.
அவளோ அவளின் அழகை
அழகான ஆண்கள் அனைவரிடத்திலும்
பங்கு பிரித்துக் கொடுத்து வாழ்கிறாள்
பணக்காரப் பெண்களிலும் பண்பானவள்
என்றெண்ணி ஒரு நிமிடத்திலும் பல
வினாடி அடி மனதில் மகிழ்ந்திருந்தேன்
சராசரிப் பணக்காரர்களில் அவளும்
ஒருவளெனக் காட்டிவிட்டாள்,
அவளின் காதல் நாடகத்தை
அரங்கேற்ற மேடையாக்கினாள்
என் மனதை அன்று
அதனால் இந்த ஏழைக்கு
கிடைத்த பரிசு கண்ணீர் மட்டும்தான்
இன்று.

லூனுவத்த, யெ. திலகேஸ்.

## நினைத்து, நினைத்து சிரிக்க



### எப்படி? எப்படி?

மனைவி 1: உங்க வீட்டுக்காரரு இராத்திரி லேட்டாக்காம சீக்கிரமா வந்துடுறாரே அது எப்பிடி?

மனைவி 2: ஒரு நாளு அவர் லேட்டா வந்து கதவைத் தட்டும்போது 'என்ன சுரேஷ் இவ்வளவு லேட்டு'ன்னு கேட்டேன். அதுக்கப்புறம் அவர் லேட்டாக்கறதே இல்லை.

மனைவி 1: என்ன, இவ்வளவு சாதாரணமாக் கேட்டதுக்கே பயந்துட்டாரா?

மனைவி 2: இல்லை. என் வீட்டுக்காரர் பேரு மகேஷ்.



### காவல் தெய்வம்

நள்ளிரவு. ஒருவன் தெருவில் நடந்து போய்க்கொண்டிருந்தான். அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது:

"அப்படியே நில். ஒரு அடி எடுத்து வைத்தாலும் விளக்குக் கம்பம் உன் தலையில் விழும்..."

திகைத்துப்போய் நின்றுவிட்டான் அவன். அடுத்த வினாடியே அவனுக்கு ரொம்பப் பக்கத்தில் ஒரு விளக்குக் கம்பம் பெருத்த ஓசையுடன் சாய்ந்தது.

திகைப்போடு நடையைத் தொடர்ந்தான். தெரு முனையை நெருங்கும்போது மீண்டும் அதே குரல்: "அப்படியே நில். இல்லை, காரில் அடிபடுவாய்..."

என்ன ஆச்சரியம்...! அவன் நடந்திருந்தால் அவன் மீது ஏறியிருக்கும் என்பது போல ஒரு கார் படுவேகமாக அவனைக் கடந்து போயிற்று.

"ஏய், குரலே நீ யார்?" என்று வானத்தைப் பார்த்துக் கத்தினான் அவன்.

"நான்தான் உன்னைக் காப்பாற்றும் காவல் தெய்வம்..."

இவனுக்குப் பெருத்த சினமாகிவிட்டது.

"என் கல்யாணத்தின் போது எங்கேடா போயிருந்தே நீ?" என்று கத்தினான்.

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

நோபல் பரிசு பெற்ற வோலே ஸோயாங்காவைத் தந்த நைஜீரிய மண்ணின் மற்றுமொரு கவிஞர் கென் ஸரோ விவா. இவர் கவிஞர் மட்டுமல்ல நாவலாசிரியர், நாடகாசிரியர், கல்லூரிப் பேராசிரியர், சூழலியலாளர், மனித உரிமையாளர். நைஜீரிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர். ஒரு கட்டத்தில் எல்லாவற்றையும் உதறிவிட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

நைஜீரியாவில் பொலிஸின் வெஞ்சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், "குண்டர்களும், பூசணிக்காய்களும் ஆட்சி செய்வதைச் சும்மா சோம்பேறித்தனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மனிதத் தன்மையற்றுப் பூமியைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்க இயலாது..." என்று முழங்கினார். உலக எழுத்தாளர் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், சட்ட அமைப்புகள் அனைவரினதும் வேண்டுகோள்களை உதாசீனப்படுத்தி, 1995 நவம்பர் 10ம் திகதி இவரைத் தூக்கிலிட்டுக் கொன்றது நைஜீரிய இராணுவம். இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக கென் ஸரோ விவாவின் இரு கவிதைகள்.

## சிறப்புக் கவிதை

### நிஜமான சிறைச்சாலை

ஒழுகும் கூரையல்ல
ஈரம் கசியும் அசுத்தமான அறைச்சுவருமல்ல
பாடும் நுளம்பின் ரீங்காரமும் அல்ல
சிறைக் கொட்டகையுமல்ல
உன்னைத் தள்ளி கம்பிகளின் பின் அடைக்கும்
காவலாளியின் சாவிச் சத்தமுமல்ல
மனித ஜீவராசிக்கோ மிருகத்துக்கோ
சகிக்க முடியாத
நாற்றமடிக்கும் சிறைச் சாப்பாடும் அல்ல
இரவின் வெறுமையில் மூழ்கும் நாளின் சூன்யமும் அல்ல
இதுவல்ல
இதுவல்ல
இதுவல்ல
தலைமுறையாக உனது காதுகளில்
பறையடிக்கப்பட்டு வரும் பொய்தான் அது
ஒருவேளை சோற்றுக்காக
கொலைகாரக் கட்டளைகளாகச் சொல்வதைச் செய்யும்
பாதுகாப்பு அதிகாரியின் ஓட்டம்தான் அது
சரியானது அல்ல எனத் தெரிந்தும்
தீர்ப்பெழுதிக் கொண்டிருக்கும்
நீதிபதியின் புத்தக எழுத்துக்கள்தான் அது
அறங்களின் அழிவு
மனசாட்சியை அடகுவைத்தல்
சர்வாதிகாரத்துக்கு மிகப் பலமாக அங்கீகாரம் தருவது
பணிவென்கிற போர்வையில் அயோக்கியத்தனம்
கேவலப்பட்ட ஆன்மாவினின்று ஒளிந்துகொள்வது
அது பயத்தினால் நனைந்த காற்சட்டைகள்தான்
எனது சிறுநீரைச் சுத்தப்படுத்தக்கூடத் துணிவற்றிருக்கிறோம்.
இதுதான்
இதுதான்
இதுதான்
அன்பான நண்பர்களே, நமது சுதந்திர உலகை
பாழுஞ் சிறைச்சாலை ஆக்குவது இதுதான்.

### மக்கள் விரோத ஆட்சி

இயற்கைக்கு விரோதமானவைகளே இன்று
நம் நிலத்தை ஆள்கின்றன.
எமது வானத்தின் கூக்குரலைக் கூடக் கேட்க முடியாதவாறு
பசித்தவர்களின் அழுகையை
விநோதமான பிணிகளின் விசும்பலை
செத்துக் கொண்டிருக்கும்
பூமியின் குரலைக் கேட்க முடியாதவாறு
செவிடுகளாக.

இரத்தம் பீறிடக் காயம் பட்ட பூமி
பாலைநிலங்களைப் பிரசவிக்கிறது.
நாம் இயற்கைக்கு விரோதமான காலத்தில்
வாழ்கிறோம்.

மறுபடி இதை நாம் இயற்கையானதாக்க வேண்டும்
நமது பாடல்களின் மூலம்,
நமது அறிவார்ந்த சீற்றத்தின் மூலம்.

(நன்றி: கனவு, மார்ச் 96)

# கிராமத்து வைத்தியம்

இன்று விரல் நுனியில் சிறு வலி ஏற்பட்டாற் கூட வைத்தியரின் ஆலோசனையை நாடும் பழக்கம் நம்மிடையே வேகமாகப் பரவி வருகிறது. இனம் காணப்படாத புதிய வியாதிகள் எல்லாம் வந்து மடிந்து போகும் நிலையில் இந்த முன் அவதானம் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுதான். ஆனால் மருத்துவத்துறை வளர்ச்சியடையாத காலகட்டத்திலும் மனிதன் வெகு ஆரோக்கியமாகவும், திடகாத்திரத்துடனும் வாழ்ந்துள்ளான். இதற்கு முக்கிய காரணம் அக் காலகட்டத்தில் ஏற்பட்ட அனேகமான உபாதைகளுக்கு "கை மருந்து" என்று சொல்லப்படும் கிராமத்து வைத்தியத்தை ஏறக்குறைய எல்லோருமே தெரிந்து வைத்திருந்ததுதான். இன்று எம்மிடையே வழக்கொழிந்து வரும் இம் மருத்துவமுறையின் சில குறிப்புகளை உங்களுக்காக....

## இடுப்பு வலிக்கு

உளுந்து வறுத்து அதன் மா நூறு கிராம், நல்லெண்ணெய் 200 கிராம். கருப்பட்டி அல்லது பனை வெல்லம் 200 கிராம், அமுக்கராங் கிழங்கு மா 100 கிராம். நல்லெண்ணெயைத் தாச்சியில் இட்டு அடுப்பில் வைத்து எரித்து அதில் மேலே கூறிய பொருட்களை இட்டு இளகம் போல் செய்து காலை-மாலை ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் குனிய நிமிர முடியாத இடுப்பு வலிகள் குணமாகும்.

## கால் வெடிப்புக்கு

கால் வெடிப்பு வராமல் தடுக்க, இரவில் படுக்கச் செல்லும் போது பாதங்களில் இலுப்பை எண்ணெய் அல்லது வேப்பம் எண்ணெய் தடவுங்கள். காலையில் பல் துலக்கி நீராகாரம் அல்லது மோர், எலுமிச்சை ஊறுகாயுடன் அருந்துங்கள்.

## சமிபாடடைய

நன்கு சமிபாடாக வேண்டுமா? சுவையான காய்கறி பண்டங்களில் கருவேப்பிலை சேர்த்துக் கொள்ளுங்கள். வாசனையோடு பண்டங்களுக்கு சுவையூட்டி நல்ல ஜீரணமும் கொடுக்கும். பருப்பு அல்லது தேங்காய், புளி, மிளகாய் சேர்த்துத் துவையல் செய்து சர்பபிடுங்கள்.

* வசம்பு 50 கிராம் எடுத்து 200 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் கலந்து உடம்பில் பூசிவர சொறி சிரங்குகள் அகலும்.

* வாயில் புண் அடிக்கடி வருகிறதா? அகத்திக் கீரை, மணற் தக்காளிக் கீரை மாற்றி மாற்றி வெங்காயம் சேர்த்துச் சாப்பிடுங் கள். தேங்காய்ப் பால் சாப்பிடுங்கள். மருதோன்றி இலையை இரவில் நீரில் ஊறவைத்துக் காலையில் வாய் கொப்பளிக்கப் புண்கள் ஆறிவிடும்.

## தாமரைப்பூ இளகம்

உலர்ந்த வெண்தாமரை-செந்தாமரை பொடி 70 கிராம், காசினி 50 கிராம், திராட்சை விதையுள்ளது (உலர்ந்தது) 70 கிராம், சீந்தில் கொடி பொடி 70 கிராம், நெல்லி வற்றல் பொடி 70 கிராம், திப்பிலி 50 கிராம், பசும்பால் 3 லீட்டர், சர்க்கரை அல்லது பனைவெல்லம் 500 கிராம்,நெய் 200 கிராம். இவற்றைச் சேர்த்துப் பொடியாக்கிச் சாப்பிட்டால் அறிவு விசாலமாகும். இதயம், மூளை பலப்படும்.

உடம்பு எரிச்சல் குணமாகத் தினமும் காலையில் கரும்புச்சாறு 100 மில்லியுடன் தயிர் 100 மில்லி கலந்து சாப்பிட உடம்பு எரிச்சல் சரியாகும்.

# பருவமும் பருக்களும்



இளமை என்பது புயல் வீசும் ஒரு பருவம்... உடல் அளவிலும் மன அளவிலும் மாற்றங்களைச் சந்திக்கும் பருவம். நாம் விரும்பினாலும் விரும்பாமல் போனாலும் இந்த மாற்றங்களைத் தவிர்க்கவே முடியாது.

இந்தப் பருவத்தில் வரும் மிக முக்கிய தொல்லைகளில் பருவும் ஒன்று.

இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்படாத இளைஞர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருப்பார்கள். 12 வயது முதல் 25 வயது வரையிலானவர்களுக்கு விதவிதமாகப் பருக்கள் வருகின்றன. பெரும்பாலோருக்கு அழற்சி ஏற்படுத்தாத பருக்கள் வருவதுதான் அதிகம். இந்தகைய பருக்களின் முனையில் வெள்ளையாகவோ கறுப்பாகவோ இருக்கும். சிலருக்கு அழற்சியுடன் கூடிய பருக்கள் வரும்.

முகத்தில் புற்று முளைத்தது போல் சின்னதும் பெரியதுமாகப் பருக்கள் வந்து அடுத்தவர் மத்தியில் அவமானப்படுத்திவிடும். முகத்தில் மட்டுமின்றி கழுத்து, முதுகு, மார்புகள், அரைப்பகுதி ஆகிய இடங்களிலும் வரும். இந்தப் பருக்களிலிருந்து சீழ் வடிவதுண்டு. வடுக்கள் தோன்றுவதும் உண்டு.

இதுபற்றி விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், பருக்கள் பரம்பரையின் காரணமாகவும் வருகிறது, பருவத்தின் காரணமாக ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களாலும் வருகிறது. குடும்பத்தில் பெற்றோர் யாருக்காவது இந்தப் பரு இருந்திருந்தால் பிள்ளைகளுக்கு வரும் வாய்ப்பும் உண்டு. பெற்றோர் இருவருக்குமே இந்த பிரச்சினை இருந்திருந்தால் பிள்ளைகளுக்குப் பருக்கள் வரும் வாய்ப்பு மிக அதிகம் என்கிறார்கள்.

85 வீதமான இளைஞர்கள் பருக்கள் வந்ததால் தங்கள் நண்பர்களைக்கூடப் பார்க்காமல் தவிர்த்து விடுகிறார்கள்.

இத்தகைய பருக்கள் இளம் பருவத்தில் பெண்களுக்குப் பதினாறு வயதிலும் ஆண்களுக்குப் பதின்மூன்று வயதிலும் தோன்றத் துவங்குகின்றன.

இந்தப் பருவத்தில் ஆண்ட்ரோஜென் என்ற சுரப்பி நீரினால் தூண்டப்பட்டு சீபம் என்கிற பொருளைச் சுரக்கும் சுரப்பிகள் செயற்படுகின்றன. இவை சீபத்தை அதிகம் சுரக்கும்போது பருக்கள் தோன்றும். ஹார்மோன்கள் அதிகம் சுரப்பதும், ஹார்மோன் மாற்றமடைவதும் பருவ வயதில்தான் அதிகமிருக்கும். அதனால்தான் இப் பருவத்தில் பருக்கள் அதிகமாக வருகின்றன.

சுரப்பிகள் சுரக்கும் சீபம் உதிர்ந்து போன செல்களை சுரப்பிகளின் வழியாக தோலின் மேற்பகுதிக்குத் தூக்கிக் கொண்டு வரும்.ஏற்கனவே இவ்வாறு தூக்கி வந்த செல்கள் அடைத்துக் கொண்டு அப்படியே கழலையாக மாறத் துவங்கும்.

பருக்கள் ஆண்களுக்குத்தான் அதிகம் வரும். காரணம், பெண்களைவிட ஆண்களுக்கு ஆன்டரோஜென் சுரக்கும் அளவு பத்து மடங்கு அதிகம். கோரின் பாக்டீரியம் அக்னீஸ் என்ற பாக்டீரியாக்கள் தங்கள் பங்குக்குத் தோலில் உள்ள கொழுப்பைச் சிதைத்து அழற்சி உண்டாக்கும் இரசாயனங்களாக மாற்றிவிடுகின்றன. இவையும் பருக்களாக மாறி வெளிவரும்.

காக்கா வலிப்பு, மற்றும் ரி.பி. நோய்க்காகச் சாப்பிடும் மாத்திரைகள், சில ஆங்கில மாத்திரைகள், அலர்ஜியை உண்டாக்கும் மேக்-அப் சாதனங்கள், வாய் வழி சாப்பிடும் மருந்துகள் கூட முகப் பருவை உண்டாக்கிவிடும். சாக்லட், குளிர்பானங்கள், கொழுப்பு உணவுகள் ஆகியவையும் தங்கள் பங்குக்குப் பருக்கள் வருவதைத் தூண்டிவிடும்.

பெண்களுக்கு மாதவிலக்கு வருவதற்கு ஒரு வாரம் இருக்கும் போதுதான் அதிகமாக முகப்பருக்கள் தோன்றும்.

சூரிய வெயிலில் போனால் பருக்கள் குறைகிறது. முகத்தில் இருக்கும் பசையைச் சூரிய ஒளி உலர்த்திவிடுவதால் முகப்பரு தோன்றும் வாய்ப்பும் குறைவதாகக் கூறுகிறார்கள்.

## தடுப்பு

முகப்பரு வராமல் தடுக்க வேண்டுமா? முகத்தை நன்றாகத் தினமும் நான்கு முறையாவது கழுவுங்கள். பருக்களைத் தூண்டும் உணவுப் பொருட்கள், சாதனங்களைத் தவிருங்கள். தேவையில்லாத இரசாயனக் கலவைகளை வாங்கிப் பூசிக்கொள்ளாதீர்கள்.

பருக்களைக் கிள்ளாதீர்கள். இதனால் தோலும் திசுக்களும் பாதிக்கப்படும். பருக்களைக் கவனிக்காமல் விட்டால் முகப் பொலிவு கெடும். திட்டுத் திட்டாக வடுக்கள் இருக்கும். இதைத் தவிர்க்கவும், முகத்தைப் பொலிவுடன் சிறக்க வைக்கவும் சிறந்த மருந்துகள் உள்ளன. பயன்படுத்திப் பலனடையுங்கள்.

# ஆரம்பப் பிள்ளைப் பருவம்

மனித மூளையின் முக்கிய வளர்ச்சிப் பருவம் கருவிலிருந்து ஐந்து வயது வரையும்தான் என கல்வி உளவியலாளர்கள் கூறியுள்ளனர். இதுவே பிள்ளைப் பருவமாகும். பிள்ளைகளின் உடல், உள, சமூக விருத்தி பெற்றார்கள் பிள்ளைகளின் மீது காட்டும் கரிசனையில் தங்கியுள்ளது.

பிள்ளைகள் எப்போது கற்க ஆரம்பிக்கிறார்கள் என்பது பற்றி அறிஞர்களிடையே பல கருத்துக்கள் நிலவுகின்றன. பிள்ளை கருவிலிருந்தே கற்கத் தொடங்குகின்றது. கர்ப்பிணித் தாயொருவர் கர்ப்ப காலத்தில் தனது சகல வேலைகளையும் மென்மையாகக் கையாள வேண்டும். மென்மையான இசையைக் கேட்டு வரும் கர்ப்பிணித் தாயொருவரின் குழந்தை நல்ல ஆற்றல், கற்பனாசக்தி, மென்மை, பொறுமை, சாந்தம் உள்ளவராக வளரும் என மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பிள்ளைக்குத் தாயின் மடிதான் முதற் பாடசாலையாகும். குழந்தையின் மூளை மிகவும் வேகமாக வளர்ச்சி அடையும் இப் பருவத்தில் கிடைக்கும் அனுபவம், அறிவு வாழ்க்கை முழுவதும் நிலைத்து நிக்கக் கூடியதாகும்.



கொம்மினியஸ், ரூசோ, ஜீன் பியாஜே போன்ற கல்விமான்கள் பிள்ளைகளை மையமாக வைத்தே கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் நடக்க வேண்டும்; எதையும் பிள்ளைகள் மேல் திணிக்கக் கூடாது; பிள்ளைகளோடு பின்னிப் பிணைந்து பழகும் போது பிள்ளையின் ஆளுமை விருத்தியும் சமூகத் திறன்களும் வளர்க்கப்படும் என்று கூறுகின்றார்கள். ஆரம்ப பிள்ளைப் பருவத்தினருக்கு விளையாட்டுடன் கூடிய கல்வி முறை சிறப்பானதாக அமையும்.

ஆரம்ப பிள்ளைப் பருவத்தினரின் முதல் பாடசாலை தாய் மடி போல், இரண்டாவது பாடசாலை முன்பள்ளியாக அமைகிறது. பிள்ளையின் மொழி, எண்ணக்கரு விருத்தி, உடல், உள, சமூக விருத்தி போன்றவை சிறப்பான முறையில் விருத்தி அடையும் இடமாகவே முன்பள்ளி அமைகிறது. இந்த ஆரம்பப் பிள்ளைப் பருவத்தினர்கள் கூடுதலாக அன்பையும் அரவணைப்பையும் விரும்புவார்கள்.

இவர்கள் சிந்திக்கும் திறன் கூடியவர்கள். எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள். இப் பருவத்தினர் துருவித் துருவிக் கேள்வி கேட்பார்கள். இவர்கள் குழுவாகச் செயற்படவே விரும்புவார்கள். விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆகவே பெற்றார்களே! இப் பருவத்தினரைக் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். இவர்களின் எதிர்காலம் உங்கள் கைகளில் தங்கியிருக்கிறது என்பதனை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

**செல்வி க. சூரியகுமாரி, சீனக்குடா.**

செல்வாஸின் 7
சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bd
பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18- 01-2003
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
கல்முனை வாசகிக்கு அதிஷ்டம்!


இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்
எம். ரதி
88, உடையார் வீதி, கல்முனை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



நேர முழுவதிலுமப் பாவி தன்னையே
- உள்ளம்
நினைத்து மறுக்குதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால்
-பின்ப
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்!

**சுப்பிரமணிய பாரதியார்-**



## பாப்பா முரசு சிறுகதை

# முல்லாவின் இரு கதைகள்



**ஒ**ரு சமயம் முல்லா வெளியூர் பயணம் மேற்கொண்டார்.

ஒரு காட்டின் வழியே அவர் சென்று கொண்டிருந்தபோது. ஒரு முரடன் அவரை வழிமறித்தான்.

"என்னிடம் என்னப்பா இருக்கிறது? நான் ஒரு வழிப்போக்கன். பரம ஏழை," என்றார் முல்லா.

"ஐயா வழிப்போக்கரே! நீர் முல்லா நஸ்ருதீன் என்பது எனக்குத் தெரியும். நீர் என்னவோ அற்புதமான சக்திகளைக் கொண்டவராமே. அவற்றில் ஏதாவது ஒன்றை இப்போது நீர் எனக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் உமது தலையை ஒரே சீவாகச் சீவிவிடுவேன்!" என்று சொல்லிக் கொண்டே இடுப்பில் மறைத்து வைத்திருந்த பளபளக்கும் கத்தியை எடுத்தான்.

அதைக் கண்டு துளியும் பயப்படாத முல்லா, "நான் அற்புதமான சக்திகளைப் பெற்றிருக்கிறேன் என்று உனக்கு யார் சொன்னது?" என்று முரடனைப் பார்த்துக் கேட்டார்.

"ஊரில் உள்ள மக்கள்தான் பேசிக் கொள்கிறார்களே!" என்றான் முரடன்.

சில வினாடிகள் யோசித்த முல்லா, சட்டென்று நிமிர்ந்து வானத்தைப் பார்த்து, "அதோ பார்! ஆகாயத்தில் கருமேகங்கள் இருக்கின்றதல்லவா. அதற்கும் மேலே நூறு மைல் தொலைவில் ஒரு தங்கப் பறவை பறக்கிறது," என்றார்.

முரடன் நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

கருமேகங்க்ள மட்டுமே அவனது கண்களுக்குத் தெரிந்தன.

"என்ன ஓய்... கருமேகங்கள் தான் என் கண்களுக்குத் தெரிகின்றன. அதற்கு மேல் பறக்கும் தங்கப் பறவை என் கண்களுக்குத் தெரியவில்லையே," என்றான்.

"அந்தத் தங்கப் பறவையைப் பார்ப்பதற்குத் தேவை, நம் தலை சீவப்படும் என்ற பயம்!" என்றார் முல்லா.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட அந்த முரடன், "தங்கப் பறவையைப் பார்ப்பதற்காக என் தலையை இழக்க நான் தயாரில்லை. தங்கப் பறவையை விட எனக்கு என் தலையே முக்கியம். முல்லா.. நீர். உண்மையிலேயே மேதாவிதான்!" என்று சொல்லிவிட்டுக் கத்தியைத் தனது இடுப்பில் செருகி னான்.

மூளை இருந்ததால் முல்லா தப்பித்ததோடு, ஒரு முரடனையும் நல்வழிப் படுத்தித் திருத்தினார்.

❀◆❀

**மு**ல்லா நஸ்ருதீனை பலரும் கிண்டல் செய்வர். ஆனால், முல்லா நஸ்ருதீன், தனது அறிவைக் கொண்டு அவர்களின் மூக்கை உடைத்து விடுவார்.

ஒரு நாள் ஒரு மனிதன் அவரைக் கிண்டல் செய்யும் எண்ணத்தோடு அவரை அணுகினான்.

"முல்லா நஸ்ருதீன்! நேற்றிரவு நான் உறக்கத்தில் இருந்தபோது, என் திறந்திருந்த வாயின் வழியே ஒரு எலி நுழைந்து என் வயிற்றுக்குள் போய் விட்டது. அதை அகற்றுவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்!" என்று கிண்டல் கலந்து கேட்டார்.

அவர் கிண்டல் செய்கிறார் என்பதை உணர்ந்த முல்லா அவரது மூக்கை உடைக்க விரும்பினார்.

"அப்படியா! வயிற்றுக்குள் போன அந்த எலியை அகற்ற ஒரே ஒரு வழிதான் உள்ளது. ஒரு பூனையைப் பிடித்து நீ விழுங்குவதுதான் அந்த வழி!" என்றார்.

அடுத்த வினாடி-

கிண்டல் செய்தவர் காணாமல் போனார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.01.2003.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 479**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 477

**பரிசுக்குரியவர்:**
**எ.ஃப்.எஸ். சர்மிலா,**
மு.க.வி. கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **கே. தயானி,** மௌபிரேய் கல்லூரி, கண்டி. | **உ. விஜ்யூ,** கேம்பிரிஜ் சர்வதேச பாடசாலை, கொழு.15. |
| **தி. ஞானேஸ்வரன்,** அருள்மனை சிறுவர் இல்லம், மானிப்பாய். | **ஜெ. காஞ்சனா,** வடிவாம்பிகா த.ம.வி., முன்னேஸ்வரம், சிலாபம். |
| **எம்.என்.எ.ஃப்.ரிப்கா,** துருக்கராகம, கஹட்டகஸ்திகிலிய. | **எம்.எஸ். துஷ்யந்தன்** தர்மதூத கல்லூரி, பதுளை. |
| **தேவராஜா புவனேஸ்வரன்,** 103, மூன்று முறிப்பு சந்தி, கண்டி வீதி, வவுனியா. | **பூ. கிரிஷாந்** 18/1, அன்னை திரேசா வீதி, இறம்பைக்குளம், வவுனியா.. |
| **ஞா. சாயி அஸ்வின்குமார்,** 208, ஹெரவப்பொத்தான வீதி, வவுனியா. | **வ. மிறின் தனோஜன்,** 145, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா. |

# காகிதம்

**கா**கிதம் உற்பத்தி செய்வதற்கு அடிப்படைத் தேவை தாவரங்களில் காணப்படும் நார்கள் (Fibres), சணல், கெனாவ் (Kenaf), மூங்கில், பருத்தி, பதிமருந்து மரம் (Eucalydtus), வைக்கோல், கரும்புச் சக்கை என்பனவற்றில் வலிமை மிக்க நார்கள் அதிகம் காணப்படுகின்றன. இதே போன்று அச்சகங்களிலிருந்து வெளியேற்றப் படும் கழிவுக் கடதாசியிலும் நிறைய நார்கள் காணப்படுவதாகத் தரம் மதிப்பீட்டு இலாகாவினரின் பரிசோதனைகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் காகித ஆலைக்கு வருடமொன்றிற்கு ஐம்பது முதல் அறுபதினாயிரம் மெட்றிக் தொன் மூலப்பொருள் தேவைப்படுகிறது. இதனால் இத் தாவரங்கள் அனேகமாகப் பண்ணைகளில் பயிரிடப்படுகின்றன. அத்துடன் சில தனிப்பட்ட விநியோகஸ்தர்கள் இவற்றைக் காகித ஆலைக்கு நேரடியாகவும் கொண்டு சென்று கையளிக்கிறனர். இதனால் விவசாயிகளுக்கு மேலதிக வருமானம் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

காகிதத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் இவ்வரிய கலையைக் கற்றிருந்தனர். ஐரோப்பியர்கள், அரேபியர்கள் மற்றும் ஆசிய நாட்டவர்கள் போன்றோர் காகித உற்பத்தித் தொழில் நுட்பத்தை இவர்களிடமிருந்தே கற்றறிந்தனர்.

இந்தியாவில் ஆயிரத்து எண்ணூற்று எழுபதாம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் முதன் முதலில் காகித ஆலையொன்று நிறுவப்பட்டது. தற்போது அங்கு எழுபதிற்கு மேற்பட்ட காகித ஆலைகள் இயங்கி வருகின்றன. எனினும் உற்பத்தியில் தன்னிறைவு காண முடியாதுள்ளது. நவீன உலகத்து மக்களிடையே கடதாசிப் பாவனை அதிகரித்துள்ளமையே இதற்குரிய காரணியாகும்.

நம் நாட்டைப் பொறுத்தவரை வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டியா போன்ற நகரங்களில் இரு பாரிய காகித ஆலைகள் இயங்கி வருகின்றன. களுத்துறை மாவட்டத்திலுள்ள நேபொட என்ற கிராமத்திலும் சிறியளவிலான காகித ஆலையொன்று இயங்குகின்றது.

காகித உற்பத்திக்குப் பெருமளவு தண்ணீர், இரசாயனப் பொருட்கள், பல்வேறு வர்ணத்திலான சாயம் (Dye), நீராவி மற்றும் மின்சாரம் என்பனவும் அத்தியாவசியமானவை. ஆரம்பத்தில் காகிதம் கைகளினாலேயே தயாரிக்கப்பட்டது. தற்போது அதிகம் காகிதம் உற்பத்தி செய்யும் நாடுகளாக கனடா, அமெரிக்கா, ஜப்பான், பின்லாந்து போன்றவை விளங்குகின்றன.

இலங்கையில் தற்போது கடதாசி உற்பத்திக்குப் பயன்படும் பிரதான மூலப்பொருள் கழிவுக் கடதாசியாகும். வைக்கோலை மூலப் பொருளாகப் பயன்படுத்தினால் சுற்றுச் சூழல் மாசடையும். இதனைக் கருத்தில் கொண்டு வைக்கோல் பாவனை நிறுத்தப்பட்டது.

உயர்ரகத்திலான கடதாசி தயாரிக்கும் போது மட்டும் சுவீடன், கனடா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெளிறிய கிறாப்ற் பிளீச்ட் (Bleached Kraft) கட்டுக் கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆயிரம் முதல் ஐயாயிரம் கிலோ கிராம் எடையினையுடையதாய் காகித உருளை (Parent Reel) உற்பத்தியானதும் அதனைக் கம்பனிகளின் தேவைக்கேற்ற விதத்தில் சீற்றுக்களாகவும் காகித உருளைகளாகவும் மாற்றம் செய்யப்படுகின்றது.

கனடாவிலுள்ள காகித ஆலையொன்றின் மீள்சுற்றி (Rewinder) இயந்திரம் எலெக்ரோனிக் மூலம் இயங்குவதையும் சுமார் எழுநூற்று ஐம்பது மில்லி மீட்டர் விட்டத்தையுடைய ஐந்து சிறிய காகித உருளைகளை உற்பத்தி செய்துள்ளமையும் படத்தில் காண முடிகின்றது.

**ஆக்கம்:- காகித நகர்**
**அருணா தருமலிங்கம்.**

## TOP TEN

### இவ்வாரம்:- உலகின் மிகப் பெரிய பாலைவனங்கள்

| பாலைவனம் | அமைவிடம் | அண்ணளவான பரப்பு சதுரகிலோமீற்றர் | சதுரமைல் |
|---|---|---|---|
| 1. சஹாரா | வட ஆபிரிக்கா | 9,000,000 | 3,500,000 |
| 2. அவுஸ்திரேலியன் | அவுஸ்திரேலியா | 3,800,000 | 1,470,000 |
| 3. அராபியன் | தென்மேற்கு ஆசியா | 1,300,000 | 502,000 |
| 4. கோபி | மத்திய ஆசியா | 1,036,000 | 400,000 |
| 5. கலஹாரி | தென் ஆபிரிக்கா | 520,000 | 201,000 |
| 6. துருக்கிஸ்தான் | மத்திய ஆசியா | 450,000 | 174,000 |
| 7. ரக்லா மஹன் | சீனா | 327,000 | 125,000 |
| 8. நமிப் | தென்மேற்கு ஆபிரிக்கா | 310,000 | 120,000 |
| 8. சொனரன் | ஐக்கிய அமெரிக்கா/மெக்சிக்கோ | 310,000 | 120,000 |
| 10. சோமாலி | சோமாலியா | 260,000 | 100,000 |
| 10. தார் | வடமேற்கு இந்தியா/பாகிஸ்தான் | 260,000 | 100,000 |

## இந்த வாரப் புதிர்




'ஆ'வை முதல் எழுத்தாகக் கொண்டு எட்டு இரண்டெழுத்துச் சொற்களை கண்டுபிடியுங்கள். (1. உயிர், 2. கடவுள், 3. இச்சை, 4. பெண்ணுக்கு எதிர்பால், 5. தொழிலகம், 6. 7வது மாதம், 8. உத்தரவு

## அறிவுத்

சென்றவாரப் புதிரின் விடை:



# அம்மா வேலைக்குப் போகிறாள்...!



மெய்யன் நட்ராஜ்

குழந்தையைப் பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு, அந்த நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்த வாசுகிக்குக் கொஞ்சம் பதற்றமாக இருந்தது. உயர்தரத்தில் நல்ல பெறுபேறுகளுடைய சான்றிதழ் கையில் இருந்தாலும் அந்த ஒரு வேலைக்காக அங்கு வந்திருந்த கூட்டத்தைக் கண்டபோது நம்பிக்கை தளர்ந்து போனாள். குழந்தைக்குப் பால் வாங்கக் கூடக் காசில்லாத நிலையில் கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அவள் "கடவுளே! எப்படியாவது இந்த வேலை எனக்குக் கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள். அந்த வேலை ஒன்றும் அவ்வளவு பெரிய வேலை இல்லைதான். ஆனாலும் இந்த நேரம் அந்த வேலை கிடைத்தால் லொட்டரி சீட்டில் இலட்சம் விழுந்தது போல இருக்கும் அவளுக்கு.

ஒரு ஐந்து வயதுக் குழந்தைக்குத் தினமும் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். மாதம் இரண்டாயிரம் சம்பளம். இரண்டாயிரம் இந்தக் காலத்தில் ஒரு நல்ல உடை வாங்குவதற்குக் கூடப் போதாது. கிழிசல் உடையோடு இருந்துவிட்டாலுங்கூட வெறும் வயிற்றோடு அதிக நாள் இருக்க முடியாதுதான்! அதனால் இந்த இரண்டாயிரம், இல்லாததற்கு பரவாயில்லை என்ற நோக்கோடு வந்தாள். இங்கு வந்தபோதுதான் இந்த வேலைக்கும் கூட இத்தனை போட்டி இருப்பதை உணர்ந்தாள்.

ஓரளவு நாகரிக உடைகளில் ரதியாக இல்லாவிட்டாலும் அநாகரிகமில்லாமல் வந்திருந்த பெண்களில் ஒருத்தியாக நிற்க நேர்ந்தபோதுதான் அவளுடைய நிலை அவளுக்குத் தெரிந்தது. என்ன செய்ய... விதி இந்தச் சின்ன வயதில் அவளின் வாழ்வில் பெரிதாய் விளையாடிவிட்டது கொடுமையிலும் கொடுமை.

"வாசுகி" என்று அழைக்கப் படபடப்போடு கோப்புக்குள் இருந்த தனது சான்றிதழைத் திறந்து பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

"குட் மோனிங் சேர்" என நடுத்தர வயதையொத்த அந்த மனிதருக்கு வணக்கம் சொல்ல, "குட் மோனிங் குட் மோனிங். உட்காருங்க" என்று அவர் அவளை அமரவைத்துவிட்டு,

"உங்க பேர்"

"வாசுகி சுந்திரமூர்த்தி"

"நான் உங்களை வாசுகி என்று கூப்பிடலாமா?"

"யெஸ் சேர்"

"இங்க பாருங்க வாசுகி, இந்த வேலைக்குப் பொருத்தமான ஒரு ஆளைத் தேடிக்கொண்டிருக்கேன். அதனால் வழக்கம் போல இல்லாமல் சற்று வித்தியாசமா சில கேள்விகள் கேட்கப் போறேன். இதுக்கு நீங்க சொல்கிற பதிலை வைத்துத்தான் தேர்வு செய் வேன் ஓ.கே."

"ஓ.கே. சேர்"

"நீங்க இதுக்கு முன்பு எங்காவது வேலை செய்திருக்கிறீங்களா"

"இல்லை சேர்"

"வேலைக்கு ஏதும் விண்ணப்பமாவது செய்திருக்கிறீர்களா?"

"அதுவும் இல்லை சேர்"

"ஏன்?"

"ஏன்னா இதுவரைக்கும் நான் வேலைக்குப் போகனும் என்ற அவசியம் இல்லாமல் இருந்தேன்."

"இப்போ இந்த வேலைக்கு வர வேண்டிய அவசியம்,"

"குழந்தையை வளர்க்க வேண்டிய அவசியம் சேர்."

"அப்ப உங்க கனவர் என்ன செய்கிறார்?" இந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ந்தவளாய்,

"எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை சேர்."

"அப்படீன்னா!"

"இது என்னோட அக்கா பிள்ளை சார். போன மாதம் புற்றுநோயால் ஆஸ்பத்திரியில் இருந்த அம்மாவைப் பார்க்க எங்க அக்கா, அத்தான், குழந்தை எல்லோரும் வந்திருந்தாங்க. வந்திருந்தவங்களைக் கூட்டிக் கொண்டு பிள்ளையை என்னிடம் விட்டுவிட்டு என் அப்பாவும் சேர்ந்து போனார். இவங்க போன பஸ் விபத்திலே சிக்கி மூனுபேரும் அந்த இடத்திலேயே இறந்திட்டாங்க சேர்...!" என அழுதவளை,

"ஓ... ஐசே.. சொரி... சொரி... நான் உங்க நிலைமை புரியாமல் கேட்டுவிட்டேன். சரி இப்போ உங்க அம்மா எப்படி இருக்காங்க."

"இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியிலே அம்மாவும் அவங்களோட போயிட்டாங்க சேர். இப்ப எனக்கு உறவுன்னு என் அக்கா குழந்தை மாத்திரம்தான். சேர் தயவு செய்து எனக்காக இல்லாவிட்டாலும் அந்தப் பச்சைக் குழந்தையின் பசியைப் போக்குவதற்காகவாவது இந்த வேலையை எனக்குக் கொடுங்க சேர். ப்ளீஸ் சேர்" என்றவளைப் பார்த்த அவர்,

"மிஸ் வாசுகி. உங்க நிலைமை பரிதாபத்திற்குரியதுதான். இந்த சின்ன வயதிலே உங்களுக்கு இப்படி ஒரு நிலை என்கிறபோது எனக்கும் மனதுக்குக் கஸ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் கொடுக்கப்போகும் வேலை என் குழந்தையோட கல்வி சம்பந்தமானது. கல்விதான் ஒரு பிள்ளையின் எதிர்காலத்தற்காகப் பெற்றோர் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய செல்வம். அதைச் சரியான முறையில் வழங்கிவிட்டால் வேறு எந்தச் சொத்தையும் பிள்ளைக்காகச் சேர்த்து வைக்க வேண்டிய அவசியமே இல்லை. அதனால் யாருடைய விருப்பு வெறுப்புக்களையும் மனதிற்கொண்டு இந்த வேலையைக் கொடுக்காமல் திறமை அடிப்படையிலேயே கொடுக்க இருக்கிறேன்" என்றவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவளை அனுப்பிவிட்டார்.

"ச்சே... என்ன மனிதர் இவர். கொஞ்சம் கூட கருணையே இல்லாமல், ஐந்து வயதுப் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க என்ன தகுதி வேண்டிக் கிடக்கு...?" மனதுக்குள் அழுதவளாய் என்ன செய்வதெனப் புரியாமல் வீட்டிற்கு நடந்தாள்.

இரண்டு நாள் செல்ல அவளின் முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது. யாராக இருக்கும் என்று பிரித்துப் பார்த்தாள். முன் பின் அறிமுகமில்லாத கையெழுத்தில் இருந்தது அந்தக் கடிதம்.

அன்புள்ள வாசுகிக்கு! இரண்டு நாட்களுக்கு முன்பு நேர்முகத்திற்காக வந்திருந்த உங்களின் பரிதாப நிலையைப் புரிந்துகொண்டேன். என்னால் அந்த வேலையை உங்களுக்கு வழங்க முடியாது போய்விட்டது. என்றாலும் அம்மா இல்லாத என் குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும் பொறுப்புள்ள ஒரு ஆள் தேவைப்படுகிறது. தாயாகாமல் தாயைப் போல ஒரு பிள்ளையை வளர்க்கும் சூழ்நிலையில் இருக்கும் நீங்கள் என் குழந்தையையும் ஒரு தாயாய் வளர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எல்லாச் சலுகைகளையும் உங்களுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே உடனடியாக இந்த அம்மா வேலைக்கு உங்கள் குழந்தையோடு வரவும். இப்படிக்கு மா. ஆனந்தமூர்த்தி.

கடிதத்தை வாசித்த வாசுகி ஆனந்தத்தால் சிறகடித்துப் பறந்தாள், அந்த அம்மா வேலைக்கு.

# சொல்ல மறந்த கதை

எஸ். சிவம், கோட்டைக்கல்லாறு

கோலாகலமாக நடந்து கொண்டிருந்த அந்தக் கோயில் திருவிழாவில் திவ்யாவைக் கண்ட சுந்தர் சற்று சலனமடைந்தான். கூட்டத்தோடு கூட்டமாக அவளருகில் நின்று அவளை இரசித்தான். அவள் கண்களும், அழகான முகமும் அவன் மனதை நிறைத்து இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கத் தூண்டின.

தன்னை ஒரு இளைஞன் உற்றுப் பார்த்திருப்பதை அறிந்த திவ்யா முறைத்தாள். இருப்பினும் தன் அகன்ற விழிகளால் இடையிடையே அவனைப் பார்த்துக் குனிந்தாள். இருவர் மனதிலும் ஒருவரை ஒருவர் ஆசை தீரப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கின. திருவிழா சாமம் மூன்று மணிக்கு முடிவதற்கிடையில் இருவரின் கரங்களும் இணைந்தன.

இணை பிரியா உள்ளங்களாய் இருவரும் பழகத் தொடங்கினர்.

அவள் மீது கொண்ட மோகத்தால் சுந்தர் இறுகிப்போய் இருந்தான்.

காலம் கனிந்து கல்யாணப் பேச்சு அடிபட்டது. திவ்யாவின் தந்தை "திவ்யா உன் கல்யாணத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு நான் நினைத்திருக்கிறேன். நீ என்னம்மா சொல்றே" என்றார்.

திவ்யா, "சுந்தரிடம் கேட்டுச் சொல்கிறேன் அப்பா" என்று கூறிச் சமாளித்தாள்.



மறுநாள் சுந்தரின் ஆபீசுக்குச் சென்ற திவ்யா "சுந்தர் நம் கல்யாணம்" என்று தொடங்குவதற்கிடையில் சுந்தர் "ஒரு நல்ல நாள் பார்க்கவும். அந்த நாளில் ஆடம்பரம் இல்லாமல் யாருக்கும் தெரியாமல் இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொள்வோம்" என்றான். திவ்யா ஆனந்தத்தில் தத்தளித்தாள். மனதிற்குள் ஏதோ முணுமுணுத்தாள். நாள் குறிக்கப்பட்டது. குறிக்கப்பட்ட நாளில் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

முதலிரவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய முதல் இரவில் ஒரு மணித்தியாலத்தை அவளுடன் கழிக்க நினைத்த சுந்தர் அரை மணித்தியாலம் அவளுடன் சந்தோசமாய் கழித்துவிட்டு மிகுதி அரை மணித்தியாலத்தில் அவளுடன் கதைப்பதற்குத் தயாரானான். சுந்தரின் நெஞ்சுக்குள் படபடப்பு. முகத்தில் முத்து முத்தாக வியர்வை. சுந்தரின் நிலையைக் கண்ட திவ்யா "என்ன சுந்தர்" என்றவாறு மஞ்சளும் சிவப்பும் கலந்த தன் சேலைத் தலைப்பால் அவனின் கறுத்த முகத்தைத் துடைத்தாள்..

தன் உள்ளத்தை உறுத்திய "சொல்ல மறந்த கதையை" அவன் சொல்ல ஆரம்பித்தான்.

"ம்... திவ்யா! நான் சொல்றத பொறுமையாக நீ கேட்கனும்... ம்... எனக்கு ஏற்கனவே திருமணமாகி குழந்தை ஒன்றும் இருக்கிறது. அவங்க மேட்டுப்பட்டி கிராமத்தில இருக்கிறாங்க. நான் தற்செயலாக உன்னைக் கண்டதும் உன் அழகில் மயங்கி என்னை மறந்தேன். உன் சிவந்த நிற மேனி என் உணர்வுகளை உசுப்பியது" என்பதற்கிடையில் திவ்யா குறுக்கிட்டு,

"சுந்தர் அப்படியானால் ஏன் இதை முதலில் என்னிடம் சொல்லவில்லை" என்றாள்.

சுந்தர்! ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு "காரணம் திவ்யா உன் அழகு, உன் கண்கள், உன் குழிவிழும் கன்னம் என்னைக் கைதியாக்கி அந்தக் கதையை சொல்ல மறக்க வைத்து விட்டது" என்று சுந்தர் கூறி முடிப்பதற்கிடையில் திவ்யா கோபம் கொண்டவளாய் கலைந்து கிடந்த சேலையை அள்ளிச் செருகிக் கொண்டு கதவைத் திறந்து கொல்லைப்புறம் ஓடினாள். பாதாளக் கிணற்றிற்குள் பாய்ந்தாள். உயிரையும் மாய்த்தாள்.

அப்பொழுதுதான் அருகில் உள்ள கோயில் மணி ஓசைச் சத்தம் சுந்தரின் காதுகளைத் துளைத்தது. துடித்தெழுந்தான். நேரம் காலை ஐந்து நாற்பதைக் காட்டியது. கண்டது கனவென்பது புரிந்தது.

# திரும்பும் அம்புகள்

அங்கம் 02

"சரி சரி கிளம்பு... சார்கிட்ட வேலை பாத்துகிட்டு இப்படியா டப்பாவை உருட்டிகிட்டு போவே.." என்று ஒரு மாதிரி வருத்தப்பட்டார்.

"சி.எம்.மே சொன்னாலும் அசரமாட்டேன்னிங்க.. எங்க முதலாளி அவரைவிடவா பெரியவர்?"

"தம்பி.. வாயைப் பிடுங்காதப்பா. உனக்கு புண்ணியமா போகட்டும். கிளம்பு முதல்ல..." பிடித்து தள்ளிவிட்டார்.

அவனிடம் மீண்டும் சிரிப்பு!

'அரிமா மாளிகை' என்கிற பெயர்ப் பலகையைக் கடந்து இருபுறமும் நெட்டிலிங்க மரம் சூழ்ந்த மண்பாதையில் விரைந்தது வேணுவின் மொபெட்!

எதிரில் செங்கற்களின் உதவியே துளியும் இல்லாதபடி கட்டப்பட்டது போல ஒரு கருங்கல் மாளிகை.

அந்த நாளில் அரசர்கள் கட்டிக் கொண்ட அரண்மனை போலவே இருந்தது.

முகப்பில் ஒரு பெரிய வட்ட வடிவ தண்ணீர்த் தொட்டி. அதில் நீர் தளைகள் மலிந்து கிடந்தன. நடுவில் அரை நிர்வாணத்தில் பெண்ணொருத்தி பானையுடன் சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

அந்த இடத்தை நெருங்கவும் வண்டியின் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டு மொபெட்டை தள்ள ஆரம்பித்தான் வேணு.

மிக அமைதியாக இருந்தது சூழ்நிலை.

சுற்றிலும் எல்லாவிதமான மரங்களும் வளர்க்கப்பட்டு எல்லா ஜாதி பறவைகளும் குடியேறியிருந்தன. அதிலும் பருத்த மகிழ மரத்தில் மட்டுமே நூற்றுக் கணக்கான பறவைகள் இருந்தன.

தலையெங்கும் உதிர்ந்து கிடக்கும் மகிழம் பூக்கள். அதன் காரணமாக கும்மென்று ஒருவித வாசம்!

அந்த வாசனையை வேணு மிகவும் விரும்புவான்.

இழுத்து மூச்சுவிட்டு அந்த இலவச இன்பத்தை அனுபவித்தபடியே மரத்தினடியில் ஒரு ஓரமாக மொபெட்டை ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான். மொபெட்டும் ஒரு மாதிரி சாய்ந்து கொண்டுதான் நிற்கும். ஸ்டாண்டின் ஒரு கக்கத்தில் சில அங்குலம் வரை துருவேறி உதிர்ந்துவிட்டது. அதை அட்ஜஸ் செய்ய ஒரு கல்லை முட்டுக் கொடுப்பான். அதற்காகவே பல கற்களை பொறுக்கி வந்து அருகில் வளர்ந்திருந்த செம்பருத்திப் புச்செடியின் அடிக் குழியில் போட்டு வைத்திருந்தான். அதில் ஒரு கல்லை எடுத்து முட்டுக் கொடுத்து நிறுத்திவிட்டுத் திரும்பி நடந்தான்.


மாளிகை முகப்பில் அந்தக் காலத்திய வாக்ஸ் ஹால் கார் ஒன்று நல்ல கறுப்பு நிறத்தில் நின்று கொண்டிருந்தது.

அது இருந்தால் அரிமா பொன்னம்பலம் மாளிகையில் இருக்கிறார் என்று அர்த்தம். டிரைவர் வெள்ளைக் கண்ணுசதா காரைத் துடைத்து கொண்டே இருப்பான்.

இப்பொழுதும் துடைத்துக் கொண்டுதானிருந்தான்.

பொன்னம்பலத்துக்கு எல்லாமே துப்புரவாக பளிச்சென்று இருக்கவேண்டும்.

ஆள் பார்ப்பதற்கு கொஞ்சம் கபில்தேவ் மாதிரி இருப்பார். கிரிக்கெட்டிலும் நிறைய ஆர்வம் உண்டு. அவர் விளையாடவென்றே மாளிகைக்குத் தென்பக்கத்தில் நல்ல செவ்வகத்தில் துளியும் மேடு பள்ளம் இல்லாதபடி ஒரு கிரவுண்ட்.



அதில் நடுவில் பக்காவாய் தயாரிக்கப்பட்ட போட்டிங் பிட்ச். பிட்சிலும் ஸ்டம்புகள் நடப்பட்டு தயாராக இருந்தன.

வேணு பொன்னம்பலம் மாளிகையில் வேலைக்கு சேர்ந்து ஒரு வருடம்தான் ஆகிறது. எலெக்ட்ரீஷியன் ஆக இருக்கிறான்.

யாராக இருந்தாலும் மாளிகைக்குள் இருக்கும்போது யூனிஃபார்ம் போட்டுக் கொள்ள வேண்டும். சிமெண்ட் கலரில் பேண்டும் சர்ட்டும்தான் யூனிஃபார்ம்.

அதைப் பாதுகாப்பாய் வைத்துக் கொள்ள பீரோ லாக்கர்கள் கூடத் தரப்பட்டிருந்தன.

உள்ளே மட்டும் 24 பேர் வேலை பார்க்கிறார்கள். இவர்களெல்லாம் பொன்னம்பலம் கிரிக்கெட் விளையாட விரும்பும் போது ஞாபகமாய் கிரவுண்டுக்கு வந்துவிட வேண்டும்.

வந்து அவர் சொல்லும் இடத்தில் நின்று விளையாட வேண்டும். நன்றாக விளையாடினால் இனாமெல்லாம் தருவார். அப்போது அவரது ஆறு பெண்களும் மாளிகையின் மாடியில் இருந்து பார்த்தபடி இருப்பார்கள். தப்பித் தவறிக்கூட கிரவுண்டுப் பக்கம் வர மாட்டார்கள். அப்படி ஒரு வளர்ப்பு! மாளிகைக்குள்ளும் யாருடனும் பேசமாட்டார்கள். யாரும் அவர்களுடன் அநாவசியமாக பேசவும் கூடாது.

மூத்தவள் வளர்மதி, அடுத்தவள் வண்ணமதி,

மூன்றாமவள் இந்துமதி, நான்காமவள் காந்திமதி, ஐந்தாமவள் வான்மதி, ஆறாமவள் சாருமதி! ஒருவருக்குக்கூட கல்யாணமாகவில்லை. இவர்களைக் கடந்து ஏழாவதாக பொன்னம்பலத்துக்கு ஒரு மகன் இருக்கிறான். மார்த்தாண்டன் என்கிற வீரமான பேர் அவனுக்கு... ஆனால் அவனுக்கும் வீரத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஒரு பல்லியைப் பார்த்தால் கூட பயப்படுவான். ஒரு முறை நல்ல மழை பெய்தபோது பெரிதாக இடி இடித்தது. மார்த்தாண்டனுக்குப் பயத்தில் காய்ச்சலே வந்துவிட்டது. அப்படி ஒரு வீர லட்சணம் அவனுக்கு...

மொத்தத்தில் பொன்னம்பலம் குடும்பத்தை நினைத்தால் அங்கே வேலை பார்ப்பவர்களுக்கெல்லாம் குப்பென்று வியர்த்துவிடும்.

அவரையும் நல்லவரா கெட்டவரா என்று இனம் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

திடீரென்று தட்டிக்கொடுத்துத் தன் கைமோதிரத்தைக் கழட்டி எல்லாம் போட்டுவிடுவார். அப்படியே மறுநாள் மாறி கிரவுண்டைச் சுற்றி ஓட விட்டுவிடுவார்.

அதிலும் அமாவாசை பௌர்ணமிகளில் கேட்கவே வேண்டாம். இன்றைக்குக் கூட பௌர்ணமி.

வேணு யூனிஃபார்ம் மாட்டிக் கொண்டு வேலை நேரத்துக்கு பத்து நிமிடம் முன்னதாகவே தனது ஆயுதங்களான டெஸ்டிங் லைட், ஸ்க்ரூ டிரைவருடன் மாளிகைக்குள் நுழைந்துவிட்டான்.

அப்போது எதிரில் மூத்தவள் வளர்மதி நல்ல அரக்கு நிற பட்டுத்தாவணி சட்டையில் அவன் எதிரில் தோன்றி "ஏய்... என் ரூம்ல ஏ.சி. சரியா வேலை செய்யல... என்னன்னு வந்து பாரு." என்றாள். அடுத்த நொடியே அவளது அறைக்குள் நுழைந்து ஏ.சி. பாக்ஸ் அருகே போய் நோட்டம் போடத் தொடங்கினான் வேணுவும்.

(அம்புகள் தொடரும்..)

**இந்திரா சௌந்தர்ராஜன்**

# ஆறுமனமே ஆறு!

## குடும்பப் பிளவு..... 01

புதுக்கோட்டை மாவட்டதிலுள்ள அழியாநிலை அகதிகள் முகாமிலிருந்து ஆனந்தன் என்பவர் எனது அலுவலகம் வந்திருந்தார். மிக மோசமாக மெலிந்து இருந்த ஆனந்தனை ஆற்றுப்படுத்தல் மையத்தினுள் அழைத்தேன். "வாருங்கள் ஆனந்தன்! இந்த கதிரையில் உட்காருங்கள்" என்று என் முன்னிருந்த கதிரையில் இருத்தினேன்.

"ஆனந்தன்! என்ன பிரச்சினைக்காக என்னிடம் வந்தீர்கள்?"

"எனது மனைவி இன்னொருவனுடன் ஓடி விட்டாள்" என்ற ஆனந்தன் தலையைக் குனிந்துகொண்டான்.

"ஆனந்தன்! என்ன நடந்தது என்று விபரமாகக் கூறுங்கள்."

"அழியாநிலை முகாமிலிருந்து அறந்தாங்கி என்ற இடத்திற்கு நான் ஒவ்வொரு நாளும் வேலைக்கு செல்வேன். ஒரு எண்ணை மில்லில்தான் வேலை செய்தேன். ஒரு மாதத்தில் இருபது நாட்கள் இரவு வேலைதான் கிடைக்கும். வழமை போல முந்த நாள் இரவு வேலைக்கு சென்று திரும்பி முகாமிற்கு வந்தபோது முகாம் முழுவதும் பரபரப்பாக இருந்தது. நான் பஸ்ஸை விட்டு இறங்கும் போதே சனம் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தது. நான் எனது வீட்டிற்குச் சென்ற போது எனது குழந்தைகள் "அம்மாவைக் காணவில்லை" என்று அழுதார்கள். பக்கத்து வீட்டு சரோ அக்காதான் நடந்ததைச் சொன்னாள். எனது மனைவி அசுந்தா, கண்ணனுடன் ஓடி விட்டாள் என்பது தெரிந்தது. நேற்று முழுவதும் தேடினேன். கண்டு பிடிக்க முடியவில்லை. முகாம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன்." என்று சொல்லி முடித்தார்.

"ஆனந்தன்! உங்கள் சொந்த இடம் எது?"

"கனகராயன் குளத்திற்கு அருகில் உள்ள மன்னகுளம்."

"உங்கள் மனைவியின் சொந்த இடம்?"

"புதுவிளாங்குளம்."

"காதல் திருமணமா? பேச்சுத் திருமணமா?"

"இருவீட்டாரின் விருப்பப்படி நடந்த திருமணம்தான்."

"ஆனந்தன்! எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள்?"

"மூன்று குழந்தைகள். மூன்றும் பெண் குழந்தைகள்."

"குழந்தைகளுக்கு வயது எத்தனை இருக்கும்?"

"மூத்த குழந்தைக்கு 10 வயது. அடுத்ததுக்கு 8 வயதும், 6 வயதும்."

"நீங்கள் எப்போது இந்தியா வந்தீர்கள்?"

"1993ம் ஆண்டு."

"சரி ஆனந்தன்! கண்ணன் என்பவன் யார்?"

"அவனை சேத்துப் பிடிச்சதுதான் எனக்கு சோதனையாக வந்துவிட்டது."

"சொல்லுங்கள் ஆனந்தன் சொல்லுங்கள்."

"1994ம் ஆண்டு மண்டபம் முகாமிலிருந்து அழியாநிலை முகாமுக்கு மாற்றப்பட்டோம். இங்கிருக்கும் போது முகாமில் தனிப்பதிவாக பல இளைஞர்கள் இருந்தார்கள். கண்ணன் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவன். இவனும் இவனது தம்பிமார் இரண்டு பேரும் தமக்கு சாப்பாடு தரும்படி கேட்டுக் கொண்டதால் என் மனைவியிடம் சம்மதம் கேட்டு சாப்பாடு கொடுத்து வந்தோம். (முகாம்களில் தனிப்பதிவாக உள்ள இளைஞர்கள் யாருடைய வீட்டிலாவது சாப்பிடுவதும், மாதாமாதம் பணம் கொடுப்பதும் நடைமுறையில் உள்ளதே) இவர்கள் மூவரும் ஆண்களாக இருந்ததாலும், சமைக்கத் தெரியாதவர்களாக இருந்ததாலும், கடைசிப் பெடியன் பிறவிக் குருடனாக இருந்ததாலும் உதவி செய்ய முன்வந்தேன்" என்றார் ஆனந்தன்.

"சரி ஆனந்தன்! கண்ணனும் அவனது தம்பிமாரும் உங்கள் வீட்டிலேயே தங்கி இருந்தார்களா? அல்லது அவர்களுக்கு தனியாக வீடு கொடுக்கப்பட்டிருந்ததா?"

"எனது வீட்டிற்கு அருகில் இருந்த உடைந்து போன வீட்டை திருத்தி கண்ணனும் தம்பிமாரும் இருந்தார்கள்."

"முகாமில் உங்களுடைய உறவினர்கள் யாரும் இருக்கவில்லையா?"

"இருந்தார்கள்! எனது மனைவியுடைய தங்கச்சிமார் இரண்டு பேர் என் குடும்பத்துடன்தான் இருந்தார்கள்."

"அவர்கள் திருமணமானவர்களா?" என்று கேட்டேன்.

"இருவரும் திருமணமாகாதவர்கள்" என்றார்.

"சரி ஆனந்தன்! நீங்கள் மில் வேலைக்கு எப்போது செல்வீர்கள்?"

"பின்னேரம் 4 மணி பஸ்ஸில் போய் அடுத்த நாள் காலை 9 மணி பஸ்ஸில்தான் வருவேன்."

"சம்பளம் எவ்வளவு கொடுக்கிறார்கள்?"

"நாளுக்கு 75 ரூபா சம்பளம் கிடைக்கும்."

"இது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இருக்குமா?"

"தாராளமாக போதும்."

"கண்ணன் ஏதாவது வேலைக்கு போவானா?"

"இல்லை. இவன் வெளிநாடு போவதற்காகத்தான் இந்தியா வந்ததாகச் சொல்வான். வெளிநாட்டிலிருந்து அவனுக்குப் பணம் வரும்."

"அவன் தம்பிமார் என்ன செய்கிறார்கள்."

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

"ஒருவன் பெயின்ரிங் வேலைக்குப் போவான். மூன்றாவது பெடியன் பிறவியிலேயே குருடனாக இருந்தாலும் மிகவும் கெட்டிக்காரன். அவன் லாட்டரி சீட்டு வியாபாரம் செய்வான்."

"சரி ஆனந்தன்! நீங்கள் மிக மெலிந்த நிலையில் இருக்கிறீர்களே. மில்வேலை மிக கஸ்ரமாக இருக்குமோ?"

"எண்ணை மில்லில் புண்ணாக்கு அள்ளுவதும், தானியங்களைக் கொட்டுவதும்தான் வேலை. புண்ணாக்கு வரும் இடம் நெருப்பாகத்தான் இருக்கும். கடுமையான சூடு. இரவு முழுவதும் இந்த வெக்கைக்குள் நிற்பதுதான் என் உடம்பு மெலிவதற்கு காரணம்."

"ஆனந்தன்! நீங்கள் மன்னகுளத்தில் என்ன வேலை செய்தீர்கள்?"

"விவசாயமும், வேட்டையும்தான். கொஞ்ச காலம் செய்தேன். 84ம் ஆண்டு ஒரு இயக்கத்தில் சேர்ந்து விசேட பயிற்சி பெற்றேன். 86ம் ஆண்டு இயக்க மோதல்கள் ஏற்பட்டதால் இயக்கத்தை விட்டு விலகி 89ம் ஆண்டு திருமணம் முடித்தேன்."

தொடர்ந்து வரும்...

அண்டை மண்டலத்திலிருந்து...

# திசை தெரியாத பயணத்தில் ம.தி.மு.க.

புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக ம.தி.மு.க. தலைவர் வை.கோ. கைது செய்யப்பட்டு ஆறு மாதம் சிறையில் அடைக்கப்பட்டு, அடிக்கடி நீதிமன்றங்களுக்கு அலைகழிக்கப்பட்டு, ஒரு வழியாக நீதிபதியே மாநில அரசைக் கண்டித்த பின்பு டிசம்பர் 30ந் திகதி அவர் மீதும் ம.தி.மு.க. நிர்வாகிகள் எட்டுப் பேர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஓர் அங்கம் ம.தி.மு.க. மத்திய அமைச்சரவையில் ம.தி.மு.க.வும் அங்கம் வகிக்கிறது. வை.கோ. நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பிரதமர் வாஜ்பாயைத் தீவிரமாக ஆதரித்து உடுக்கை அடித்தவர். இந் நிலையில் இந்திய பாராளுமன்றத்தில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய அதே கருத்தையே தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் திரு மங்கலத்தில் சென்ற ஆண்டு ஜூன் 29ம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வை.கோ. பேசினார். அதைத் தொடர்ந்து தமிழகத்தை ஆளும் ஜெயலலிதா அரசு ம.தி.மு.க. நிர்வாகிகள் எட்டுப் பேரை ஜூலை 9ம் திகதி கைது செய்தது. வெளிநாடு சென்று விமானநிலையம் வந்திறங்கிய வை.கோ.வை ஜூலை 11ல் கைது செய்தது.



வை.கோ. கைதாகி மாதங்கள் ஆறு உருண்டோடிய நிலையில் மத்திய அரசு வை.கோ.வின் விடுதலைக்கு எந்தவித ஆக்கபூர்வமான முயற்சியையும் எடுக்கவில்லை என்ற ஆதங்கம் ம.தி.மு.க.வினரிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந் நிலையில் தமிழகத்தை ஆளும் கட்சியான அ.தி.மு.க.வானது பா.ஜ.க.வுடன் நெருங்கி வந்துகொண்டிருப்பதும் ம.தி.மு.க.வினரைக் கலங்கடித்து வருகிறது.

வை.கோ.வின் கைதைக் கண்டித்து ம.தி.மு.க.வினர் நடத்திய கையெழுத்து இயக்கத்தில் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும்- அ.தி.மு.க. நீங்கலாக-கையெழுத்திட்டுள்ளன. அதிலும் காங்கிரஸ் கட்சி எந்தவித முணுமுணுப்பும் இல்லாமல் கையெழுத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் அதே சமயத்தில் ம.தி.மு.க.வின் கூட்டாளியான பாரதீய ஜனதா கட்சி இதில் கையெழுத்திடத் தயக்கம் காட்டியது.

தமிழக பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர் ராஜா, நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் வை.கோ. விடுதலையில் அவ்வளவாக அக்கறை இல்லாதவராகப் பதிலளித்தார். "பொடா சட்டத்தை எதிர்ப்பதாகவோ, புலிகளை ஆதரிப்பதாகவோ கையெழுத்து இயக்கப் படிவத்தில் வாசகங்கள் இடம் பெற்றிருந்தால் பா.ஜ.க. அதில் கையெழுத்துப் போடாது" என்றார் ராஜா.

பா.ஜ.க.வின் தேசிய செயலாளரான இல.கணேசன் கூறும்போது, "வை.கோ. கைது விவகாரத்தில் 'பொடா' சட்டத்தை மாநில அரசு துஷ்பிரயோகம் செய்திருக்கிறதா என்பது நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கின் இறுதித் தீர்ப்பில்தான் தெளிவாகும்" என்று கூறியுள்ளார். இதன் மூலம் வை.கோ.வைக் கைது செய்த மாநில அரசின் செயற்பாட்டை பா.ஜ.க. எதிர்க்கவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

ஆனால் அதே சமயம் வை.கோ. கைது செய்யப்பட்ட போது, அதாவது ஆறு மாதத்திற்கு முன்பு பா.ஜ.க. அரசின் அன்றைய சட்ட மந்திரியான அருண்ஜேட்லி, "பொடா சட்டத்தை மாநில அரசு தவறான வகையில் துஷ்பிரயோகம் செய்து வை.கோ.வைக் கைது செய்துள்ளது கண்டிக்கத் தக்கது" என்றார். அவரைப் போலவே பா.ஜ.க.வின் மற்றொரு முக்கிய தலைவரான வெங்கையா நாயுடுவும் வை.கோ. கைதானதைக் கண்டித்ததோடு அல்லாமல் வை.கோ.வைச் சிறைக்கே சென்று சந்தித்தார். ஆனால் இன்று பா.ஜ.க.வின் நிலை மாற்றமடைந்துகொண்டு வருகிறது.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரை அதன் இந்துத்துவக் கொள்கைகளுக்கு உகந்த ஒரே தமிழகக் கட்சி அ.இ.அ.தி.மு.க.தான் என்பதை அதன் அடிமட்டம் தொடங்கி உச்சி வரை உள்ள அனைவரும் நம்புகிறார்கள். கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை ஜெயலலிதா கொண்டு வந்தது, கோயில்களில் அன்னதானத் திட்டத்தை அறிமுகம் செய்தது, குஜராத் தேர்தல் பிரச்சினையில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாகத் தேர்தல் கமிஷனின் செயற்பாடுகளையே ஜெயலலிதா கண்டித்தது, குஜராத்தில் வெற்றி பெற்ற மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கு பெற்றது, முஸ்லீம்களின் ரம்ஸான் நோன்பின் போது கருணாநிதியைப் போல் குல்லா போட்டுக்கொண்டு சிறுபான்மையினரை ஆதரிப்பதுபோல் வேஷம்போட மறுத்தது, முஸ்லீம் தீவிரவாதிகளை ஒடுக்குவது... போன்ற ஜெயலலிதாவின் அணுகுமுறைகள் அனைத்தையுமே பா.ஜ.க. மனமார வரவேற்கிறது.

அதே சமயம் இவை அனைத்தையுமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் எதிர்க்கிறது. அது மட்டுமின்றி பா.ஜ.க.வின் எதிரியான காங்கிரஸோடு கைகோர்த்துக்கொண்டு தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்து வருகிறது. காங்கிரஸோடு தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் நெருங்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இந் நிலையில் தனது கூட்டாளிகளான தி.மு.க., ம.தி.மு.க. குறித்து பா.ஜ.க.விற்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இந்தச் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க.வை எதிர்க்க, வருகின்ற சாத்தன்குளம் இடைத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று பா.ஜ.க. தவிர்ந்த அனைத்துக் கட்சிகளுக்கும் கடிதம் எழுதியுள்ளார். இதன் பொருள் தமிழகத்தில் ஜெயலலிதாவை எதிர்க்கத் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள ம.தி.மு.க.வும், தி.மு.க.வும் காங்கிரஸையும், கம்யூனிஸ்டுகளையும் ஒரணியில் திரட்ட வேண்டும் என்பதேயாகும்.

"அப்படி ஒரணியில் திரள வேண்டுமாயின் தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் தேசிய ஜனநாயக் கூட்டணியிலிருந்து வெளியேறிப் பா.ஜ.க.வின் உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இது சாத்தியப்படும்" என்று இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்.வரதராஜன் குறிப்பிட்டுள்ளார்.

ம.தி.மு.க., புலிகளை ஆதரிக்கும் கட்சி என்பதால் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் ம.தி.மு.க.வை ஏற்றுக் கொள்வதில் ஒரு பெரும் தயக்கம் நிலவுகிறது. இந் நிலையில் தேசிய ஜனநாயக் கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. வெளியேறினால் அது தனிமைப்படுத்தப்பட்டுவிடும். ஆகவே தற்போது பா.ஜ.க.வின் அலட்சியபோக்குகளைச் சகித்துக்கொண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயே அடைக்கலமாயிருப்பது ஒன்றுதான் ம.தி.மு.க.விற்கு உள்ள ஒரே வழி. மேலும் வை.கோ.வின் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமானால் அவருக்குப் பொடா சட்டத்தின் கீழ் பத்தாண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. எனவே மத்திய அரசின் தயவோடு தனக்குள்ள பிரச்சினைகளை எதிர்கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்பதை வை.கோ. புரிந்து வைத்திருக்கிறார், என்ற போதிலும் வை.கோ. விடுதலையாவாரா? ம.தி.மு.க.வின் எதிர்காலம் என்ன? என்பது ஒரு கேள்விக் குறிதான். பாவம், புலிகள் ஆதரவு நிலைப்பாட்டால் ம.தி.மு.க. தனக்குத் தானே ஒரு தற்கொலைப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவிட்டதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. ○

**ஆர். கண்ணன்**

# பகுத்தறிவு

“அறிவை அறிவால் அறியும் அறிவே அறிவு” என்ற பொன்மொழியை ஈந்த தத்துவஞானி அரிஸ்டோட்டிலைப் போல பகுத்தறிவு என்றால் என்ன? என்ற விளக்கங்களைச் சித்தர்கள் பலர் கூறியிருந்தாலும். உயர்திணையான மனிதன் தனக்கு ஆறு அறிவு இருக்கிறது என்றும், அஃறிணையான மிருகங்களுக்கு இருக்கும் ஐந்து அறிவை விட மேலதிக கொடையாக பகுத்தறிவு என்ற அறிவும் தமக்கு உள்ளதாக மார்பதட்டும் மனிதரில், எத்தனை பேர் தமக்குள்ள ஆறு அறிவையும் எண்ணிச் சொல்ல முடிகிறது? பகுத்தறிவை விட்டு மற்றைய ஐந்து அறிவையும் வரிசைப் படுத்திச் சொல்ல எத்தனை பேர் முன்வருவார்கள்? மிகக் குறைவு.


ஐந்து புலன்களே ஐந்து அறிவு என்படும். அவை பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், உணர்தல் என்பனவாகும். ஐம்பொறிகளான கண், காது, வாய், மூக்கு, மெய் போன்றவற்றின் தொழிற்பாடுகளே ஐந்து அறிவு எனக் கொள்ளலாம். ஆறாவது அறிவைப் பகுத்தறிவு என்று கொள்ளலாம். எது சரி, எது பிழை, எங்கே போகலாம், எங்கே போகக் கூடாது, எதைச் செய்யக் கூடாது, எது பாவம், எது புண்ணியம் என்று உணர்த்தும் அறிவே பகுத்தறிவு.

பகுத்தறிவிலும் இரண்டு வகை உண்டு. ஒன்று உணர்ச்சி அறிவு மற்றொன்று உணர்வு அறிவு. உணர்வு அறிவென்பது ஒரு காதால் கேட்டு மறு காதால் விடுவது. உணர்வு அறிவு என்பது அறியும் விடயத்தைச் சிந்தனையில் இருத்தி சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்வதாகும்.

உணர்ச்சி என்றால் என்ன? உணர்வு என்றால் என்ன? என்பதை நாம் பிரித்து ஆராய்வதில்லை. பொதுவாக இரண்டும் ஒரே பொருளைக் கொண்டதாகவே கூறப்படுகிறது. இது தவறானது. நமது உடலில் ஏற்படும் வேதனையால் புலப்படுவது உணர்ச்சி என்றும், நமது மனதால் ஏற்படும் வேதனையில் புலப்படுவது உணர்வு என்றும் சுருக்கமாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் மனிதருக்குப் பகுத்தறிவு இருந்தால் ஏன் பிழை செய்கிறான்; தவறிழைக்கிறான்; குற்றம் செய்கிறான்? என்ற கேள்வி எழுகிறது. இவ் விடயத்தில் குதர்க்கமாகச் சிந்திப்பவர் ஒருவரின் கருத்து இப்படி இருக்கிறது. ஒரு மனிதன் கீழே குனிந்து கல்லை எடுத்தால் அருகில் உள்ள நாய் ஓடிவிடுகிறது. அவன் எடுக்கும் கல் தன் மீது வீசப்படுமென நாய் அறிந்து கொண்டதால்தானே ஓடுகிறது. ஆகவே பகுத்தறிவு நாய்க்கும் இருக்குமோ? என்ற கேள்வியை எழுப்புகிறார்.

இன்னுமொருவரின் கருத்தின்படி மனிதருக்கு மட்டும்தான் பாஷை இருக்கிறது என்பதையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தேனீக்கள் கூடத் தமக்குள் பேசிக் கொள்கின்றன என்று விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். குரங்கு, நாய், பூனை போன்ற மிருகங்கள் கிளி, மைனா போன்ற பறவைகள் டொல்பின் போன்ற மீன்கள் இப்படிப் பல அஃறிணை உயிரினங்கள் மனிதர் வியக்கத் தக்க சாகசங்களைச் செய்கின்றன. உண்மைதான், ஆனாலும் “குளோனிங்” குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மனிதனின் அறிவு வளர்ச்சி உலகையே வியக்க வைக்கின்றது என்பது உண்மையே.

STUDY IN

London, U.S.A., Cyprus, Canada, Singapore, Ireland, Australia, Japan, Malaysia & India.

- Basic Qualification G.C.E O/L.
- All courses available in any field.
- Easy Payment for accommodation.
- Part time jobs guaranteed.

UK-only 500 £ down payment.

Jan/Feb Batch now on process.

For free assessment contact us:

M.S. Lanka
Recruitment & Travels (Pvt) Ltd.
379 2/2, (2nd Floor) Galle Road, Wellawatte, Colombo 06.
(Opposite Delmon Hospital & Nations Trust Bank)
(Office) Tel: 074-513442, 074-517836, 074-519157
Mobile: Mr. A.H.M. Mansoor 0777-374314
Fax: 074-518928 E-mail: mslanka@wow.lk Web: www.mslanka.com

# அரசாங்கங்களை ஒப்பிடும் ஒரு சிறிய கையேடு

**நிலப்பிரபுத்துவம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. பண்ணையார் எல்லாப் பாலையும் எடுத்துக் கொள்கிறார்.

**இராணுவ பாஸிஸம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. அரசாங்கம் உன் பசுக்களை எடுத்துக்கொண்டு உன்னை இராணுவத்தில் கட்டாயப்படுத்திச் சேர்க்கிறது.

**கிளப்டோகிராடிக் பாஸிஸம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. அரசாங்கம் இரண்டையும் எடுத்துக்கொண்டு உன்னைச் சுட்டுக் கொல்கிறது.

**சோஷலிஸம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. அரசாங்கம் இரண்டையும் எடுத்துக்கொள்கிறது. அவைகளைக் கவனித்துக்கொள்ள உன்னை வேலைக்கு வைத்துக்கொள்கிறது. பாலை உன்னிடம் நல்ல விலைக்கு விற்கிறது.

**சுத்தமான ஜனநாயகம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. பால் யாருக்குக் கிடைக்கும் என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் முடிவு செய்வார்கள்.

**பிரதிநிதித்துவ ஜனநாயகம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. பால் யாருக்குக் கிடைக்கும் என்று உன் பக்கத்து வீட்டுக்காரர்கள் தேர்ந்தெடுத்த ஒரு ஆள் நிர்ணயம் செய்வான்.

**சிங்கப்பூர் ஜனநாயகம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. அபார்ட்மெண்டுக்குள் இரண்டு விவசாய மிருகங்களை வைத்திருந்ததற்காக அரசாங்கம் உனக்கு அபராதம் விதிக்கிறது.

**அமெரிக்க ஜனநாயகம்:** அரசியல்வாதிகள், நீங்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு இரண்டு பசுக்கள் தருவதாக வாக்களிக்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பசு யாருக்குக் கிடைக்கும் என்பதற்கான தகுதிகளை நிர்ணயம் செய்வார்கள். அரசியல்வாதிகளின் தேர்தல் செலவுக்கு அதிகப் பணம் கொடுத்தவர்கள் மட்டுமே தகுதி போல நிர்ணயம் நடக்கும். பசுவை ஒப்பந்தத்தில் இழுத்துவிட்டதால், உன் மீது விலங்குகள் உரிமைகள் பற்றி அக்கறைப்படும் இயக்கங்கள், பசுக்களின் சார்பாக, வழக்கு தொடுக்கும். இதே வேளையில் பாலின் விலை ஒரேயடியாக ஏறிப்போய், நீ கோககோலா குடிக்க ஆரம்பித்துவிடுவாய்.

**இங்கிலாந்து ஜனநாயகம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. நீ அவைகளுக்கு ஆட்டு மூளையைச் சாப்பிடக் கொடுக்கிறாய். பசுக்களுக்குப் பைத்தியம் பிடிக்கிறது. அரசாங்கம் ஒன்றும் செய்வதில்லை.

**நவீன உலக அமைப்பு முதலாளித்துவம்:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. ஒரு பன்னாட்டு நிறுவனம் அதில் முதலீடு செய்கிறது, பாலை மிகவும் குறைந்த விலையில் உன்னிடம் இருந்து வாங்குகிறது. பிறகு அதை இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்து பதப்படுத்துகிறது. நீ தயிர் வாங்க ஏராளமாக காசு கொடுக்க வேண்டும். ஏனெனில், பால் தொழிற்சாலை கூட்டமைப்பும், பால் தொழிலாளர்கள் யூனியனும் இறக்குமதி வரியை அதிகப்படுத்தப் போராடியிருப்பார்கள்.

**சவூதி அரேபியா:** உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி உனக்குக் கவலையில்லை. ஏனெனில், பங்களாதேஷிலிருந்து கடத்தப்பட்ட இரண்டு பெண்களை உனது பெட்ரோல் பணம் கொடுத்து வாங்கியாகிவிட்டது.



பட உதவி: நெட் பிரியன்

# ஒருபடி விருந்து

## குழந்தைப்பேறு இல்லாமைக்கு மருந்தா?

### எலி விரைகளுக்குக் கிராக்கி அதிகரிப்பு

**கு**ழந்தைப் பேறு இல்லாத தம்பதி, எலியின் விரைகளை மருந்தாக உண்டதாகவும் அதனால் அப் பெண் கருவுற்றதாகவும் தைவானில் தகவல் பரவியது. அதையடுத்து, எலியின் விரைகளுக்குக் கிராக்கி அதிகரித்துவிட்டது.

புல்டோசர் வாகனத்தின் டிரைவாக இருப்பவர் சூ டிங்-ஃபு. தைவானின் தெற்கு மாகாணமான பிங்துங்கைச் சேர்ந்தவர். நீண்ட காலமாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்தார். டாக்டர்களிடம் அது குறித்து ஆலோசனை கேட்ட போது, அவருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாததற்கு என்ன காரணம் என்பதை அவர்களால் கூற முடியவில்லை.

உள்ளூரில் உள்ள ஒரு ஓட்டலுக்கு நண்பருடன் சென்றனர் டிங்-ஃபு தம்பதி. அங்கு எலியின் விரைகளால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் விற்கப்படுகின்றன. அந்த நண்பர் அந்த உணவுகளை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தார். அதோடு, அந்த உணவை உண்டால், குழந்தைப் பேறு உண்டாகும் என்றும் அந்த நண்பர் கூறியுள்ளார்.

உடனே அந்த ஓட்டலில் இருந்து சமைக்காத ஒரு கிலோ எலி விரைகளை டிங்-ஃபு தம்பதி வாங்கி வந்தனர். ஒரு மாதத்துக்கு மேல் தம் உணவில் அதைச் சேர்த்துச் சாப்பிட்டு வந்தனர். அண்மையில் டிங்-ஃபுவின் மனைவியைச் சோதித்தபோது, அவர் கருவுற்றிருந்தது தெரிய வந்தது.

அச் செய்தியைப் பிள்ளைப் பேறு இல்லாத தம்பதிகளிடம் டிங்-ஃபு கூறியுள்ளார். அவர்களது வழியைப் பின்பற்றிய மேலும் 4 பெண்கள் கருவுற்றிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதையடுத்து எலி விரைகளுக்குக் கிராக்கி அதிகரித்துவிட்டது.

விலங்குகளின் உடலில் உள்ள ஒரு பகுதியை உட்கொண்டால், நம் உடலில் உள்ள அதே பகுதி பலப்படும் என்பது தைவானிய மக்களின் நம்பிக்கை. ஆணின் விரைப் பையில்தான், கருத்தரிக்கத் தேவையான விந்து உற்பத்தி யாவது குறிப்பிடத் தக்கது.

ஆனால், எலி விரை உணவு கருத்தரிப்புத் திறனை அதிகரிக்கும் என்ற தகவல் குறித்து ஐயம் தெரிவித்துள்ளார் மகப்பேறு மருத்துவரான சென் சுங்-ஜென். அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படாத நாட்டு மருத்துவத்துக்குப் பதில், டாக்டர்களை அணுகுமாறு யோசனை கூறியுள்ளார் அவர்.

# தாக்கினால் பதிலடி... சதாம் சூளுரை

## ஈராக் மக்களின் கதி என்ன?

**"அ**மெரிக்கப் படையினர் தாக்கினால் ஈராக் மக்களும் இராணுவமும் துணிந்து நின்று அவர்களை விரட்டி அடிப்பர்" என்று சதாம் ஹுசைன் சூளுரைத்துள்ளார்.

"நாங்கள் எப்போதும் சரியாகத்தான் நடந்து கொள்கிறோம். எதிரிகள்தான் தவறான பாதையில் செல்கின்றனர். போர் நடந்தால் எதிரிகள் அவமானப்பட்டுத் திரும்ப நேரிடும்" என்றும் அவர் எச்சரித்தார். இராணுவ தினத்தை முன்னிட்டு அவரது பேச்சுப் பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டது.

எதிரிகளின் தாக்குதலில் இருந்து எமது படையினர் பின்வாங்க மாட்டார்கள். தாக்குதல் கடுமையானால் ஈராக் இராணுவத்தினர் செயலற்றுப்போய் பணிந்துவிடுவார் என்று பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்தக் கணிப்பு எந்த அளவுக்குத் தவறானது என்பது போர் நடக்கும்போது தெரியவரும்.

அல்லாஹ் எங்கள் பக்கம் இருக்கிறான். எங்களுக்கு வெற்றி நிச்சயம். எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகள் திசை தவறிப் போகும். எங்களது துப்பாக்கிக் குண்டுகள் இலக்கைத் தவறாது சென்று தாக்கும்.

பாலஸ்தீனத்தில் நமது மக்களை இஸ்ரேல் கொன்று குவிக்கிறது. இதிலிருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்பவே அமெரிக்கா முயலுகிறது.

ஐ.நா. தீர்மானத்தையும் மீறிச் செயற்படுமாறு ஆயுதச் சோதனை அதிகாரிகளை அமெரிக்கா நிர்ப்பந்திக்கிறது. ஈராக் விஞ்ஞானிகளிடம் கடுமையாக நடந்து கொள்ளுமாறு அது தூண்டுகிறது.



பேரழிவு ஆயுதங்கள் இருக்கிறதா என்று பார்ப்பதை விட்டுவிட்டு, விஞ்ஞானிகளின் பெயர்களைத் தேடிக் கண்டு பிடிக்க அதிகாரிகள் முயலுகின்றனர். விஞ்ஞானிகளிடம் அற்பத்தனமான கேள்விகளும் கேட்கப்படுகின்றன என்றார் சதாம்.

# வருங்காலக் கணவர் சாவு

## அவரது விந்து மூலம் குழந்தை பெற விண்ணப்பம்

**இ**றந்து போன தனது வருங்காலக் கணவரின் விந்து மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கும்படி ஒரு பெண் விடுத்த கோரிக்கையை அவுஸ்திரேலிய நீதிமன்றம் திங்கள்கிழமை நிராகரித்தது.

சைமன் பேக்கர் என்பவர் பள்ளி ஆசிரியை. இவருக்கும் ஆண்ட்ரூ கிளோ என்பவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. வரும் ஏப்ரல் மாதத்தில் திருமணம் நடக்க இருந்தது. இந் நிலையில், புத்தாண்டுக் கேளிக்கைக்காக, தேசிய பூங்காவுக்கு இருவரும் சென்றனர். அங்குள்ள மலை மீது கிளோ ஏறியபோது 30 மீட்டர் உயரத்திலிருந்து கீழே விழுந்து இறந்தார்.

கிளோ இறந்தபோதிலும் அவரது விந்து மூலம் குழந்தை பெற எண்ணி கியூன்ஸ்லாந்து உச்ச நீதிமன்றத்தை அணுகினார் பேக்கர்.

1997ம் ஆண்டில் கிளோவை நான் முதன் முதலாகச் சந்தித்தேன். பல குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதில் அவருக்கு அளவு கடந்த ஆசை. குழந்தைகளுக்கான பெயர்களையும் கூட இருவரும் சேர்ந்து தெரிவு செய்திருந்தோம்.

இந் நிலையில் ஆசை பூர்த்தி ஆகாமலேயே அவர் இறந்துவிட்டார். எனினும் அவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் ஆவலாக உள்ளேன். அவரது பெற்றோருக்கும் இதில் உடன்பாடுதான். எனவே அவரது உடலிலிருந்து விந்துவை அகற்றி பாதுகாப்பாக வைத்துக்கொள்ள நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும். எதிர்காலத்தில் இதன் மூலம் நான் கருத்தரித்துக் கொள்வேன் என்று பேக்கர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதை விசாரித்த நீதிபதி ஜான் மூயர், அக் கோரிக்கையை நிராகரித்தார். இக் கோரிக்கையை அனுமதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

கிளோவின் உடலிலிருந்து விந்தை அகற்ற திங்கள்கிழமை தான் கடைசி நாள். அதற்குப் பிறகு எடுத்தால் அது கருத்தரிக்க உதவாது என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பால் கவலை அடைந்துள்ளார் பேக்கர். நிச்சயதார்த்தத்தின்போது திருமண ஆடைகளுடன் கிளோவுடன் சேர்ந்து எடுத்த புகைப்படத்தைக் கையில் ஏந்தியபடி, கிளோவின் சப்பாத்துக்களையும், கடிகாரத்தையும் அணிந்தபடி கோர்ட்டுக்கு வந்திருந்தார் பேக்கர். ■



பட உதவி: நெட் பிரியன்

# இன்னும் பல குளோனிங் குழந்தைகள்

**இ**றந்தவரின் விந்தினால் கருத்தரித்தல், குளோனிங் முறை மூலம் மனிதனைப் பலபடியாக்கம் செய்தல் என்று சம்பிரதாயத்தைக் கடந்து நிகழும் விந்தைகளால் கதிகலங்கிப் போயிருக்கிறது உலகம்.

முதலாவது குளோனிங் குழந்தை பிறந்ததாக அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்களுக்குள் இரண்டாவது குளோனிங் குழந்தை நெதர்லாந்தில் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் மனித பலபடியாக்கத்தை முன்னின்று நடத்தி வரும் குளோன் எய்ட் நிறுவனம் இவ்வாறாக மேலும் 3 குழந்தைகள் பிறக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைவர் பிரிஜிட் பாஸ்ஸலர் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியொன்றில் மேலும் 3 குளோனிங் குழந்தைகள் ஜனவரி இறுதியிலோ பெப்ரவரி ஆரம்பத்திலோ பிறக்கக் கூடும் எனக் கூறியிருக்கிறார். ■

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்களில் அநேகமானவர்கள் அவ்வப்போது அனுப்பி வைத்த மடல்களைக் கருத்திற் கொண்டு 'முரசு குறுக்கெழுத்துப் போட்டி' சென்றவாரம் முதல் ஆரம்பமாகியது. உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 02

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 3 | | ■ |
| | ■ | | ■ | 7 |
| 8 | | | 11 | ■ |
| | ■ | 13 | | 15 |
| 16 | | ■ | 18 | |
| | | | ■ | |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 18.01.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-01**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல. - 1772**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

### இடமிருந்து வலம்

(1). ஒரு வகைக் கடல் மீன்.
(7). சிலப்பதிகாரத்தின் நாயகன்.
(8). நெருப்பு.
(13). யானையின் காலுக்கு உவமானமாக சொல்வர்.
(16). சந்திரன்.
(18). தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்தும் ஒரு முறை
(20). கைவிடப்பட்ட பெண். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

(1). இயற்கைத் துறைமுகம்.
(3). இடிக்க உதவும் (குழம்பியுள்ளது).
(11). கடவுள். (தலைகீழ்).
(15). இது சொல்லும். (குழம்பியுள்ளது).
(17). தலைவன். (தலைகீழ்)

### வருந்துகின்றோம்

சென்ற வாரக் குறுக்கெழுத்துப் போட்டியிலே தரப்பட்ட குறிப்புக்களில் இரு தவறுகள் நேர்ந்து விட்டன. திருத்தம்: இடமிருந்து வலம் 10 கை திரும்பியுள்ளது மேலிருந்து கீழ் 10 தலைநகரம் குழம்பியுள்ளது இத் தவறுகளினால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துவதோடு, குறுக்கெழுத்துப் போட்டி-1 இற்கான விடைகளை எழுதி அனுப்பும் கால எல்லையை 18.01.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஆ-ர்).

கப்பலில் பணிபுரியும் இளைஞன் அவன். கல்யாணமான ஒரு வாரத்துக்குள்ளேயே வேலையில் சேர அழைப்பு வந்துவிட்டது. தொலை தூர தேசத்துக்குப் போனது கப்பல். அங்கே போன பிறகுதான் தெரிந்தது, வீடு திரும்ப இன்னும் ஆறு மாதமாவது ஆகும் என்று.

இளம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்க வேண்டிய சோகம் தாங்காமல் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான். 'அன்பே, உன்னை விட்டுப் பிரிந்திருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இன்னும் ஆறு மாதம் எப்படித்தான் காத்திருக்கப் போகிறேனோ. மாலை வேளைகளில் எல்லாம் ரொம்ப ஃப்ரியாகத்தான் இருக்கிறேன். சுற்றிலும் வெவ்வேறு நாட்டு அழகிகள் வேறு. நான் சபலப்பட்டுவிடாமல் உன் நினைவுதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். இப்படிக்கு உன் காதல் கணவன்.'



இதற்கு உடனடியாக மனைவியிடமிருந்து பதில் வந்தது. "கண்ணா! உங்களுக்காகக் காத்திருப்பேன். நீங்கள் உங்கள் மனதை வேறு பக்கம் செலுத்தாமல் ஒய்வாக இருக்கும் மாலை நேரங்களில் இதோடு நான் அனுப்பியிருக்கும் ஹார்மோனியத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்று எழுதியிருந்தாள்.

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

ஆசை ஆசையாக வீடு திரும்பினான் இளம் கணவன். மனைவியைக் கட்டிப் பிடிக்கப் பாய்ந்தான்.

ஒரு சின்ன முத்தம் கொடுத்துவிட்டு அவள் சொன்னாள்: "முதல்ல ஹார்மோனியத்தை வாசிச்சுக் காட்டுங்க மற்றதெல்லாம் அப்புறம் தான்."

### போன தடவை

இரண்டு அமெரிக்கர்கள் குட்டி விமானம் ஒன்றை வாடகைக்குப் பிடித்து வேட்டையாடப் போனார்கள். வேட்டையில் ஆறு காட்டு மாடுகள் சிக்கின. விமானத்தின் அருகே இழுத்து வந்தார்கள்.

ஆனால் விமானி, "ஆறு மாடுகளை ஏற்ற முடியாது. நான்கு மாடுகளைத்தான் ஏற்ற முடியும்" என்று சொன்னான். இவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னப்பா இது? போன தடவை வந்தபோது இதே விமானத்தில்தான் வந்தோம். இதே க்ளைமேட்தான் இருந்தது. இதே போல ஆறு மாடுகளை அந்த விமானி ஏற்றினாரே. நீயும் ஏற்றித்தான் ஆக வேண்டும்" என்று வாதாடினார்கள்.

கடைசியில் மனமே இல்லாமல் ஆறு மாடுகளையும் விமானத்தில் ஏற்றினார் விமானி. கொஞ்ச நேரம் கூட ஆகியிருக்காது. விமானம் மலைச்சரிவில் கீழே விழுந்துவிட்டது. உடைசல்களில் இருந்து மெள்ள மீண்டு வந்தார்கள். ஒருவர் கேட்டான். "நாம இப்போ எங்கே விழுந்து கிடக்கோம் தெரியுமா?"

அடுத்தவனின் பதில்: "தெரியுமே... போன தடவை விழுந்த இடத்துக்கு நூறு மீட்டர் தள்ளி...!"



குழந்தைகளுக்கு ஆன்மீகம் போதிக்க விரும்பினார் ஆசிரியர். "சுரேஷ் கடவுள் எங்கே இருக்கார் சொல்லு..." என்று கேட்டார்.

சுரேஷ் எழுந்து, "சொர்க்கத்தில்" என்றான்.

"ஷீலா, நீ சொல்லு, கடவுள் எங்கே இருக்கார்?"

"என் மனசில்" என்றாள் ஷீலா.

சின்ன சங்கரன் எழுந்தான். "சார், கடவுள் எங்க வீட்டு பாத்ரூம்ல இருக்காரு சார்" என்றான்.

ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை.

"எப்பிடிச் சொல்றே?" என்றார்.

"தினமும் காலையில எங்க அப்பா பாத்ரூம் வாசல்ல கையில் வாளியோட நின்னுக்கிட்டு, கடவுளே.. கொஞ்சம் சீக்கிரம் வெளியில வாயேன்னு கத்துவாரே..."

## இந்தவாரம் உங்கள் பலன்

12.01.2003 தொடங்கி 18.01.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

**தனு** - சூரியன், **மகரம்** - புதன், **இடபம்** - இராகு,சனி,
**கர்க்கடகம்** - வியாழன், **விருட்சிகம்** - வெள்ளி, செவ்வாய், கேது,
சந்திரன் மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் மேன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, முன்னேற்றம். உத்தியோக உயர்வு, கௌரவம், மாணவர் கல்வி சிறப்பு, உயர்கல்வி வாய்ப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மன மகிழ்ச்சி, காரியசித்தி, குடும்பச் சிறப்பு, முதியோரால் கவலை உண்டு. உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல: 4.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) பலவித பேறு, குடும்ப சுகம், பொருள் வரவு, வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதியுண்டு. உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் மந்தம், கடன்படல், பெரியோர் உதவி, இனசன நன்மை, புதிய முயற்சி, உத்தியோக உயர்வு, பதவி மாற்றம், மாணவர் கல்வி கஷ்டம், பரீட்சையில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் நிலை உயர்ச்சி, காரியானுகூலம், அன்னியர் உதவி, வீண் குறை கேட்டல், உத்தியோக மேன்மை, பதவி மாற்றம் உண்டு. மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகளுக்கு முதலீட்டுக் கஷ்டம் உண்டு.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக் கிலேசம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, மறைமுக எதிர்ப்பு, உத்தியோகத்தில் பலவித நன்மை, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 6.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) மனக் குறை, பிள்ளைகளால் கவலை, தொழில் கஷ்டம், செலவு மிகுதி, உயர்ந்த நட்பு, உத்தியோகத்தில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி பெறுவர் விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 7.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் உயர்ச்சி, பொருள் வரவு, காரியானுகூலம், இனசன நன்மை, உத்தியோக மேன்மை, கவலைகள் மறைவு, மாணவர் கல்வியில் மேன்மை உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) இனசன மேன்மை, தொழில் சிறப்பு, பிரயாண மிகுதி, செலவு, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர் கல்வியில் மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் உயர்ச்சி, கௌரவம், அன்னியர் உதவி, வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, உத்தியோக கஷ்டம், திடீர் மாற்றம், மாணவர் கல்வி சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) காரியானுகூலம், தொழில் சிறப்பு, பண வரவு, முன்னேற்றம், குடும்ப சுகம் உண்டு. உத்தியோக மேன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வியில் மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 4.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் கஷ்டம், மனக் கவலை, பண வரவு குன்றும், உயர்ந்தோர் நட்பு, உத்தியோக மேன்மை, மனக் குறை நீங்கும். மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# படமெடுத்தாலும்...

நாகம் போல் படமெடுத்து நிற்கிறது என்பதற்காக இது பாம்பென்று நினைத்து விடாதீர்கள். இது ஒரு வகை மீன். விலாங்கு இனத்தைச் சேர்ந்தது. பசுபிக் சமுத்திரத்தின் ஆழ்கடல் பரப்பில் வாழும் இந்த மீன் சிறிய மீன்களை உணவாக உட்கொள்ளும்.



பட உதவி: ஹுமைரா முஸம்மில்- மொரட்டுவ

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

பனிப் புயல் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! பாலைவனப் பகுதிகளில் மணல் திட்டுக்களை அள்ளி வீசும் பாலைவனப் புயல் போல பனி மூடிய திடல்களில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய அளவு வேகமாகப் பனிப்புயல் வீசும். வட ஐரோப்பா, ஆக்டிக், அந்தாட்டிக் பகுதிகளில் உள்ள பனிப் பிரதேசங்களில் இத்தகைய புயல்கள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. செக் குடியரசில் சமீபத்தில் ஏற்பட்ட கடும் பனி காரணமாக நாட்டின் மூன்றில் ஒரு பகுதி மாவட்டங்களில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. பனியால் மூழ்கிப் போன ஏராளமான கிராமங்கள் வெளி உலகத்துடனான தொடர்புகளை இழந்தன.

ரயில் வீதியில் பனிகட்டிகளை அகற்றும் முயற்சியில் இயந்திரங்களால் பனிக்கட்டிகள் அள்ளி வீசப்படுகின்றன.

பட உதவி:
அப்துல் ரசூல்,
நிந்தவூர்




நாளாந்தம் நவீனமான கார்கள் சந்தைக்கு வந்த வண்ணமுள்ளன. தற்போது வாகன உற்பத்தியில் அதிகபட்ச நவீனத்துவம் என்பதே மிகப் பழையதை அதே உருவில் புதுப் பொலிவு படுத்துவதுதான் என்றாகிவிட்டது. கார்கள் உற்பத்தி செய்யப்பட்ட ஆரம்ப நாட்களில் இருந்த 'மொடல்கள்' இப்போது மீண்டும் புதிதாக வரத் தொடங்கியுள்ளன. 1957ம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்தக் காரை கடந்த வருடம் உக்ரைனில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றுக்காக வித்தியாசமாகப் 'பெயின்ற்' செய்திருக்கிறார்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

க. அட்ஷயன்

27 12 2002




கவிற்சாவாரத்தில் உள்ள செங்காளனில் வசிக்கும் கமலச்சந்திரன்-ஜெயசெளரி தம்பதிகளின் செல்லப் புதல்வன் அட்ஷயன் தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கை அப்பப்பா, கனடா அம்மம்மா, சுவிஸ் சித்தப்பா, சித்தி, கனடா பெரிய மாமா, பெரிய அத்தை, மைத்துனர்மார், மைத்துனி, சின்ன மாமா, சின்ன அத்தை, கனடா அம்மம்மா, கனடா பெரிய மாமா, பெரிய அத்தை, மைத்துனர்மார், மைத்துனி, கனடா சின்ன மாமா, சின்ன அத்தை, மைத்துனர், மைத்துனி, கனடா பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்கா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் பல கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல்: கு. சந்திரபாலன் அப்பப்பா, இ. சிவாஜுகா கனடா.

## புதிது புதிதாய்...





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜன. 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.